பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 16 வெள்ளிக்கிழமை (01.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 217



09 அரசு தெளிவுபடுத்த வேண்டும்



14 தெரிவுக்குழு மஹிந்தவின் கண்டுபிடிப்பு



25 அதிர்ச்சிதரும் விம்பிள்டன்

# இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் முயற்சியே தெரிவுக்குழு

## ஐ.தே.கட்சி இதனை பகிஷ்கரிக்கும் என்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க



கொழும்பு, ஜூலை 1

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் ஜனாதிபதியின் யோசனையானது ஒட்டு மொத்த இலங்கையரையும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதற்கான முயற்சியாகும்.

அதேசமயம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை ஐக்கிய தேசியக் கட்சியும் பகிஷ்கரிக்கும்.

- இவ்வாறு ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். (27ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வு: ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு பதில் அளிக்க வேண்டியது இந்தியாவே; நாமல்ல

## மாவை சேனாதிராசா சொல்கிறார் இப்படி





கொழும்பு,ஜுலை 1

ஜனாதிபதியின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடையாது; இந்தியாவே பதில் அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டின் தேசியப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோருடனான சந்திப்பின் போது அரசியல் தீர்வு விவகாரம் குறித்து வெளியிட்டிருந்த கருத்துக்கள் தொடர்பில் (04ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வருகின்றனர் பஸில், டிலான்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு கோயில் வீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தை அமைச்சர் திறந்து வைப்பார்.

வேறுபல நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் பங்கேற்க விருக்கிறார்.

அதேவேளை -

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(27ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் விலை உயராது

கொழும்பு, ஜூலை 01

எரிபொருள்களின் விலையைத் தற்போதைக்கு அதிகரிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுக் கூறினார்.

அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளில் தற்போது ஒரு பரல் மசகு எண்ணெய்யின் விலை ஆறு அமெரிக்க டொலரால் குறைந்து காணப்படுகின்றது என்றும் அவர் சொன்னார்.

(27ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் வங்கியின் பொன்விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 1

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழா கொண்டாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் உள்ள வங்கிக் கிளைகளில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பிரதான வைபவம் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் உள்ள வங்கியின் பிராந்தியத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

பொன்விழாக்கொண்டாட்டத்தைச் சிறப்பிக்கும் வகையில் இன்று அலரி மாளிகையில் நடைபெறும் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 5 ரூபா

(27ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று எவரும் இல்லாததாலேயே தெரிவுக்குழு

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக அரசு எந்தக் கட்சியையும் ஏற்காததாலேயே அரசியல் தீர்வைத் தயாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கின்றது என்று அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பான நடவடிக்

(27ஆம் பக்கம் பார்க்க)



நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

# சபையில் சக உறுப்பினர் பரஞ்சோதியை தண்ணீர் போத்தலால் தாக்கிய றெமீடியஸ்

## சண்டித்தனத்துடன் தகாத வார்த்தைகளும் தாராளம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

எதிர்க்கட்சி உறுப்பினர் மு.றெமீடியஸின் அடாவடித் தனமான செயற்பாடுகளுடன் நேற்று ஆரம்பமாகி முடிவடைந்தது யாழ். மாநகர சபையின் 6 ஆவது பொதுக்கூட்டம்.

காலையில் கூட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களில் தனது சக உறுப்பினரான எஸ்.பரஞ்சோதியைத் தகாதவார்த்தைகளால் சபையில் வைத்துத் திட்டித் தீர்த்த றெமீடியஸ் கோபம் தலைக்கேற சக உறுப்பினர்கள் முன்னிலையில் பரஞ்சோதி மீது தண்ணீர் போத்தலை வீசித்தாக்கினார்.

இந்த எதிர்பாராத தாக்குதலி

(03 ஆம் பக்கம் பார்க்க)

# ரவி கருணாநாயக்க எம்.பியை விசாரிக்க பொலிஸார் முயற்சி

## தடுத்து நிறுத்துமாறு சபாநாயகருக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 01

இந்த நாட்டில் இடம்பெறும் போதைப்பொருள் விநியோகம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் வகையில் பொலிஸார் விசாரணை செய்ய முயற்சிக்கின்றனர். இதனைத் தடுத்து நிறுத்துங்கள்.

ஐ.தே.க. பதில் தலைவர் கரு ஜயசூரிய சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு வேண்டுகோள்

(03 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜனின்

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி

யாழ்.மாவட்ட தலைமைச் செயலகமும்

ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்க அலுவலகமும் திறப்பு விழா

03.07.2011 ஞாயிற்றுக்கிழமை 2.30 மணி

இடம் : கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (#80 Temple Road, Jaffna)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மழைக்கான 30 வீத சாத்தியமும் ஏனைய மாவட்டங்களில் தெளிவான வானிலையும் காணப்படும்.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆனி 30, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6825.94↑
மிலங்கா(MPI) 6301.02↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.8Bn
பங்குகளின் அளவு(No.) 72.01Mn
வியாபாரம்(No.) 17600
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கொமர்ஸல் டிவலொப்மன்ர் 127.00
கெப்பிட்டல் டெவலப்பென்ர் 358.90
ஈஸ்ரேன் மேக்கன்ர் 1200.00
பெல்வத்தே சுகர் 35.10
ஒன்னலி 84.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கறிஸ்சந்திரா 1900.10
எஸ் எம் பி லீசிங் 0.40
மேகன்ரைல் ஸிப்பிங் 210.00
யூனியன் கெமிகல் 710.00
கொழும்பு இன்வெஸ்ர்மென்ர் 355.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# எமது கடலில் தமிழக மீனவரின் 'றோலர்கள்' ஆனால் நாமோ அவற்றைப் பயன்படுத்தத் தடை

## தொடர்ந்து பொறுமை காக்க மாட்டோம் என்கின்றனர் குருநகர் மீனவர்கள்

வண்ணை, ஜூலை 1

பாலைதீவு கடல் பிரதேசத்துக்கு வருகை தரும் நூற்றுக் கணக்கான தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகள் எங்களின் மீன் வளங்களை அள்ளிச் செல்கின்றன.

இதனை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நாம் 'றோலர்' தொழிலில் ஈடுபடவுள்ளோம்.

- இவ்வாறு தெரிவிக்கின்றனர் குருநகர் கடற்றொழிலாளர்கள்.

கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை குருநகரில் இருந்து தடையையும் மீறி றோலர் தொழிலுக்குச் சென்றுவந்த மீனவர்கள், நேற்றுவரை மூன்று தடவைகள் தொழிலுக்குச் சென்று திரும்பியுள்ளதாகத் தெரிவித்தனர்.

ஒன்று விட்ட ஒருநாளே இழுவைப் படகுகள் தொழிலுக்குச் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் வெள்ளிக்கிழமையும் தமது இழுவைப் படகுகள் ஆழ்கடலுக்குச் செல்ல இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

அவர்கள் மேலும் கூறுகையில்:

தடை செய்யப்பட்ட 23 வகையான தொழில்களில் ஆக 'றோலர்' ஒன்றே கடந்த ஆறு மாதங்களாக பொறுமை காத்துவந்தது. ஏனைய தொழில்கள் அநேகமானவை திருட்டுத்தனமாக நடைபெறுகின்றன.

கடந்த ஆறு மாதங்களாக தடைசெய்திருந்த நூற்றுக் கணக்கான இழுவைப் படகுத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடி இருக்கையில், இதனைத் தடுத்தவர்கள் எந்தவித நிவாரணங்களையும் வழங்கவில்லை. தேர்தல் நெருங்கி வரவுள்ளதால் அவர்களிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கின்றன.

எமது தொழிலாளர்கள் கடந்த ஆறு மாதங்களிலும் சாத்விகப் போராட்டங்கள் மூலம் நிலைமையை நாடறியச் செய்ய முனைந்த தருணங்களில் தொலைபேசி அழைப்புகள் மூலம் எச்சரிக்கை செய்யப்பட்டோம்.

அதனாலேயே இவ்வளவு பின்னடைவு ஏற்பட்டது. எது எப்படியாயினும் அந்நியன் வந்து எமது கடல் வளங்களை சூறையாடிச் செல்கையில் எமது ஜீவாதாரப் போராட்டத்தில் நாம் ஈடுபடுவதை அனுமதிக்க வேண்டுமென்பதே எமது கோரிக்கையாகும் - என்றார். (த-160)

## இரண்டு கிலோமீற்றர் நீளமான

# மருதங்கேணி - நாகர்கோவில் வீதியில் கண்ணிகள் அகற்றும் பணி பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமராட்சி கிழக்கில், மருதங்கேணி, நாகர்கோயில் வீதி பூரணமாக கண்ணிவெடி அகற்றப்பட்டு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகப் பிரிவின் தலைவர் வ. முருகதாஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் முன்னேடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முற்று முழுதாக நிறைவடைந்துள்ளன. மொத்தமாக 18 ஆயிரத்து 502 சதுர மீற்றர் பிரதேசத்தில் இந்த வீதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி இங்கு கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப்பணியில் 'டெனிஷ்' கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் மட்டும் மேற்கொண்டது. இந்த வருடம் ஜூன்மாதம்6ஆம்திகதியும்கண்ணிகள் அகற்றும் பணிகளை மேற்படி நிறுவனம் நிறைவு செய்தது.

இந்த நடவடிக்கையின் போது 231 மனித எதிர்ப்பு மிதிவெடிகளும், 04 டாங்கி எதிர்ப்பு கண்ணிகளும், 26 வெடிக்காத வெடி பொருள்களும், 541 சிறிய ரகத் துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

# கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் இன்று ஏழாலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 1

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை ஏழாலை உதய சூரியன் சனசமூக நிலையத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. தெற்கு பிரதேச சபைக்குரிய தேர்தல் விஞ்ஞாபனமும் வெளியிடப்படும்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ. சேனாதிராசா, அ. விநாயகமூர்த்தி, க. சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ. சரவணபவன், சி. சிறிதரன் ஆகியோர் உட்பட மேலும் பலர் உரையாற்றவுள்ளனர். (ஐ)

# கூடைப்பந்தாட்டத்தை ஊக்குவிக்க இன்று ஊர்தி ஊர்வலம்

வலி. வடக்கு, ஜூலை 1

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்ட விளையாட்டை அபிவிருத்திச் செய்யும் முகமாக இன்று கூடைப்பந்தாட்டப் பந்தைத் தாங்கிய ஊர்தி ஊர்வலம் ஒன்று இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தில் தகுதி வாய்ந்த வீர வீராங்கனைகள் உள்ளதை ஏனையவர்களை உணரச் செய்யும் வகையில் கூடைப்பந்தாட்டத்துக்கு பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டும் முகமாகவும் இந்த ஊர்தி ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஊர்தி ஊர்வலம் இன்று யாழ். நகரப் பகுதி உட்பட ஏனைய இடங்களுக்கும் செல்லவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தேசிய மட்டத்தில் தகுதி உடைய வீர வீராங்கனைகள் இருப்பதை எடுத்துக் காட்டும் வகையில் இந்த ஊர்வலம் இடம்பெறுகிறது. பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் இடம்பெற்ற 37ஆவது விளையாட்டுப் போட்டியில் முதல் தடவையாக மூன்றாம் இடத்தை பெற்றிருந்தது.

ஆண்கள் மாவட்ட அணியினர் கூட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்திய போட்டியில் தேசிய மட்டத்தில் பலம் மிக்க அணிகளுடன் மோதி சிரேஷ்ட அணியின் 'பி' பிரிவில் மோதி மூன்றாம் இடத்தைப் பெற்று திறமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். (ஐ-86)

# அல் ஹதீஜா முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 01

அல் ஹதிஜா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலின் தலைவர் எஸ்.ஏ.சி.முபீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாநகரசபை உறுப்பினர் பி.அஸ்கர் ரூமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநெச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ், யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாறக், யாழ். வலயக்கல்விப் பணிமனையின் திட்ட அலுவலர் ஏ.சி.ஜெலில் மாஸ்டர், என்.ஈ.டி.ஏ. பணிப்பாளர் எம்.எச்.எம். அமீன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (ற)

# நிகழ்வுகள்

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 01

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் ஓய்வுபெற்ற ரயில்வே பிரதம காப்பாளருமான க.துரைராசா கலந்துகொள்ளவுள்ளார். (ற-78)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 01

சங்கீத வித்துவான் கருணாகரனின் ''சங்கீதானுபவம்'' நூல் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரூபவாஹினி தமிழ்ப்பிரிவு முன்னாள் பணிப்பாளர் எஸ்.வன்னியகுலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை நடன ஆசிரியை செல்வி ஆனந்தி நவரட்ணமும் சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் சங்கீதபூஷணம் எஸ்.குமாரசாமியும் நன்றியுரையை கிராம அலுவலர் வை.ஸ்ரீரங்கநாதனும் நிகழ்த்தவுள்ளனர். நூலின் முதற்பிரதியை டாக்டர் .வி.பாலகிருஷ்ணன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சங்கீதவித்துவான் கருணாகரன் குழுவினரின் இசைக்கச்சேரி இடம்பெறும். (ற-78)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் விடுதிக்கு நிதி சேகரிக்க வடக்கு நோக்கி இன்று நடைபயணம் ஆரம்பமாகிறது

## ரூபா 200 மில்லியனைப் பெற்றுக்கொள்ள அனைத்து சமூகத்திடம் உதவக் கோரிக்கை

வட பகுதியில் புற்று நோய் சிகிச்சைக்கான வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதிவரை பாதை (Trail) நடைபயணம் இடம்பெறவுள்ளது.

தென்பகுதியின் தெய்வேந்திர முனையிலிருந்து வடபகுதியின் பருத்தித்துறை முனைவரை நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் பணம் சேகரிக்கும் நடவடிக்கையாக இந்த நடைப் பயணம் அமையவுள்ளது.

இந்த நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று காலை 7 மணிக்கு ஆரம்பித்து வைக்கிறார்.

கடந்த காலங்களில் புற்றுநோய் சிகிச்சைக்காக வடபகுதியிலுள்ள புற்றுநோயாளர்கள் கொழும்பு மகரகம புற்று நோய் வைத்தியசாலைக்குச் சென்றே சிகிச்சைகளைப் பெற்று வந்தனர்.

அப்போதைய கால கட்டத்தில் அவர்கள் பலவகையான சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தார்கள். 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்காக முதன்முதலாக உள்ளக விடுதி வசதி ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் கதிர்வீச்சுச் சிகிச்சை மூலமான புற்று நோய் சிகிச்சை வசதிகள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தொடங்கப்பட்டன.

இவை புற்று நோயாளர்களின் சிகிச்சைக்காக ஓரளவுக்குப் பங்காற்றி வருகின்றன. எனினும் நவீன வசதிகளுடனான லீனியர் அக்ஸலறேற்றர் (Linear Accelerator) குறுந்தூர கதிர் வீச்சுச் சிகிச்சை (Brachy Therapy) மற்றும் கதிர்வீச்சு அயடீன் சிகிச்சை வசதிகள் இங்கு இல்லாமையினால் இன்றுவரை சில நோயாளர்களை மகரகம புற்று நோய் வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய கட்டாய தேவை உள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில், புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சைகள் இங்கு வளர்ந்தவர்களுக்கான விடுதியிலேயே இடம்பெறுகின்றன.

இந்த நடை பயணத்தின் பிரதான நோக்கமாகப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான விடுதி ஒன்றை யாழ். போதனா வைத்தியசாலையில் அமைப்பதாக இருந்தது. எனினும் அங்கு போதிய இட வசதி இல்லாமையினால் புற்று நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக எட்டு கட்டில்கள் கொண்டதாக அதி கவனிப்புப்பிரிவு (High Dependency Unit) ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதியின் உள்ளேயே அமைக்கப்படவுள்ளது.

இவர்களுக்காகத் தரமான கட்டில்கள் அவர்களின் உடற் தொழிற்பாடுகளை அவதானிப்பதற்கான உபகரணங்கள், இரத்தப்பரிசோதனை உபகரணங்கள், ஒட்சிசன் வழங்கும் வசதிகள் மற்றும் அவர்களுக்கான பொழுதுபோக்கு சாதன வசதிகள் என்பன ஏற்படுத்தப்படவுள்ளன.

**வைத்திய நிபுணர் என். ஜெயக்குமாரன்.**
புற்றுநோய் வைத்திய நிபுணர்,
யாழ் . போதனா வைத்தியசாலை.

இவ்வாறு குழந்தைகளுக்காக இடவசதி அளிக்கப்படுகையில் வளர்ந்தவர்களுக்கான சிகிச்சைக்கான இட நெருக்கடி ஏற்படுவதனால் அதனை ஈடு செய்வதற்காகத் `தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் தற்போது இயங்கிவரும் கதிர் வீச்சுச் கிசிச்சை நிலையத்துக்கு மிக அண்மையாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியே 30 கட்டில்களைக் கொண்ட விடுதி அமைக்கப்பட உள்ளது. இதற்கான நிதியும் இந்த நடைபயணத்தின் மூலமாகவே சேகரிக்கப்படவுள்ளது.

இவற்றைத்தவிர கதிரியக்க அயடீன் சிகிச்சைகான கட்டடத்தொகுதி, குறுந்தூர கதிர் வீச்சுச் சிகிச்சைக்கான கட்டடம் மற்றும் (C.T Simulator) உம் அதற்கான கட்டடமும் அமைத்துத்தர இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. இதற்காக ஏற்கனவே இந்தப் பயண ஏற்பாட்டாளர்களின் அனுசரணையுடன் சுகாதார அமைச்சில் பணிப்பாளராகப் பணியாற்றும் வைத்திய கலாநிதி சுலோஜனா யோகநாதனும், கட்டடக் கலைஞர் மற்றும் உத்தியோகத்தர் ஆகியோர் ஏற்கனவே யாழ். போதனா வைத்தியசாலைக்கும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் விஜயம் மேற்கொண்டு அதற்கான ஏற்பாடுகளை நிறைவேற்றியுள்ளனர்.

இவ்வாறு சிகிச்சைக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் அதேவேளை, கடந்த காலங்களில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நோக்கும் போது 2005ஆம் ஆண்டு மூவாயிரத்து 121 பேரும், 2006 ஆம் ஆண்டு மூவாயிரத்து 151 பேரும், 2007ஆம் ஆண்டு மூவாயிரத்து 11 பேரும், 2008 ஆம் ஆண்டு மூவாயிரத்து 44 பேரும், 2009 ஆம் ஆண்டு மூவாயிரத்து 914 பேரும், 2010 ஆம் ஆண்டு நாலாயிரத்து 414 பேரும் பதிவாகியுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் அண்மையில் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தின் மூலமாக சுமார் 200 மில்லியன் இலங்கை ரூபாவைச் சேகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடைபயணத்தின் இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்ற - நடைமுறைப்படுத்த அனைத்துச் சமூகத்தவர்களையும் இதில் பங்கேற்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இதன்மூலம் இதுவரை காலமாக வடபகுதியினர் அனுபவித்து வந்த துன்பங்களுக்கு ஒரு நல்லெண்ணத்தின் சமிக்ஞையாக இது அமையும் என்று கூறலாம்.

# லசந்த படுகொலைச் சந்தேக நபரை தீர்த்துக்கட்ட பாதுகாப்புத் தரப்பு திட்டம்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலைச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயைக் கொலைசெய்யும் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையில் பிரஸ்தாப சந்தேக நபரான இராணுவச் சிப்பாயைப் படுகொலை செய்து வழக்கைத் தமக்கேற்றவாறு திசைதிருப்பும் திட்டத்தை இராணுவப் பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பான தகவல்களை மறைத்தார் என்ற குற்றச்சாட்டில் தற்போது இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கந்தேகதெர எனும் சிப்பாயொருவர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மிக விரைவில் அவருக்குப் பிணை வழங்கி, இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்பில் அவரை விசாரணைக்குட்படுத்தவும், அதன் பின் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பிருப்பதாக அவர் வாக்குமூலம் அளித்துள்ளவாறான ஆவணமொன்றில் பலவந்தமாகக் கையொப்பம் வாங்கவும் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதனையடுத்து லசந்தவின் படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியை மறைத்து வைத்துள்ள இடத்தைக் காட்டவென சந்தேக நபர் அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் அந்த துப்பாக்கியால் இராணுவத்தினரைச் சுட முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரைப் படுகொலை செய்யும் திட்டமொன்றை இராணுவத் தரப்பினர் தீட்டியுள்ளதாக இரகசிய தகவல் வட்டாரங்கள் மூலம் உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன.

அந்தத் திட்டம் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையிலேயே முன்னெடுக்கப்படுவதாகவும் பிரஸ்தாப தகவல் வட்டாரங்களிலிருந்து மேலும் தெரியவருகின்றது. (த-10)

## சபையில் சக உறுப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் சபையில் இருந்த உறுப்பினர்கள் பலரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சக உறுப்பினரைத் தனது மேசையில் இருந்த தண்ணீர் போத்தலை வீசித் தாக்கிய றெமீடியஸ் தனது ஆசனத்தில் இருந்து எழுந்து முஷ்டியை முறுக்கிக் கொண்டு அவருடன் மோதவும் தயாரானார்.

நேற்று முற்பகல் 10.35 மணிக்கு மாநகரசபைக் கூட்டம் ஆரம்பமாகிய போது முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கூட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக வழங்கிய அனுமதியை அடுத்து றெமீடியஸ் உரை நிகழ்த்த ஆரம்பித்தார்.

சபையின் எதிர்க்கட்சித் தலைவர் றெமீடியஸ் நீதிமன்றுக்குச் செல்லவேண்டியுள்ளதால் கூட்ட ஆரம்பத்தில் அவருக்கு கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது எனக் கூறியே முதல்வர் றெமீடியஸூக்கு அனுமதி வழங்கினார்.

எதிர்க் கட்சித் தலைவர் என்ற ரீதியில் நான் சில கருத்துக்களை வெளியிடவுள்ளேன் எனக் கூறி றெமீடியஸ் தனது உரையை ஆரம்பித்தார்.

அப்போது தனது இருக்கையை விட்டெழுந்த எதிர்கட்சி உறுப்பினர் பரஞ்சோதி யார் எதிர்க்கட்சித் தலைவர் அப்படிச் சொல்ல உமக்கு வெட்கம் இல்லையா? எனக் கேட்டார்.

இவ்வாறு கேட்டது தான் தாமதம் ஆரம்பமாகியது மோதல் ''கீழே இரடா நாயே '' என ஆவேசத்துடன் கூறிய கௌரவ உறுப்பினரான றெமீடியஸ் தனக்கு முன்னால் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து பரஞ்சோதியை நோக்கி வீசி எறிந்தார். சபை உறுப்பினர் பரஞ்சோதி மீது மோதுண்டு நிலத்தில் வீழ்ந்தது அந்தப் போத்தல். பதறிப்போன பரஞ்சோதி அந்தக் கணமே தனது கைத்தொலைபேசி மூலம் யாழ். பொலிஸாருக்கு முறையிட்டார்.

என்னை மாவை சேனாதிராசா அழைத்து மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார் அது உங்களுக்குத் தெரியும் நாடாளுமன்ற உறுப்பினரான சரவணபவனும் தேர்தல் நேரத்தில் அதற்கான அங்கீகாரத்தை தந்திருந்தார். நான் எதிர்க்கட்சித் தலைவரா? இல்லையா? மாவை சேனாதிராசாவிடம் அல்லது சம்பந்தரிடம் கேட்டுப் பாருங்கள் எனப் பரஞ்சோதியின் கேள்விக்குப் பின்னர் பதிலளித்தார் றெமீடியஸ். இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து கூட்டம் இடம்பெற்ற மாநாட்டு மண்டபத்தில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. அங்கு றெமீடியஸ் தொடர்ந்தும் உரை நிகழ்த்தினார். யாழ். மாவட்டத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று தன் மீதும் மாநகர சபை மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகிறது என்றும் அவர் கூறினார்.

அந்தப் பத்திரிகைச் செய்தி மூலம் வன்முறை இடம்பெறவும் வாய்ப்புள்ளது. எனவும் அவர் தெரிவித்தார்.

**அமைதியாக இருந்தார் முதல்வர்**

உரத்த குரலில் சத்தமிட்டுப் பேசிய அவர் முற்பகல் 11 மணியளவில் அங்கிருந்து வெளியேறினார். றெமீடியஸின் அடாவடித்தனத்தை முதல்வர் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

கூட்டம் தொடர்ந்து நடந்தது. மீண்டும் பிற்பகல் 3.45 மணிக்கு சபைக்கு வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார் றெமீடியஸ்.

வந்தவர் உடனடியாக ஒலிவாங்கியைக் கையில் எடுத்துக் கொண்டு கருத்துக் கூறுவதுக்காகத் தனது ஆசனத்திலிருந்து எழுந்தார்.

'காலையில் இடம்பெற்ற சம்பவத்துக்காக எனக்கு வாக்களித்து என்னை சபைக்கு அனுப்பிய 4 ஆயிரம் மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன். ஆனால் சபை உறுப்பினர்கள் யாரிடமும் நான் மன்னிப்புக் கோர மாட்டேன்' - என்றார்.

சபை முதல்வரின் வேண்டுகோள் எதுவோ அதற்குக் கட்டுப்படுவேன் என்றும் அவர் கூறினார்.

இவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கும் போது கருத்துக்கூற முயன்ற மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினரை நோக்கி 'உங்களுக்கு இன்னும் அடி இருக்கிறது' என்று கூறினார் றெமீடியஸ். (த-14)

## ரவி கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ளார். கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த நாட்டில் இடம்பெற்றுவரும் போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பாக சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பின்னர் நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர் மாநாட்டிலும் இதே கருத்தைத் தெரிவித்திருந்தார் எனத் தெரிவித்து இரகசியப் பொலிஸார் அவரை விசாரணை செய்ய முயற்சிக்கின்றனர் எனத் தெரியவருகிறது. இது நாடாளுமன்ற உறுப்பினருக்கு உள்ள அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து தெரிவிக்கும் உரிமையை மீறுவதாகும்.

எனவே, நாடாளுமன்ற கௌரவத்தைப் பாதுகாக்கும் உரிமையுள்ள நீங்கள் இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறும் வகையிலான சகல நடவடிக்கைகளையும் நிறுத்தும்படி பணிப்புரை விடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் - என்றும் அவரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குர்ஆன் கூறும் பொறுமை




பொறுமை குர்ஆனியப் பண்புகளில் ஒன்று. அருள்மறை குர்ஆன் பல இடங்களில் பொறுமையை வலியுறுத்துகிறது. திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது.

அறிவுலகம் தந்த பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி அவர்கள் தன் இஹயா உலு மித்தீன் என்ற தலைசிறந்த ஆக்கத்தில் (அஸ்ஸப்ரு, வஷ்ஷூக்ர்) பொறுமையும் நன்றியும் என்ற பாடத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்மறை குர்ஆனில் எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் 'பொறுமை'யைப் பற்றிக் கூறுகிறான் என்று கூறுகிறார்கள்.

இமாம் அஹ்மது(ரஹ்) அவர்கள் கூறுவதாக பேரறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்)அவர்கள் தனது ''மதாரிஜூஸ்ஸாலிகீன்'' என்ற நூலில் 90 இடங் களுக்கும் நெருக்கமாக திருக்குர் ஆனில் ''பொறுமை'' இடம்பெற்றிருப்பதாகப் பகர்கிறார்.

இமாம் அபூதாலிப் அல் மக்கீ அவர்கள் தனது 'கூத்துல் குலூப்'என்ற நூலில் சில அறிஞர்களின் கருத்தைப் பதிவு செய்துள்ளார்கள். ''பொறுமையை விடச் சிறந்தது வேறென்ன இருக்க முடியும். திருக்குர் ஆனில் அல்லாஹ் பொறுமையை 90 இடங்களுக்கும் மேலாகக் குறிப்பிடுகிறான். ''பொறுமையைத் தவிர வேறு எதனையும் இவ்வளவு அதிகமாக அல்லாஹ் குறிப்பிட்டிருப்பதாக நமக்குத் தெரியவில்லை'' என்கிறார்.

ஆனால் திருக்குர்ஆனில் பொருள் அட்டவணையைக் கவனித்தால் அங்கே சப்ர் என்ற வேர்ச் சொல்லின் அடியில் அமைந்துள்ள வாசகங்கள் நூற்றுக்கும் மேலாக குர்ஆனில் அமைந்துள்ளதைக் காண முடியும்.

அந்த இமாம்கள் குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கையும் திருக்குர்ஆனின் பொருள் அட்டவணையில் நாம் காணும் எண்ணிக்கையும் முரண்படுவதாகத் தோன்றினாலும் அழமாகச் சிந்தித்தால் அதில் முரண்பாடுகள் எதும் இல்லாதிருப்பதை அறியலாம். ஏனென்றால் சப்ர் என்ற வேர்ச் சொல்லின் அடியில் அமையும் வார்த்தைகள் ஒரே இடத்தில் ஒரே வசனத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் இடம்பெற்றிருக்கும். சிலர் அவற்றை ஒன்றாக மட்டும் எண்ணுவர். இன்னும் சிலர் துல்லியமாக அவற்றை கணக்கு வைத்துக் கொள்வர்.

அருள்மறைக் குர்ஆனின் 18 ஆவது அத்தியாயம் அல் கஹ்பு (குகை) வசனம் 67 முதல் பொறுமை பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. இது நபி மூஸா (அலை) அவர்களுக்கும் ஒரு நல்லடியாருக்கும் இடையே நடந்த உரையாடல் மற்றும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது. அங்கே பல தடவை பொறுமை கூறப்பட்டிருந்தாலும் ஒரே இடமாகவே கருத வாய்ப்புண்டு.

**பொறுமை மனிதனின் தனித்தன்மை**

அல்லாஹ்வின் எண்ணரிய படைப்புகளில் அறிவுள்ளதாக ஏவல் விலக்கல்களை ஏற்று நடக்க வேண்டியதாக சோதனைக்குட்பட்டதாக மனித இனம் படைக்கப்பட்டுள்ளது. எனவே பொறுமை மனித இனத்தின் தனித்தன்மையாக ஆகிவிட்டது. பொறுமை என்பதன் பொருளை உள்ளார்ந்த அடிப்படையில் விளக்கிட முனைந்த பேரறிஞர் இமாம் கஸ்ஸாலீ கூறுகின்றார்கள் பொறுமை மனித இனத்துக்கே உரிய சிறப்பு குணம். அதை விலங்குகளிடமோ வானவர்களிடமோ இருந்திட வேண்டும் என எதிர்பார்க்க இயலாது. ஏனெனில் விலங்குகள் குறையுள்ள இனம். வானவர்கள் முழு மையான படைப்புகள்.

இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) தொடர்ந்து கூறுகின்றார்கள் எல்லாம் வல்ல அல்லாஹ் தன் பரந்த பேரருளால் மிருகங்களை விட மனிதனை கண்ணியமாகவே படைத்து மரியாதையாகவே வைத்துள்ளான். அவன் பருவ வயதை அடையும் போது இரண்டு ஆற்றல்களை அவனுக்கு வழங்குகிறான் அல்லாஹ். ஒன்று மாபெரும் உண்மைகளை விளங்கும் ஆற்றல். அல்லாஹ்வையும் அவனின் திருத்தூதரையும் நற்செயல்கள் நல்ல முடிவைத் தரவல்லவை என்பதையும் அந்த ஆற்றல் மூலம் விளங்கிக் கொள்கிறான். விலங்குகளிடம் இவ்வகை ஆற்றல் இல்லை. எனவே தீய செயல்களுக்கு தீய விளைவே கிடைக்கும் என்பதை அறிந்து நேர் வழியில் வெளிச்சத்தில் நடைபோடுகிறான் மனிதன். இன்னொரு ஆற்றல் முதல் ஆற்றலுக்கு வலுசேர்க்கிறது. மனோ இச்சையுடனும் ஷைத்தானின் படையுடனும் மோத வேண்டிய களத்தில் மனிதனுக்கு ஒத்துழைக்கிறது. இதனால் அவன் மனோ இச்சையுடன் மோதி அதனை வீழ்த்தி வெற்றிவாகை சூடுகிறான். இவ்வாறு மிருகங்களிடமிருந்து வேறுபட்டு இச்சைகளை அடக்கி ஆள மனிதனுக்கு உதவுவதை ''மார்க்கத்தின் தூண்டுதல்'' எனவும் அதற்கு எதிரானதற்கு ''இச்சையின் தூண்டுதல்'' எனவும் கூறலாம். இவ்விரண்டு தூண்டுதல்களுக்கும் இடையே மோதல் நடந்து கொண்டே இருக்கும். இதயம் தான் யுத்தகளம்.

இச்சையின் தூண்டுதலுக்கு அல்லாஹ்வின் எதிரிகளான ஷைத்தான்கள் உதவிக் கொண்டிருப்பர்.

மார்க்கத்தின் தூண்டுதலுக்கு அல் லாஹ்வின் படையான வானவர்கள் உதவிக் கொண்டிருப்பர். மனோ இச்சையை அடக்குவதும் அதில் நிலைத்திருப்பதுமே பொறுமை எனப்படும். அப்படி நடந்தவர் அல்லாஹ்வின் படைக்கு உதவியவர் ஆவார். இதில் பலவீனம் அடைந்து மோசம் போனவர் பொறுமை இழந்தவர் ஷைத் தான்களின் அணியில் இணைந்தவராவார். *(நன்றி: யூசுப் அல்-கர்லாவி)*

## அரச அலுவலருக்கு பயிற்சி வகுப்புகள்

உள்ளூராட்சித் தேர்தலில் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலராகக் கடமைபுரிய உள்ளோருக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள உள்ளோருக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-121)

## அரசியல் தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதியின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் அவரது நிலைப்பாடு ஆகியவற்றுக்கு இந்தியா பதிலளிக்க வேண்டுமே தவிர அதற்கான தேவை தமிழ்த்தேசியக் கூட்டமைப் புக்குக் கிடையாது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் ,தமிழர்களால் எதிர்பார்க்கப் படுகின்ற நிரந்தரமான அரசியல்தீர்வு உள்ளிட்ட தமிழர் தரப்பு விடயங்கள் குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு ஏற்கனவே அரசிமும் ஜனாதிபதியிடமும் அறிவிக்கப்பட்டதாயிற்று. இதனை ஊடகங்களும் வெளிப் படுத்தியிருந்தன.

இந்நிலையில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது அல்லது அத்திருத்தத்துக்கும் அப்பால் செல்வது குறித்து இந்தியா தமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பதும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மற்றும் அரசியல் தீர்வு தொடர்பிலான தமது நிலைப்பாடு சம்பந்தமான கூற்றுக்களை அவர் வெளியிட்டிருப்பது குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலட்டிக் கொள்ளவில்லை.

மேலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதன் நோக்கம் குறித்தும் நாம் ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறோம். எனவே ஜனாதிபதியின் மேற்படி கூற்றுக்களுக்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடோ அல்லது அவசியமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடையாது.

இலங்கைத் தமிழர் விவகாரம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டிய விடயங்கள் மற்றும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அணுகுமுறைகள் குறித்து இந்தியா இலங்கைக்கு எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியிருப்பதற்கும் இந்தியாவே பதிலளிக்க வேண்டும்.கூட்டமைப்பு அல்ல-என்றார் மாவை சேனாதிராஜா. (அ-சி)


### உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 621
திகதி 29/06/2011

சுப்பர் இலக்கம்: 23
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 30 39 60 62

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப்பெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 17,800,072.00 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 08 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 257 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 476 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 12836 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 7346 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 185507 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 29753 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,272,640.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 18,164,648.80

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk

### ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 135
திகதி - 29.06.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: F
அதிர்ஷ்ட இலக்கம்: 02
வெற்றி இலக்கம்: 1 5 7 2 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | F | 02 | 1 | 5 | 7 | 2 | 7 | ரூ. 20,541,413.00 | - |
| 1 பரிசு | | 02 | 1 | 5 | 7 | 2 | 7 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | | | 1 | 5 | 7 | 2 | 7 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 5 | 7 | 2 | 7 | ரூ. 10,000.00 | 36 |
| 4 பரிசு | | | | | 7 | 2 | 7 | ரூ. 1,000.00 | 350 |
| 5 பரிசு | | | | | | 2 | 7 | ரூ. 50.00 | 3432 |
| 6 பரிசு | | | | | | | 7 | ரூ. 20.00 | 32893 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 1 | 5 | 7 | 2 | | ரூ. 1,000.00 | 36 |
| 8 பரிசு | | | 1 | 5 | 7 | | | ரூ. 100.00 | 345 |
| 9 பரிசு | | | 1 | 5 | | | | ரூ. 50.00 | 3451 |
| 10 பரிசு | F | | | | | | | ரூ. 20.00 | 13558 |
| 11 பரிசு | F | 02 | | | | | | ரூ. 100.00 | 1587 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,512,370.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ. 5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.20,541,413.00

### யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் பொன்விழாக்காண வாழ்த்துக்கள்

யாழ்.ஜெயப்பூர் நிறுவனம் தனது சேவையில் 24 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடுகின்றது. இந்த நிறுவனம் தனது சேவையால் உயர்ந்து வலுவிழந்தோருக்கு வலுவூட்டிப் பொன்விழாக் காணவேண்டி வாழ்த்துகின்றேன்.
முகாமைத்துவக் குழுவினருக்கும் ஊழியர்களுக்கும் அவர்களது உயர்வான சேவைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பரமசாமி பரமகுமார்,
ஓய்வுபெற்ற 24 வருட தொழில்நுட்ப ஊழியர். (யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம்)

### VACANCIES

Posts & Qualifications.

1. Technical Officer(Road Work): NDT with 3 years experience.
   OR
   NCT with 6 years experience.
2. Quantity Surveyor : B.Sc in Quantity Surveying with 2 Years experience.
   OR
   HND in Quantity Surveying with 5 years experience.
3. Surveyor : B.Sc in Surveying with 2 years experience.
   OR
   Equal Qualifications with 5 years experience.
4. Management Assistant : Graduate or A/L Three passes with 3 years experience.
5. Store Keeper : Store Keeping Course/Book Keeping Course Completed with 2 years experience
   OR
   A/L Three Passes with 5 years experience.
6. Finance Assistant : CIMA Part I or AAT Full qualification with 2 years experience

- Age should be between 30 – 55 years.
- Selection will be done within a week
- Contact Number - 077-2151228
- Interview will be held at the address given below.

Those who are interested please contact over Phone as early as possible.

Project Director.
Provincial Road Construction Project Office,
No.328/12, Mannar Road,
Paddanichoor, Vavuniya.

### பதவி வெற்றிடம்

எமது கணினி நிலையத்தின் கிளிநொச்சி, வவுனியாக் கிளைகளுக்கு முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

Gateway (PVT) Ltd
T.P. 077 6145445 (5340)

### சிறுநீரகம் தேவை

43 வயதுடைய நோயாளர் ஒரு வருக்கு B+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடடினயாகத் தேவை சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0779029707 (சி/1465)

### மலிவு விற்பனை

புதிய மொடல் Sony Wega Flat (மேல்பட்டன்) உட்பட 21''-29'' TV கள் 12000/- முதல் குளிர்சாதனப் பெட்டிகள் அம்பிளிபயர், Box, ரேடியோசெற், Computer என்பன மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0778449829, 0771393670

R.S மகேஸ்வரன் (அப்பலக் கொம்பனி)
ஆரம்பப் பாடசாலை அருகில் (சீனிப்புளியடி)
K.K.S. வீதி, இணுவில். (5332)

### கடை வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0776004454


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அமெரிக்காவின் மூன்றாவது புத்திமதி அரசின் காதில் உறைக்குமா?

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப்போரில், அரச படைகள் தரப்பில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்த நாட்டு அரசாங்கம் உடனடியாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

அந்த நாட்டின் ராஜாங்கத் திணைக்களம் செவ்வாயன்று உத்தியோக பூர்வமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் விசாரணையின் அவசியம் மிக அழுத்தித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்தை உண்டாக்க விரும்புவதால், அது தானாகவே, தன்மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விரைந்து விசாரிக்க வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொள்கிறது-

அவ்வாறு அது செய்யாவிடில் மாற்று வழிகளை கையாளவேண்டும் என்ற அழுத்தம் சர்வதேச மட்டத்தில் அதிகரிக்கும் - என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை, மனிதாபிமான உரிமைகள் மீறல்கள் தொடர்பான இலங்கையின் சுயாதீன விசாரணைகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும்.

உள்நாட்டில் விசாரணைகள் நடத்தப்படாவிட்டால், சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அதனை அமெரிக்கா ஆதரிக்கும் - என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் உத்தியோக பூர்வமாக தனது அறிக்கையில் விவரித்துள்ளது.

ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோறியா நூலான்ட் அம்மையார் அறிக்கைக்கு மேலதிகமாக இலங்கை விடயத்தில் அமெரிக்காவுக்கு இது விடயம் தொடர்பாக உள்ள அக்கறையை மிகவும் விஸ்தாரமாக எடுத்துரைத்துள்ளார்.

சர்வதேச மனிதாபிமான, மனித உரிமைகள் தொடர்பான சட்ட மீறல்களுக்குப் பதில் அளிக்கும் கடப்பாடு, தலையாய பொறுப்பு, உள்நாட்டு அதிகாரிகளுக்கு உண்டு. தனது கடப்பாடுகளை நிறைவேற்ற அரசாங்கம் விரும்பாமலோ அல்லது தட்டிக்கழிக்கவோ முயன்றால் சர்வதேசம் அதில் கவனம் செலுத்தி பொருத்தமான பொறிமுறையைக் கையாள நேரிடும் - என்றும் நூலான்ட் அம்மையார் எச்சரிக்கும் தொனியில் தெரிவித்திருக்கிறார்.

தனக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலையும் விருப்பத்தையும் இலங்கை அரசு துரிதமாக வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், ஏனைய தெரிவுகளை பரிசீலனை செய்ய வேண்டும் என்ற அழுத்தம் சர்வதேச சமூகத்திடமிருந்து வெளிப்படும் - என்றும் விக்ரோறியா அம்மையார் கூறியுள்ளார்.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்படத்தக்கதாக, வெளிநாட்டு சட்ட நிபுணர்களையும் உள்நாட்டு சட்ட நிபுணர்களையும் கொண்ட விசாரணைக் குழுவை இந்த நாட்டு அரசாங்கம் நியமிக்க வேண்டும் -

இல்லையேல் சர்வதேச மட்டத்திலான ஒரு நீதிவிசாரணைக்குழு அமைக்கப்படுவது தவிர்க்கமுடியாதது - என்று அமெரிக்கா எச்சரித்திருப்பது இது முதற்தடவையல்ல... மூன்றாவது முறையாகும்!

அமெரிக்காவின், தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் றொபேட் ஓ பிளேக் இந்த விடயத்தை ஏற்கனவே இரண்டு தடவைகள் இலங்கை அரசுக்குப் புத்திமதி கூறும் பாணியில் தெரிவித்திருந்தார்.

சுமார் இரண்டு அல்லது இரண்டரை மாதங்களுக்கு முன்னதாக நியூயோர்க்கில் வைத்து ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றின் போது முதலாவது முறையாகவும் -

கடந்த மேமாதம் முதல் வாரத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் மற்றும் அரச உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்தபோது இரண்டாவது முறையாகவும் -

இலங்கையில் தேசிய நல்லெண்ணத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் கைகாட்டும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உகந்த பொறிமுறையல்ல;

போர்க்குற்ற விசாரணைகளையும் விசாரிக்கக் கூடியதாக வெளிநாட்டு நிபுணர்களையும் உள்நாட்டு நிபுணர்களையும் கொண்ட சுயதீனமான விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் - பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

இல்லையேல், சர்வதே நாடுகள் ஒன்றிணைந்து சுதந்திரமான உகந்த பொறிமுறையை - விசாரணைக்குழுவை - நியமிக்கும் நிலைமை உருவா கும் என்று எச்சரிக்கும் தொனியில் பதிவுசெய்து விட்டுச் சென்றார்.

பிரிட்டனின் சனல் - 4 காணொளிகள் குறித்து விசாரணை நடத்த இலங்கை அரசு முன்வந்திருப்பது குறித்து பொதுநலவாய நாடுகள் வரவேற்றிருக்கும் நிலையில் -

அமெரிக்காவின் மூன்றாவது வற்புறுத்தல், (ஒரு வகை எச்சரிக்கை என்றும் சொல்லலாம்) வந்திருக்கிறது.

சர்வதேச மட்டத்திலான விசாரணைப் பொறிமுறை ஒன்றை நிறுவுவதைத் தடுக்கும் முகமாக, தவிர்ப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளை முடுக்கி விட்டுள்ளது எமது நாட்டு அரசு.

அதனை உறுதி செய்யும் பணியின் ஓர் அங்கமாக நாட்டின் தலைவர் கடந்த (ஜூன்) மாதம் பதினெட்டாம் திகதி ரஷ்யாவில் நடைபெற்ற உலக வர்த்தக மாநாட்டில் ரஷ்ய மற்றும் சீனத் தலைவர்களைச் சந்தித்து வந்தார். அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் தயவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கும் நிலையைக் குறைக்கவேண்டும்; தவிர்க்க வேண்டும் என்ற புதிய வியூகம் குறித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் இந்தப் புதிய வியூகம், போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விவகாரத்தில் சர்வதேச விசாரணையைத் தடுப்பதற்குப் போதிய பலம் கொண்டதா? இப்போது சிக்குண்டுள்ள பொறியில் [illegible] படுவதற்கு உடனடியாக அல்லது விரைந்து வழி அமைக்குமா? என்பது சந்தேகமே.

# நயினை நாகபூஷணி ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 1

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை இரவு தெப்போற்சவத்துடன் பெருந்திருவிழா நிறைவடையும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு முத்துச் சப்பரம், 7 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு கைலைக்காட்சி, 9 ஆம் திகதி சனிக்கிழமை பகல் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் என்பன இடம்பெறும்.

10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் சிவபூசை கைலைக்காட்சி, இரவு திருமஞ்சம், 11 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் விஷேட கருட சர்ப்ப பூசை, வாயுபட்சணி நாகம் வீதியுலா, 13 ஆம் திகதி புதன்கிழமை பகல் கைலைக்காட்சி, இரவு சப்பரம், 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர் காலை 9.30 மணிக்கு,15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தம் என்பன இடம்பெற்று இரவு திருவூஞ்சல், கொடியிறக்கம் இடம்பெறும். 16 ஆம் திகதி சனிக்கிழமை இரவு தெப் போற்சவம் இடம்பெறும்.

யாத்திரிகர்களின் நலன் கருதி வழமை போன்று அனைத்துச் ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன.

(ம-26-7)

# மூவின மக்களுக்கும் வீடுகள் ‘மக்கள் வங்கி கிராமம்’ மடுவில்

## வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மூவின மக்களுக்கும் வழங்க ஐம்பது வீடுகளைக் கொண்ட மக்கள் வங்கிக் கிராமம் ஒன்று மடுப்பகுதியில் உருவாக்கப்பட்டு வருகிறது.

வங்கியின் 50ஆவது பொன்விழாவை முன்னிட்டே இந்த வீடுகள் வங்கி உத்தியோகத்தர்களின் நிதிப் பங்களிப்புடன் நிர்மாணிக்கப் பட்டுவருகிறது.

இவ்வாறு தெரிவித்தார் வங்கியின் யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் .

அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொன்விழாவை முன்னிட்டு ஜூலை மாதம் முழுவதும் வங்கி பல்வேறு செயல் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்ட பிராந்திய முகாமையாளர் இந்த விடயங்கள் குறித்து மேலும் தெரிவித்ததாவது.

வங்கியின் யாழ். பிராந்தியத் தலைமையக உத்தியோகத்தர்கள் யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்ய வுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் உதவியுடன் இலவச மருத்துவப் பரிசோதனைகள், ஆலோசனைகள், விளக்கங்கள் கிராமங்கள் தோறும் வழங்கப்படவுள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலை புற்று நோயாளர் விடுதி சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியில் அழகுபடுத்தப்படுகிறது.

வலி. வடக்குப் பகுதியில் சகல வசதிகளும் கொண்ட முன்பள்ளி ஒன்று சுமார் 7 லட்சம் ரூபாவில் அமைக்கப்படவுள்ளது.

மக்கள் வங்கியின் கடன் திட்டம் தொடர்பாக கிராம மட்டத்தில் விளக்கமளிக்கப்பட வுள்ளது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் 17 மில்லியன் ரூபா செலவில் புதுப்பிக்கப்படவுள்ளது.

நாடு முழுவதுமுள்ள மக்கள் வங்கி அலுவலகங்கள் ஒன்லைன் சேவையில் முழுமையாக இணைக்கப்படுகிறது.

பொன் விழா தினத்தன்று வங்கியில் கணக்கை ஆரம்பிப்பவர்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

பீப்பிள் லீசிங் நிறுவனம் மருதானையில் மக்கள் வங்கி உத்தியோகத்தர்களுக்கான விடுமுறை இல்லத்தை அமைத்துக் கொடுக்கிறது.

(ம-14)

# ‘ராகிங்’ விவகாரம் தொடர்பான இறுதி விசாரணை ஓகஸ்டில்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் புகுமுக மாணவர்கள் மீது முகிழ்நிலை ஆசிரிய மாணவர்கள் மேற்கொண்ட ‘ராகிங்'' விவகாரம் தொடர்பான இறுதிக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு யாழ்.நீதிமன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் முகிழ்நிலை ஆசிரியர்கள் புகுமுக மாணவர்கள் மீது புரிந்த ‘ராகிங்’ விவகாரத்தில் கல்லூரியின் 15 முகிழ்நிலை ஆசிரியர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இந்த முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான 3 கட்ட விசாரணைகள் யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் நடைபெற்றன.

4 ஆம் கட்ட விசாரணையை நேற்று மேற்கொண்ட நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நேற்று நீதிமன்றில் சம்பந்தப்பட்ட முகிழ்நிலை ஆசிரியர்களும், கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் இருவரும் சமுகமளித்திருந்தனர். (ம-9)

# அறநெறிப் பாடசாலைகளை ஊக்குவிப்போம்

தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவிய காலத்தில் அறத்தை வலியுறுத்த வேண்டிய தேவை எழுந்தது. சங்க காலப் போர் சார்ந்த வாழ்வியலின் சிதைவு அறத்தை வலியுறுத்துவதன் அவசியத்தை ஆதரித்தது. இத்தகைய பகைப்புலம் தற்காலத்தில் எம்மண்ணிலும் எதிர்நோக்கப்படுகிறது. இதன் அவசியத்தை உணர்ந்து ஆங்காங்கே ஊர்ப்பெரியவர்களால் அறநெறிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு ஆதரிக்கப் படுகின்றன.

ஞானக்கதிர்

பெற்றோர் மற்றும் மாணவரின் ஆர்வமின்மை, ஆசிரியர்களுக்கான வேதனத்தில் உள்ள நலிவு, தனியார் கல்வி நிறுவனங்களின் செல்வாக்கு போன்ற காரணிகளால் அறநெறிப் பாடசாலைகள் இன்று தோல்வியைத் தழுவும் நிறுவனங்களோ? என எண்ண வைக்கின்றன. இதே நேரம் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கான அரச ஆதரவும் குறிப்பிட்டுக் காட்டத்தக்க விதத்தில் அமைந்திருக்கவில்லை.

எம்மண்ணில் மனித விழுமியங்கள், சமயப் பழக்கங்கள் என்பன நலிவுற்றுள்ளன. இத்துன்பியல் நிலையில் இருந்து எமது இளஞ்சந்ததியினரை மீட்டெடுப்பதற்குச் சமய வாழ்வைப் போதித்தலே ஏற்ற உபாயமாக அமையும்.

[illegible] வகையில் அறநெறிப் பாடசாலைகளை இயங்கவைப்பது குறித்துச் சம்பந்தப்பட்ட யாவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

*ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பதிவு செய்யப்படாத மருந்துகள் விற்பனைக்குத் தடை

## மருந்தக உரிமையாளர்களுடனான கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
இலங்கையில் பதிவு செய்யப்படாத எந்த மருந்துகளும் மருந்தகங்களில் விற்பனை செய்யக்கூடாது.

இவ்வாறு யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

* அனைத்து மருந்தகங்களிலும் மருந்தாளர் ஒருவர் கடமையில் இருப்பதற்கான ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். அத்துடன் அனைத்து மருந்தகங்களும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தற்போது யாழ். மாவட்டத்தில் மருந்தாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் ஒரு தொகுதி மருந்தாளர்களுக்கு வெளிவாரிப் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

* இலங்கையின் ஒளடதங்கள் மற்றும் வாசனைப் பொருள்களுக்கான சட்டங்களுக்கு அமைவான அட்டவணை I,IIA என்பனவற்றில் அடங்கும் மருந்துகள் மட்டும் வைத்திய அதிகாரிகளின் மருந்துச் சீட்டு இன்றி விற்கப்படலாம். ஏனைய அனைத்து மருந்துகளும் வைத்திய அதிகாரிகளின் மருந்துச் சீட்டுடன் மட்டுமே விற்பனை செய்யப்படலாம்.

* சில மருந்துகள் சந்தையில் பல்வேறு தனியார் நிறுவனங்களாலும் பல்வேறு விலைகளில் சந்தைப்படுத்தப்படுகின்றன. எந்தக் காரணம் கொண்டும் நோயாளிகளுக்கு விலை கூடிய மருந்துகளைத் திணிக்கக் கூடாது. நோயாளிகளுக்கு ஒரே மருந்து பல்வேறு விலைகளிலும் விற்கப்படுவதைத் தெரிவிக்க வேண்டும். நோயாளியே தனது தெரிவுக்கு ஏற்ப கூடிய அல்லது குறைந்த விலையிலுள்ள மருந்தைத் தெரிவு செய்யும் சுதந்திரம் வழங்க வேண்டும்.

* வைத்திய அதிகாரிகள் குறிப்பிட்டு எழுதும் வகை மருந்தே நோயாளிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.

* குளிரூட்டியில் வைத்துப் பேணப்பட வேண்டிய மருந்துகள் உரிய முறையில் பேணப்பட வேண்டும்.

* பாவனைக் கால நிறைவுத் திகதி முடிவடைந்த மருந்துகள் தனியாகக் களஞ்சியப்படுத்தப்பட்டு உரியவரிடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

* தர நிர்ணயத்தில் தகுதியற்றவை என்று அறிவிக்கப்பட்ட மருந்துகள் உடனடியாக விற்பனை செய்வது நிறுத்தப்பட வேண்டும்.

* இலங்கையில் பதிவு செய்யப்படாத எந்த மருந்துகளும் மருந்தகங்களில் விற்கப்படகூடாது.

* மருந்தகங்களில் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க முடியாது. (ம)

# தனியார் போக்குவரத்துச் சபையின் புதிய கட்டண விவரங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தனியார் போக்குவரத்துச் சபையின் புதிய கட்டண விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கு உள்ளே சேவையில் ஈடுபடும் பஸ் கட்டண விவரங்கள் வருமாறு:

யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை (வழி இல -780) 58 ரூபா, யாழ்ப்பாணம்- ஊர்காவற்றுறை (வழி இல - 777) 43 ரூபா, பருத்தித்துறை - அம்பன் (வழி இல- 755) 27 ரூபா, சாவகச்சேரி - சுன்னாகம் (வழி இல-775) 43 ரூபா, யாழ்ப்பாணம்- அரியாலை (வழி இல- 793) 13 ரூபா, யாழ்ப்பாணம் - மானிப்பாய் (வழி இல 771) 25 ரூபா, யாழ்ப்பாணம்- சித்தங்கேணி (வழி இல 789) 27 ரூபா.

யாழ்ப்பாணம் - மாதகல் (வழி இல -787) 36 ரூபா, யாழ்ப்பாணம்- இளவாலை (வழி இல - 788) 30 ரூபா, காரைநகர்- யாழ்ப்பாணம் (வழி இல -785) 44 ரூபா, காரைநகர் - யாழ்ப்பாணம் (வழி இல - 786) 41 ரூபா, காரைநகர் - யாழ்ப்பாணம் (வழி இல -782, 783) 44 ரூபா, காரைநகர் - யாழ்ப்பாணம் (வழி இல - 784) 41 ரூபா, யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் சந்தி (வழி இல -769) 30 ரூபா.

யாழ்ப்பாணம் - அச்சுவேலி (வழி இல- 752/1) 36 ரூபா, யாழ்ப்பாணம் - புன்னாலைக் கட்டுவன் (வழி இல - 764) 22 ரூபா, யாழ்ப்பாணம் -குறிகாட்டுவான் (வழி இல- 776) 61 ரூபா, யாழ்ப்பாணம் - முகமாலை (வழி இல - 769/1) 46 ரூபா, பருத்தித்துறை- முகமாலை (வழி இல - 759) 46 ரூபா.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (வல்வெட்டித் துறையூடாக வழி இல - 751) 58 ரூபா, பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (நெல்லியடி ஊடாக வழி இல 750) 58 ரூபா ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாட்டங்களுக்கான கட்டணமாக யாழ்ப்பாணம்- கிளிநொச்சி (வழி இல- 89) 76 ரூபா, யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு (வழி இல- 85) 151 ரூபா, யாழ்ப்பாணம் - வவுனியா (வழி இல- 87/3) 148 ரூபா, யாழ்ப்பாணம் - மன்னார் (பரந்தன் ஊடாக வழி இல- 813) 174 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

# சிறுவர் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதிப் பங்களிப்பில் சிறுவர், பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் முதல் நாள் நிகழ்வு இன்று யாழ்.பிரதேச செயலக மாகாநாட்டு மண்டபத்திலும் நாளைய நிகழ்வு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்துகொள்வார்.

இன்றைய நிகழ்வில் சுயதொழில் உதவித் திட்டத்துக்கான நிதி உதவி வழங்கல், முன்பள்ளிகளுக்கான விளையாட்டு உபகரணம் வழங்கல், முன்பள்ளிச் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம், தொழிற்சாலை ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டம் என்பன இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், முன்பள்ளிப் பராய அபிவிருத்தி தொடர்பான இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கான பயிற்சிநெறி என்பன இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு சிறுவர்களின் கலை நிகழ்வும் உதவி வழங்கலும் இடம்பெறும்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மீளக்குடியமர்ந்த மாணவர்கள் 75 பேருக்குக் காலணிகளும் பெற்றோர்களை இழந்த சிறுவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிதி உதவியும் வழங்கப்படவுள்ளது. (ம-7)



யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் நேற்று முன்தினம் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வின் ஆசியுரையை குருமுதல்வர் ஆர்.எஸ்.இ.சுதாகர் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் 2010 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை நிகழ்த்தியதைத் தொடர்ந்து நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஐக்கிய இராச்சிய கிளையின் பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி கீதா விஜயதேவா உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். (ம-313)

# உலக வங்கியின் நிதியில் வடக்கில் 9 ஆயிரத்து 799 வீடுகள்

## இதுவரை அமைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 1
உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு, கிழக்கு மீள்நிர்மாண வீடமைப்புத் திட்டத்தில் வடக்கில் இதுவரை 9 ஆயிரத்து 799 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று திட்டத்தின் யாழ்.பிரதித் திட்டப் பணிப்பாளர் ச.சாம்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு மீள்நிர்மாண வீடமைப்புத் திட்டத்தில் வடக்கில் 13 ஆயிரத்து 550 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் இதுவரை 9 ஆயிரத்து 799 வீடுகள் அமைக்கும் பணிகள் நிறைவுபெற்று பயனாளிகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகவுள்ள 3 ஆயிரத்து 551 வீடுகள் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இவற்றில் இதுவரை 90 வீதமான பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இறுதிக் கட்ட வேலைகள் பெரும்பாலும் அடுத்த மாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# யாழ்.நீதிமன்றில் உரிமை கோரப்படாத மோ. சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.நீதிமன்றில் உரிமை கோரப்படாத மூன்று மோட்டார் சைக்கிள்கள் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப்பட்டுள்ளன.

145-8593, WPJU-0759 ஆகிய இலக்கங்களை உடைய மோட்டார் சைக்கிள்களும் இலக்கத் தகடு இல்லாத மற்றொரு மோட்டார் சைக்கிளும் யாழ். பொலிஸாரால் யாழ்.நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆறு மாதத்துக்குள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக்கப்படும் என்றும் நீதிமன்ற பதிவாளர் எஸ். வன்னியசிங்கம் அறிவித்துள்ளார். (ம-9)

# சென்.ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1
சென்.ஜோசப் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்று வரும் மாதாந்த நிகழ்வில் ஜூலை மாதத்துக்கான நிகழ்வுகள் நாளை சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இதன்போது இந்தப் பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களின் கலை, விளையாட்டு, சமூக சேவை சார்ந்த துறைகளில் தம்மை ஈடு படுத்தி அர்ப்பணிப்புடன் சேவை யாற்றிய 13 பேர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதில் கலைத்துறை சார்ந்த 3 பேருக்கு 'வளன்சோலைச் சுடர்' என்னும் பட்டமும் விளையாட்டுத் துறையைச் சேர்ந்த 3 பேருக்கு 'வளன் சோலை மென்வல்லோன்' என்னும் பட்டமும் சமூக சேவை சார்ந்த 7 பேருக்கு 'வளன் சோலை சமூக சிற்பி' என்னும் பட்டமும் வழங்கப்படவுள்ளன.

வித்தியாலய வண.பிதா பொஞ்சின் மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு நிகழ்வாகப் பாஷையூர் கலைஞர்களின் 'அருளானந்தம்' நாட்டுக்கூத்து இடம் பெறும். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய கட்டட வசதிகளின்றி இயங்கும் யாழ்.வளிமண்டலவியல் திணைக்களம்

## உபகரணங்கள் கொழும்பில் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு உரிய கட்டட வசதிகள் இன்மையால் அந்தத் திணைக்களத்துக்கென ஒரு வருடத்துக்கு முன்னரே கொள்வனவு செய்யப்பட்ட நவீன உபகரணங்கள் கொழும்பில் தேங்கியுள்ளன.

அவற்றை இங்கு எடுத்து வந்து பொருத்துவதற்கான முன்னேற்பாடாக இங்குள்ள திணைக்களத்துக்குப் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் இந்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கென 11 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது என்று யாழ்.வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி வி.புஸ்பநாதன் தெரிவித்தார்.

காலநிலை மாற்றங்களை சிறப்பான முறையில் இனங்கண்டு கொள்வதற்காக எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீண்டகாலமாக இங்குள்ள திணைக்களத்துக்கு நவீன உபகரணங்கள் கிடைக்கப்பெறவில்லை. பழைமை வாய்ந்த சில அடிப்படை உபகரணங்களை மட்டுமே வைத்துக் கொண்டு அதன் மூலமாகவே இங்கு காலநிலை மாற்றங்களைக் கணிப்பிட்டு வருகின்றோம்.

இங்கு தற்போது வெப்பமானி, நிலக்கீழ் வெப்பமானி, மழைமானி, காற்று வேகமானி, காற்றுத் திசைகாட்டி, ஆவியாதல் கிண்ணம், பாரமானி ஆகிய உபகரணங்களே உள்ளன. இவற்றின் மூலமே காலநிலை மாற்றங்களை இயன்றளவு கணிப்பிட்டு வருகின்றோம்.

எனவே, இவற்றுடன் நவீனரக உபகரணங்களையும் பயன்படுத்துவதன் மூலம் மிகச் சரியான முறையில் காலநிலை மாற்றங்களைக் கணிப்பிட முடியும். இவற்றைப் பெற்றுத் தரும் படி கொழும்பிலுள்ள தலைமையகத்துக்குப் பல முறை அறிவித்திருந்தோம். அதன்படி ஒரு வருடத்துக்கு முன்னரே அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன.

யாழ்.வளிமண்டலவியல் திணைக்களத்துக்கென உரிய கட்டட வசதி இல்லை. புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படும் பட்சத்தில்தான் நவீன உபகரணங்களை இங்கு எடுத்து வந்து பொருத்தக்கூடிய நிலைமை ஏற்படும். தற்போது கட்டட நிர்மாணத்துக்கென அனர்த்த முகாமைத்துவ அமைச்சு யாழ்.வளிமண்டலத் திணைக்களத்துக்கு எட்டு மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. யாழ். மாவட்டச் செயலகமும் இதற்கென 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த 11 மில்லி யன் ரூபா நிதியைக் கொண்டு இந்த மாதமளவில் கட்டட நிர்மாண வேலைகள் முன்னெ டுக்கப்படவுள்ளன.

வெகுவிரைவில் இந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு நவீன இயந்திரங்கள் கொண்டு வந்து பொருத்தப்படும். அதன் பின்னர் மிகச் சிறப்பான முறையில் எதிர்காலத்தில் காலநிலை மாற்றங்களை அவதானிக்க முடியும்.

இதுதவிர, கொள்வனவு செய்யப்பட்ட நவீன இயந்திரங்களைக் கையாள்வதற்கென இருபத்தொரு பேருக்கு அது தொடர்பான பயிற்சிகள் கொழும்பில் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களில் சிலர் யாழ். வளிமண்டலவியல் திணைக்களத்துக்கும் நியமிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் தானியங்கு திறன் கொண்டவை. இதன் மூலம் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தரவுகளை உடனுக்குடன் பதிவு செய்து தகவல் அனுப்பும் திறன் கொண்டதாக அவை செயற்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## மக்கள் வங்கியின் பொன்விழா நிகழ்வு சாவகச்சேரியிலும்

தென்மராட்சி, ஜூலை 1
மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 8 மணி தொடக்கம் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் இடம்பெறவுள்ளன.

கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த பலர் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஆயிரம் ரூபா பண வவுச்சர் வைக்கப்பட்ட பலூன்களும் பறக்க விடப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது.(ம-207)

## பருத்தித்துறை நகர சபைக்கு ரூ. 42 மில்லியனில் புதிய கட்டடம்

பருத்தித்துறை, ஜூலை 1
பருத்தித்துறை நகர சபைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக 42.3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கையால் நகர சபையின் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

கடந்த பல வருடங்களாகப் பருத்தித்துறை நகரசபை அலுவலகம் மாறி மாறிப் பல இடங்களில் தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வந்துள்ளது.

தற்போது இந்த அலுவலகம் பருத்தித்துறை ஆத்தியடியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது. புதிய கட்டடம் பருத்தித்துறை கடற்கரை வீதியில் முன்பு அலுவலகம் இருந்த காணியிலேயே அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-190)

## மண்டைதீவுக்கு மின்சாரம், குடிதண்ணீர் காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1
மண்டைதீவுக்கான மின்சாரம், குடிதண்ணீர் விநியோகச் சேவைகள் விரைவில் கிடைக்கும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாக்குறுதி வழங்கியும் இதுவரை கிடைக்கவில்லை என அங்கு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடிதண்ணீர் விநியோகத் திட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

ஆனால், அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவு நான்காம் வட்டாரம்வரை குழாய்கள் போடப்பட்டுள்ளன என்றும் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பாலைக் கடல் பகுதியில் குழாய்கள் போடும் பணியும் மண்டைதீவு சேச் பகுதியில் இருந்து முதலாம் வட்டாரம் வரை சுமார் 2½ கிலோ மீற்றர் தூரத்துக்கு குழாய் போடும் வேலைகள் இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

மின்விநியோகத்துக்கான இணைப்புக்களும் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுத்து வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடாமல் பார்த்துக் கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (எ-7)



கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. விருந்தினர்கள் அடிக்கல் நடுவதற்கான கற்களை எடுத்து வருகின்றனர். (ம-38)

## மீசாலை வீரசிங்கம் ம.வியில் நவோதயா வாரம் அனுஷ்டிப்பு

தென்மராட்சி, ஜூலை 1
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் நவோதயாப் பாடசாலையான மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இன்று தொடக்கம் ஒரு வாரத்துக்கு நவோதயா வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு வித்தியாலய பதில் அதிபர் திருமதி வா.சந்திரதேவன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

ஆரம்ப நாளான இன்று நவோதயா வாரத்தின் நோக்கம் பற்றி வித்தியாலயப் பகுதித் தலைவர் ஆசிரியர் த.தபேந்திரனின் உரையும் இரண்டாம் மூன்றாம் நாள்கள் பாடசாலையில் சிரமதானமும் இடம்பெறவுள்ளன.

நான்காம் நாள் சுற்றாடல் விழிப்புணர்வுக் கருத்தரங்கை ஆசிரியை திருமதி வே.பரஞ்சோதி நிகழ்த்துவார். ஐந்தாம் நாள் சுகாதாரமும் போசாக்கும் என்னும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கை மீசாலைப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் ரி.தளிர்ராஜ் நிகழ்த்துவார்.

6 ஆம் நாள் கணித, விஞ்ஞான, தகவல் தொழில் நுட்பம் பற்றி ஆசிரிய ஆலோசகர் ந.பாக்கியநாதனின் உரையும் கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்பம் கண்காட்சியும் இடம்பெறும்.

7ஆம் நாள் காலை இலக்கிய நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம்பெறும். இதில் தென்மராட்சிக் கல்வி வலய சங்கீதப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஈழநேசன் விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-207)

## மதுபோதையில் இடையூறு செய்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
மதுபோதையில் நின்று வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த திருநெல்வேலி வாசிக்கு யாழ். நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி வீதியில் மதுபோதையில் நின்று பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த மேற்படி நபரைக் கைது செய்த கோப்பாய் பொலிஸார் யாழ்.நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ம-9)

## வடமராட்சி வலயக் கல்வி அலுவலக அபிவிருத்திக்கு ரூ.22 மில்லியன்

பருத்தித்துறை, ஜூலை 1
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்குக் கட்டடம் அமைப்பதற்கு 22.2 மில்லி யன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது வலயக் கல்வி அலுவலகம் இயங்கும் பருத் தித்துறை ஓராங்கட்டைச் சந்திக்கு அண்மையிலுள்ள காணியில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் காணி வடமராட்சிக் கல்வி வலயத்தில் சேவையாற்றும் கல்வி சார், கல்விசாரா ஊழியர்களின் நிதிப் பங்களிப்புடன் பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-190)

## திருட்டு மின்சாரம் பெற்ற மூவருக்கு ரூ. 30 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம்,ஜூலை 1
கரவெட்டிப் பகுதியில் நெல்லியடிப் பொலிஸாரும் மின்சார சபை அதிகாரிகளும் இணைந்து நடத்திய திடீர் சோதனையில் திருட்டு மின்சாரம் பெற்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் திடீர் நடவடிக்கையில் சிக்கிய மூவரும் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான், மூவருக்கும் தலா பத்தாயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். அத்துடன் இலங்கை மின்சார சபைக்கு நஷ்ட ஈடாக 5 ஆயிரத்து 265 ரூபா வீதம் செலுத்துமாறும் உத்தரவிட்டார். (ம-319-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். முஸ்லிம்களின் மீளக்குடியமர்வு

# கவனயீர்ப்பு பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடிவு

## றவூப் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பான கவனயீர்ப்பு பிரேரணை ஒன்றை அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வின்போது முன்வைக்கவுள்ளதாக நீதி அமைச்சர் றவூப் ஹக்கீம் தெரிவித்தார். யாழ்.,கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனப் பிரதி நிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

யாழ்.முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பாக விசேட சட்ட மூலம் ஒன்றையும் நாடாளுமன்றில் முன்வைக்க முடியும் எனவும் அமைச்சர் இதன்போது உறுதியளித் தார்.

யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு கடந்த 22 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. அதன் போது சம்மேளனப் பிரதிநிதிகள் யாழ்., கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு விடயம் தொடர்பாகப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். இந்தக் கோரிக்கைகளுக்கு செவி மடுத்துவிட்டுப் பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் றவூப் ஹக்கீம் மேற்படி உறுதி மொழிகளை வழங்கினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீளக்குடியமர்வு அமைச்சின் கீழ் செயற்படும் மாவட்டக் குழுவில் யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

சம்மேளனப் பிரதிநிதிகள், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்மிடம் முன்வைத்த கோரிக்கைகள் யாவும் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம். ஜனாதிபதியுடனான சந்திப்புக்கும் ஏற்பாடுகள் செய்யவுள்ளோம் - என்றார். (எ-14)



யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் நடத்தப் பட்ட பீடங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடை யிலான துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற பாதுகாப்புத் திணைக்கள அணியின் தலைவரிடம் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வெற்றிக் கேடயம் வழங்குகிறார்.

# போதனா வைத்தியசாலையில் தவறிய அடையாள அட்டைகள்

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆறு பேரின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

சிவகுருநாதன் சிவனேஸ்வரி- பொன்னாவளை, களபூமி, காரைநகர் (78792 4255V), சிவசுப்பிரமணியம் ஜொயாழினி- யு.எம்.யு. வீதி, கல்பிட்டி (855900726V), மாட்டீன் ஜெயராஜா நிர்மலா- யஸ்தஸ் வீதி, புதுவளவு, சுன்னாகம் (019178), பனிப்பாஸ் நிர்மலா- மானிப்பாய் (61691 3786V), கணபதி பாலசங்கர்- குடத்தனை (691213226V), பொன்னையா சேதுப் பிள்ளை- வரணி (326924172V) ஆகி யோரின் அடையாள அட்டை களே கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி யாழ் . போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-313)

# கள் விற்றோருக்கு ரூ. 14 ஆயிரம் அபராதம்

சட்டவிரோத 'கள்' விற்பனையில் ஈடுபட்ட 8 பேருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 14 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தது. யாழ்.மதுவரித் திணைக்கள பொறுப் பதிகாரி என்.கிருபாகரன் தலைமையில் புங்குடுதீவு, வேலணை, அல்லைப் பிட்டி பகுதிகளுக்குச் சென்ற குழுவினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது மேற்படி 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் 8 பேரும் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதி வான் திருமதி ஜோய்மகிழ் மகாதேவா, 14 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம-9)

# அனுமதியின்றி இறைச்சி வெட்டியவர்கள் கைது

தென்மராட்சி, ஜூலை 1

கொடிகாமம் மயானப் பகுதியில் அனுமதியின்றி மாட்டிறைச்சி வெட்டிய போது இருவர் அந்தப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கொடிகாமத்தில் இடம்பெற்றது.

மயானப் பகுதியில் இறந்த மாட்டின் எச்சங்கள் காணப்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் அங்கு நின்றவர்களிடம் விசாரித்து இராமாவில் நலன்புரி நிலையத்தில் நடைபெற்ற திருமண வீடொன்றில் வைத்து இறைச்சியைக் கைப்பற்றினார். அத்துடன் பொலிஸார் இருவரைக் கைது செய்தனர். (ம-207)

# விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நெல்லியடியில் கடந்த சனிக்கிழமை நிகழ்ந்த மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பயனளிக்காது செவ்வாய்க் கிழமை இரவு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் வைமன் வீதி, நல்லூரைச் சேர்ந்த இராசரத்தினம் இராமச்சந்திரன் (வயது- 70) என்பவரே மரணமானார். இவர் இளைப்பாறிய எழுதுவினைஞர் ஆவார்.

இவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்ற இளைஞனின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் கொண்டு இளவாலைப் பொலிஸார் அவரைக் கைது செய்து, யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-15)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
02.07.1928

மறைவு:
01.06.2011

அமரர்
**நாகையா நடராஜா**
(ஓய்வுபெற்ற
வங்கி உத்தியோகத்தர் , IOB)

*கண்ணின் இமையாக காலமெல்லாம்
எம்மைக் காத்த குடும்ப விளக்கே - வாழ்வில்
வசந்தம் எம் வாசல் தேடி வந்தவேளை
காலதேவன் கட்டளையால் - காற்றிலே
கரைந்தாலும் எம் மூச்சிலே என்றுமே உயிர் வாழ்வீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

டாக்டர் நாகநாதன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம். (48,19,50)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டவன் மடியில்:
31.10.1934

ஆண்டவன் அடியில்:
29.06.2003

*திதி: ஆனி அமாவாசை
(01.07.2011)*

**அமரர் குமாரவேலு அருளம்பலம்**

*எமது குடும்பத்தை நல்வழிப்படுத்தி
எமக்கு நற்கல்வி ஊட்டி சீருடனும்
சிறப்புடனும் வாழவைத்த
எம் தெய்வத்தை வணங்குகின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(48,25,19)

'மனோன்மணி வாசா'
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19.11.1934
மறைவு: 01.07.2006

*வாழ்வு அது அர்த்தமுள்ளது - அந்த
வாழ்வுக்கு இலக்கணமாகியவர்
எங்கள் தாத்தா
வாழும் போதே
நடைபிணமாகுவோர்
வையகத்தில் உண்டு -ஆனால்
இறந்தும் வாழ்பவர்
எங்கள் தாத்தா
கல்வி எங்கள் தாத்தாவின்
அழகு சாதனம்
பொறுமை அவரின் வம்சாவழி
கல்வி எனும் அழகு சாதனத்தை
மணக்க வைத்த தாத்தாவுக்கு
எங்கள் சுவாசம்
காணிக்கையாகிறது*

**அமரர் முருகன் கிருஷ்ணன்**
(ஓய்வு பெற்ற அதிபர், காரை ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்)

பாலாவோடை,
களபூமி, காரைநகர். (48,25,19)

கோபி மற்றும் பேரப்பிள்ளைகள்,
மனைவி, மக்கள், மருமக்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
18.03.1917

மறைவு
11.07.2010

கடந்த 11.07.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கு

**திருமதி பூலோகராஜா திரவியம்**

அவர்களின் ஓராண்டு நினைவுகள் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. (5329)

சிவனேசராஜா (ராஜா),
விஸ்ணுதாசன் (ரகு).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சனல் 4’ விவகாரம் தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்

கொழும்பு,ஜூலை1

‘சனல் 4’ விவகாரம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை நேரடியாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

‘சனல் 4’ வீடியோ தொடர்பாக அரசு பெரிதாக கதைகளைக் கூறி வருகின்றது.

அது பொய்யான விடியோ காட்சி எனவும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அரசு தெரிவிக்கின்றது.

எனினும் ‘சனல் 4’ ஒளிபரப்பு செய்த தொகுப்பின் மூலம் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகளை செய்வதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்பதாக பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

இதற்கமைய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளமையே இதன் மூலம் புலப்படுகிறது.



அரசு குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்கிறது என்பதே அதன் மூலம் புலனாகின்றது. அரசு நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு நேரடியாக அறிவிக்க வேண்டும்- என்றார்.

# போராட்டத்தின் கோரிக்கையை ஜனாதிபதி புரிந்துகொள்ளவில்லை

## விரிவுரையாளர் ஒன்றியம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை1

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உண்மையான கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்ளவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

200,000 ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு கோரிக்கை விடுக்கவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

சம்பளக் கட்டமைப்பு குறித்த அண்மைய கோரிக்கைகளில் 200,000 ரூபா சம்பள உயர்வு கோரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும், 200,000 ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக உயர் கல்வி அமைச்சு இணங்கியிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

உச்சபட்சமாக 158000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இது சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான சம்பள உயர்வு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்ளாமலேயே ஜனாதிபதி கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# இன ஒடுக்குமுறையில் அரசு ஈடுபடவில்லை

## அமைச்சர் ரோஹித போகொல்லாகம



கொழும்பு,ஜூலை1

அரசு இனஒடுக்குமுறையில் ஈடுபட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,


புலிகளுக்கு எதிரான அரசின் யுத்தம், சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் யுத்தத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

ஐ.நா அறிக்கை மற்றும் ‘சனல் -4’ ஊடக ஆவணப்படம் போன்றவற்றின் அடிப்படை யில் அரசின் பயங்கரவாதத்திற்கு எதிரான முனைப்புக்கள் இழிவுபடுத்தப்படக்கூடாது.

எந்தவொரு சந்தர்ப்பத்தி லும் சட்டவிரோத படுகொலைகளை அரசு கொள்கையாகப் பின்பற்றவில்லை.

தெற்கில் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்ட போதிலும் அரசு சட்டவிரோத படுகொலைகளை மேற்கொள்ளவில்லை. புலிகளின் கப்பல்களை அழிப்பதற்கு, நிதி கட்டமைப்பை வலுவிழக்கச் செய்வதற்கு, ஆயுத கொள்வனவுகளை தடுப்பதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். வன்னி மக்களை அழிக்க திட்டமிட்டிருந்தால் இறுதிக் கட்ட யுத்தம் வரையில் அரசு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பி வைத்திருக்காது - என்றார். (ச)



பொது நலவாய விளையாட்டு சம்மேளனத்தின் அதிகாரிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்தித்தனர்.

# ஏழு சேவை ஒப்பந்தங்களால் தபால் திணைக்களத்துக்கு நஷ்டம்

கொழும்பு, ஜூலை1

தபால் திணைக்களம் உள்நாட்டில் அரச மற்றும் தனியார் துறையினருடன் செய்துகொண்ட ஏழு சேவை ஒப்பந்தங்கள் மூலம் வருடாந்தம் 50 கோடி ரூபா நட்டத்தை சந்திப்பதாக திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இந்த ஏழு ஒப்பந்தங்களில் நான்கு ஒப்பந்தங்களுக்கு சட்டமா அதிபரின் அல்லது அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்படவில்லை எனவும் தெரிய வருகிறது.

இந்த ஒப்பந்தங்களில் அவை முடிவுறும் திகதிகள் குறிப்பிடப்படாமல் இருப்பதால் அவை நிரந்தர ஒப்பந்தங்களாக அமுலில் உள்ளன என்றும் இந்த விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

நாடெங்குமுள்ள தபாலகங்களுடன் ஒன்றிணைந்த வலைப்பின்னல் மூலம் தபால்சேவையைக் கிரமமாக நடத்துவதற்காகவே இந்த ஒப்பந்தங்கள் தபால் திணைக்களத்தால் உருவாக்கப்பட்டன. எனினும், அந்த ஒப்பந்தங்களின்படி தபால் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.

அஞ்சல் திணைக்களத்துக்கு இத்தகைய நட்டத்தை ஏற்படுத்தும் இந்த ஒப்பந்தங்கள் பற்றி தொழிற்சங்கங்கள் தபால் தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடு செய்துள்ளன. அதை யடுத்து அமைச்சாலும், செயலாளராலும் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதியரசர் நிஹால் சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட குழு மேற்கொண்ட விசாரணைகளின்போதே இந்த நட்டம் அம்பலமாகியுள்ளது. (ச-5)

# கருகிய நெற்கதிர்களை தீயிட்ட விவசாயிகள்

கொழும்பு,ஜூலை1

மினிப்பே நீர்ப்பாசனத்திட்ட அதிகாரிகள் சுமார் ஒன்றரை மாதங்களாக வயல்களுக்கு நீர் வழங்கத் தவறியதால் விசனமடைந்த விவசாயிகள் அறுவடைக்குத் தயாரான நிலையிலிருந்து காய்ந்து சருகாகிப் போன நெல்வயல்களைத் தீயிட்டுக் கொளுத்தி தமது கண்டனத்தை தெரிவித்த சம்பவம் மாத்தளை வாஸ்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹந்துன்கமுவ, 3 ஆம் வாய்க்கால், 5 ஆம் வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் பலுபிட்டிய பிரதேசத்திலுள்ள சுமார் 1,500 ஏக்கர் வயல்களுக்கு நீர்பாய்ச்சப்படுகின்றது.

எனினும், ஒன்றரை மாத காலமாக முற்றாக நீர்ப்பாசனம் இல்லாதபடியால் அறு வடைக்குத் தயாராக இருந்த நெற்கதிர்கள் கருகிப் போயின.

ஒரு மாதத்துக்கு முன்பு விவசாயிகள் தங்களது அவலநிலை குறித்து மினிப்பே நீர்ப்பாசன அதிகாரிகளிடம் கூட்டாகச் சென்று தெரிவித்த போதும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என விவசாயிகள் சங்கத்தலைவர் ஏ.எம். சந்திரசோம தெரிவித்தார். (ச-5)

# விடைத்தாள் திருத்தும் பணியிலிருந்து ஆசிரியர் சேவை சங்கம் விலகுகிறது

கொழும்பு,ஜூலை1

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பிரச்சினை தொடர்பில் தீர்மானம் அறிவிக்கப்படும் வரையில் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் இருந்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் விலகிக் கொள்ளவுள்ளது என சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் இருந்து விலகிக்கொண்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயங்கள் தொடர்பில் அரசு மௌனம் சாதிப்பது மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் துணையின்றி விடைத்தாள் திருத்தும் பணியின் தரத்துக்கு உத்தரவாதம் அளிக்கமுடியாது எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-5)

# மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு நவீன கருவி

கொழும்பு,ஜூலை1

இலங்கை மீனவர்கள் ஏனைய நாடுகளின் கடல் எல்லைக்குள் நுழைவதை தடுப்பதற்கு புதிய தொழிநுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது என கடற்தொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மோதரவெல்ல மீன்பிடித் துறையின் மீனவ சமூக சேவைகள் மத்திய நிலையம் மற்றும் மீன் விற்பனை நிலையத்தையும் திறந்துவைக்கும் நிகழ்வின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடற்தொழிலுக்குச் செல்பவர்களுக்கு சட்லைட் தொழில் நுட்பத்துடன் கூடிய ஜீ.பி.எஸ். உபகரணமொன்றை வழங்கவுள்ளதாகவும் அனர்த்தம் ஏற்படும்போது இந்த உபகரணத்தின் மூலம் கடற்தொழில் மத்திய நிலையத்திற்கு சமிஞ்சைகளை வழங்க முடியுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 6 பாடசாலைகள் மீள ஆரம்பம்

## கல்வி அதிகாரி தகவல்

முல்லைத்தீவு, ஜூலை 1

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 21 பாடசாலைகளில் 6 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி ஜி. எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தற்போது மீளக்குடியமர்த்தப்பட்ட மேற்படி பகுதிகளில் அதாவது விசுவமடு மகா வித்தியாலயம், நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், மன்னா கண்டல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தேராவில் தமிழ் வித்தியாலயம் போன்ற ஐந்து பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் சுதந்திரபுரம் அ.த.க. பாடசாலை கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இருட்டுமடு அ.த.க. பாடசாலை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இயங்கி வரும் ஐந்து மேற்படி பாடசாலைகளில் சுமார் 2 ஆயிரத்து 112 மாணவர்கள் கல்வி கற்று வருவதாகவும் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் சேவையாற்றி வேறு இடங்களில் தற்காலிக இணைப்புக்களைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு சேவைக்கு திரும்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட 21 பாடசாலைகள் கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## கணினிப் பயிற்சி ஆரம்பம்



கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் ஆண்டு 6 முதல் உயர்தரம் வரை கற்கும் மாணவர்களுக்கான கணினி கற்கை நெறியை மகாதேவா ஆச்சிரம சைவச்சிறார் இல்லத் தலைவரும் வடமாகாண பிரதி பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் ஆரம்பித்து வைத்தார்.

(எ-302)

## வீதியில் பரிதவிக்கும் பயணிகள்

கோவிலாக்கண்டி தொடக்கம் பூநகரி வரையான மன்னார் ஏ-32 வீதி பலத்த சேதங்களுடன் காணப்படுவதால் இதில் பயணம் செய்வோர் அதிக சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் பிரயாணத்தின் போது தூசியும் கிளம்புகின்றது. இதனால் அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நோயாளர்கள் எனப் பலரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வாகனச் சாரதிகளும் மிகுந்த சிரமத்துடனேயே வாகனங்களை ஓட்டிச் செல்கின்றனர்.

மேலும் மோசமான வீதி காரணமாக இந்தக் குறுகிய தூரத்தைக் கடப்பதற்கு அதிக நேரம் எடுப்பதாகவும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். பலகோடி ரூபா செலவில் சங்குப்பிட்டிப் பாலத்தைப் புனரமைத்தவர்கள் வீதிகளில் கவனம் செலுத்தாமல் இருப்பது மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(க-420)

## ஊற்றுப்புலத்தில் பனைசார் பயிற்சிகள்

வவுனியா, ஜூலை 1

கிளிநொச்சி, ஊற்றுப்புலம் பகுதியில் பனை சார் கைப் பணிப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

கிளிநொச்சி கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் பனை அபிவிருத்திச் சபையினால் பனை சார் கைப் பணிப் பொருள்களை உற்பத்தி செய்யும் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. நான்கு மாத காலப் பகுதியை கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் தற்போது பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர்.

இதேவேளை, பூநகரி, கௌதாரி முனைப்பகுதியில் இந்தப் பனை சார் கைப்பணிப்பயிற்சிகளை ஆரம்பிப்பதற்குரிய முன்னேற்பாட்டுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. U.N.H.C.R இன் நிதியுதவியுடன் அடுத்தமாதம் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(க-6)

## சிறுமி மீது துஷ்பிரயோகம்: நபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச் சாட்டில் 52 வயது நபர் ஒருவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

மேற்படி சிறுமி மரவள்ளிக் கிழங்கு வாங்குவதற்கு தோட்டத்துக்குச் சென்ற போது அந்த நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கினை விசாரித்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(எ-6)

### கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த பலருக்கு

## காணி உறுதிப்பத்திரம் இல்லாததால் வீட்டுத்திட்டம் பறிபோகும் நிலை

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சியில் மீளக் குடியமர்வு நடைபெற்ற பல பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு இதுவரைக்கும் வீட்டுத் திட்டங்கள் எதுவும் வழங்கப்படாமையால் பெருந்துன்பங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கிறனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படாமைக்குக் காணி உறுதிப் பத்திரம் இல்லை என்ற காரணம் முன்வைக்கப் படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சிப் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் பலர் நீண்ட காலமாக தமது காணிகளில் வாழ்ந்து வந்த போதும் அவர்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

காணி உறுதிப்பத்திரங்கள் இவ்வாறு மக்களுக்கு இது வரைக்கும் எந்த விதமான வீட்டுத்திட்டங்களும் வழங் கப்படாததால் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய அதிகாரிகளிடம் சென்று கேட்டபோது, அரசின் நிலைப்பாட்டின்படி வீட்டுத்திட்டம் எதுவும் வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்கள் காணி உறுதி இல்லாதால் நீண்ட காலமாக இருந்த காணியை விட்டுப்போக வேண்டிய நிலை கூட வரலாம் என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக வசித்து வந்த காணிகளை விட்டு விட்டு எங்கு போவதுதமக்கு உதவுவதற்கு யாரும் வரமாட்டார்களா என்ற ஏக்கத்துடன் கலங்கி நிற்பதாக மேலும் தெரிவிக்கின்றனர். (எ-426)

## நரசிங்கர் ஆலய பொங்கல்விழா நாளை சனிக்கிழமை

வவுனியா, ஜூலை 1

வவுனியா, பூந்தோட்டம் ஸ்ரீ லக்சுமி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்த பொங்கல்விழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் பெருமளவு பக்தர்கள் பொங்கல் பொங்கி வழிபடும் ஆலயம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

(எ-422)

## கரைச்சி பிரதேச உதவி அரச அதிபர் பணிமனை தற்காலிகமாக வட்டக்கச்சியில் இயங்குகிறது

கிளிநொச்சி, ஜூலை 1

கரைச்சி கிழக்குப் பகுதி வாழ் மக்களின் வசதி கருதி கரைச்சிப் பிரதேச உதவி அரச அதிபர் உப பணிமனை வட்டக்கச்சியில் உள்ள அஞ்சனா முன்பள்ளியில் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிமனையானது முன்னர் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் இயங்கி வந்தது. பின்னர் இடம்பெற்ற யுத்தத்தின்போது கட்டடம் சேதமடைந்திருந்தது.

இதனைத் திருத்தி அமைக்கும்வரை வேறு கட்டடங்களில் மாதந்தோறும் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உப பணிமனை இங்கு இயங்க ஆரம்பிக்கப்பட்டதனால் கிளிநொச்சியில் நீண்ட தூரம் செல்லாமல் இங்கேயே தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் கரைச்சி உதவி அரச அதிபர், திட்டப்பணிப்பாளர், காணி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர்கள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-450)

## மாணவர்களை ஏற்றப் பின்னடிக்கும் கிளிநொச்சி தனியார் பேருந்துகள்

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி தனியார் பேருந்துகள் பாடசாலை நேரத்தில் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லையெனப் பல்வேறு தரப்பினரும் முறைப்பாடு தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் விசுவமடு, கண்டாவளை, வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய பகுதிகளுக்கான அரச பேருந்துச்சேவைகள் சீராக இடம்பெறுவதில்லை. தனியார் பேருந்துகளே இந்தப் பகுதிகளில் சேவையை நடத்தி வருகின்றன. ஆனால் காலை வேளைகளிலும், பிற்பகல் வேளைகளிலும் இந்தப் பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றாது விட்டுச் செல்வதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கண்டாவளைப் பகுதியிலிருந்து வந்த பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 5 மணிவரை பேருந்துகளுக்காகக் காத்திருந்து அதன் பின்னரே வீடுகளுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இதே போன்று கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு பனிக்கன்குளம் பகுதியில் பேருந்துகளால் ஏற்றப்படாத நிலையில் மூன்று மாணவிகள் காலை 9.20 மணிவரை வீதியில் நின்றதைக்காண முடிந்தது.

இதனால் பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்குப் பின்நிற்கின்றனர்.

பின்தங்கிய இந்தப் பிரதேச மாணவர்களின் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உரிய அதிகாரிகளின் தலையாய கடமை என்பதை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி, நேர்மையான தேர்தலை நடத்த அனைத்துத் தரப்பும் ஒத்துழைக்குக

## கிளிநொச்சி கலந்துரையாடலில் அரச அதிபர்



கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தில் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்குத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. 12.30 மணிவரை நடைபெற்ற இந்தத் தேர்தல் கூட்டத்துக்கு தலைமை வகித்த மாவட்ட அரச அதிபர் இந்த மாவட்டத்திலே நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நீதியானதும் நேர்மையானதுமாக நடைபெறுவதற்கு எல்லோருமே ஒத்துழைக்க வேண்டும். தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டங்களில் தேர்தல் சம்பந்தமாக விளக்கமளிக்க வந்திருந்த உயர் மட்டக்குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தக் குழு சார்பாகக் கருத்துத் தெரிவித்த தேர்தல் திணைக்களத்தின் அதிகாரியான ஏ.ஜீ. தர்மதாஸ:

அளவெட்டி சம்பவம் போன்ற சம்பவங்கள் இடம்பெறக்கூடா. இவ்வாறான செயல்களுக்கு இனித் தேர்தல் செயலகம் அனுமதிக்காது - என்றார்.

இதேவேளை, ஆனையிறவு தட்டுவன்கொட்டியைச் சேர்ந்த மக்கள் விசுவமடு, கண்ணகி நகரில் கடந்த 10 வருடங்களாக வசித்து வருவதால் இவர்களுக்கான வாக்களிப்பு நிலையத்தைக் குறித்த கிராமத்தில் அமைக்க ஏற்பாடு செய்ய முடியுமா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகக் கேட்கப்பட்டது.

இதற்கு மாவட்ட அரச அதிபர் ஊடாக எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்று கொழும்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கிராம அலுவலர் ஆளும் கட்சிக்கு ஆதரவு

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சேவையில் உள்ள கிராம அலுவலர் ஒருவர் ஆளும் கட்சிக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார் என்றும் ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் பகுதியில் மக்களை ஆளுந்தரப்புக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று இராணுவத்தினர் வற்புறுத்துவதாகவும் கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பினர், அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனைத் தாங்கள் கவனத்தில் எடுப்பதாகவும் சேவையில் உள்ள அரச ஊழியர் எவரும் தேர்தல் பிரசாரத்துக்கு ஒத்துழைப்பது மற்றும் கட்சிகளுடன் தொடர்புகள்வைத்திருப்பது சட்டவிரோதமானது எனவும் குறிப்பிட்டனர்.

### 'கட் அவுட்' டுகள் உடன் அகற்றப்பட வேண்டும்

இதேவேளை, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அறிவிக்கப்பட்டமை போன்று கட்சிகளின் சின்னங்கள் அடங்கிய பெரிய அளவிலான 'கட் அவுட்'கள் அகற்றப்பட வேண்டும் எனவும் குறிப்பாக யாழ், நல்லூர், திருநெல்வேலியில் காணப்படும் 'கட் அவுட்'கள் அகற்றவும் தாம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகத் தேர்தல் திணைக்கள விசேட குழுவினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஐ.ம.சு. முன்னணி, ஈ.பி.டி.பி.,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐ.தே. கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (ஒ-10-6)

# ரெலோ அமைப்பின் மாநாட்டில் முக்கியமான ஆறு தீர்மானங்கள்

வவுனியா, ஜூலை 1

வவுனியாவில் நடைபெற்ற ரெலோ அமைப்பின்தேசிய மாநாட்டின்போது முக்கிய ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் வவுனியா முத்தையா மண்டபத்தில் ரெலோ அமைப்பின் எட்டாவது தேசிய மாநாடு நடைபெற்றது.

இதன்போது இந்த ஆறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்தத் தீர்மானங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு, சிங்களக் குடியேற்றங்கள், இடம்பெயர்ந்த மக்களின் அவலங்கள், அரசியல் கைதிகளின் அவலநிலை, இனப்பிரச்சினைக்கு மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்கும் அரசின் திட்டம், காணாமற்போனவர்களின் பட்டியலை வெளியிடுதல் போன்ற விடயங்கள் அடங்கியுள்ளன.

இந்த எட்டாவது தேசிய மாநாட்டில் 11 பேரைக் கொண்ட தலைமைக்குழுவும், 21 பேரைக் கொண்டமத்திய குழுவும் அமைக்கப்பட்டன.

ரெலோ கட்சியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அரசியல் பிரிவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ரெலோ அமைப்பை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் இணைந்து கொண்டமை இந்த எட்டாவது தேசிய மாநாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளதாக மாநாட்டில் உரையாற்றிய ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

(க-601)

# மன்னாரில் எண்ணெய் அகழ்வு ஓகஸ்டில்

வவுனியா, ஜூலை 1

மன்னார் கடல் படுக்கையில் மசகு எண்ணெய் எடுப்பதற்கான துளையிடும் பணியை இந்திய நிறுவனமான ''கரின்'' நிறுவனம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும் தோண்டப்படும் எண்ணெய்கிணறுகளில் இருந்து வர்த்தக ரீதியாக பெற்றோல் மற்றும் எரிபொருள்கள் சந்தைக்கு வர 6 ஆண்டுகள் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் கடல் படுக்கையில் எண்ணெய்ப் படிவுகள் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்ட இடம் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 3000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பகுதி இந்திய நிறுவனமான கரின் இந்தியாவின் இலங்கைக் கிளைக்கு வழங்கப்பட்டுள்ளது.இதே போன்று மற்றொரு பகுதி சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. ''எமக்குத் தரப்பட்ட பகுதியில் 3 கிணறுகளுக்காக தளம் துளையிடவுள்ளோம். 4 மாதங்களுக்குப் பின்னரே கடலுக்கு அடியில் எண்ணெய் மற்றும் எரிவாயு என்பன உள்ளனவா என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். எவ்வளவு எரிபொருள் அந்த இடத்தில் இருக்கின்றது என்பதை மதிப்பிட மேலும் இரண்டு ஆண்டுகள் தேவை.

ஏதாவது இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதிலிருந்து வர்த்தக ரீதியான தயாரிப்புக்களைப் பெற குறைந்த பட்சம் 6 ஆண்டுகள் செல்லும்'' என்று கரின் இந்தியா நிறுவனத்தின் புவி விஞ்ஞான பிரிவின் தலைவர் ஸ்ருவேர்ட் ரூலி தெரிவித்தார்.

மன்னார் படுக்கையில் உள்ள மற்றைய 6 பகுதிகளையும் கேள்விகோரல் அடிப்படையில் விற்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்த அகழ்வு முயற்சியில் எண்ணெய் நிச்சயம் கிடைக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், மன்னார் கடல் படுக்கையில் சுமார் 30ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பு ஒரு பில்லியன் பரல்கள் எண்ணெய் கிடைக்கும் என ஆரம்பக்கட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கை தனது எரிபொருள் தேவைக்கு முற்று முழுதாக வெளிநாடுகளையே நம்பியுள்ளது. 2009 ஆம் ஆண்டில் மட்டும் அரசு 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருளுக்காகச் செலவிட்டுள்ளது. (10)

# வெடி பொருள்களை அகற்ற ஆஸ்திரேலியா நிதியுதவி

வவுனியா, ஜூலை 1

ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, ஆனையிறவுப் பகுதியில் டாஷ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வெடிபொருள்கள் அகற்றும் பணிகளை ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான முதலாவது வதிவிடப்பிரதிநிதி தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டுக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆனையிறவுப் பகுதியில் மூன்று லட்சம் சதுர மீற்றர் நிலப்பரப்பில் வெடிபொருள்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதில் தொண்ணூறு வீதமா பகுதிகளில் வெடி பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும் இந்தப் பணிகளுக்கென பதினைந்து பெண்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதில் பதின்மூன்று பெண்கள் வெடிபொருள் அகற்றும் பணியிலும்இருபெண்கள்மருத்துவப் பகுதியிலும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் டாஷ் நிறுவனப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

(க-6)

# வசதிகளற்ற நிலையில் முன்பள்ளி

வவுனியா இராசேந்திரம் குளப்பகுதியில் இயங்கிவரும் தென்னிந்திய திருச்சபை இருபது வருடங்களுக்கும் மேலாகப் பழைமை வாய்ந்தது. இதன் முன் பள்ளி போதிய வசதிகள் இன்றி இயங்கி வருவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா இராசேந்திரம் குளம் பகுதியில் தென்னிந்தியத் திருச் சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த முன் பள்ளியில் 20 இற்கும் மேற்பட்ட சிறார்கள் கல்விகற்று வருகின்றனர். ஆனால் இவர்களுக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் இங்கு இல்லை. குறிப்பாக விளையாட்டு முற்றம், கழிப்பறை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் என்பன இங்கு காணப்படவில்லை.

இதனால் இங்கு கல்வி கற்று வரும் சிறார்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்று இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர. (க-6)

## சாதனை



கிளிநொச்சி முருகானந்த மகாவித்தியாலயத்தின் கூட்டுறவு தினப் போட்டியில் தெரிவாகி மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் பங்குபற்றும் மாணவர்களுடன் ஆசிரியை திருமதி கோமதி ஸ்ரீதரன், அதிபர் தி.வரதன். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சீடி' மற்றும் 'டிவீடி'க்களை ஐஎஸ்ஒ போர்மட் கோப்பாக மாற்றம் செய்வதற்கு

விண்டோஸ் இயங்குதளத்தின் புகழ்பெற்ற படத்தொகுப்பு ஐஎஸ்ஒ போர்மட் ஆகும். இந்த போர்மட்டை உருவாக்க இணையத்தில் இலவச மென்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.

ஆனால் இவையாவும் கணினியுடைய வன்தட்டில் அல்லது ப்ளாஷ் ட்ரைவில் கோப்புகள் இருந்தால் மட்டுமே ஐஎஸ்ஒ கோப்பாக மாற்றியமைக்க முடியும்.

எனினும் இந்த மென்பொருள் மூலம் நேரடியாக வன்தட்டில் இருந்தே ஐஎஸ்ஒ கோப்பாக மாற்றியமைக்க முடியும். இந்த மென் பொருள் வன்தட்டு, ஒளி மற்றும் ஒலிகளை பிரித்தெடுக்கவும், பிரதி செய்யவும் மற்றும் ஐஎஸ்ஒ கோப்பாக மாற்றம் செய்யவும் உதவி செய்கிறது. இந்த மென் பொருள் தற்போது இலவசமாகக் கிடைக்கிறது.



மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி கணினியில் நிறுவவும். இறுதியாக BU&UPTTUXZZ&I-XFXRX என்னும் நுழைவுத்திறப்பை பயன்படுத்தி மென்பொருளை முழுமையாக நிறுவிக் கொள்ளவும். ஜூன் 30 வரை மட்டுமே இந்த மென் பொருளை இலவசமாக பெற முடியும்.

பின் இந்த மென்பொருளை ஒப்பன் செய்து கொள்ளவும். வன்தட்டு ட்ரேயில் ஒலி அல்லது ஒளி வன்தட்டை உள்ளிடவும். பின் BDlot DVD Clone மென்பொருளைப் பயன்படுத்தி மேலே கூறிய அனைத்துச் செயல்களையும் செய்ய முடியும்.

கூடுதலான செய்தி என்னவெனில் நேரிடையாக வன்தட்டிலேயும் மாற்றம் செய்து கோப்புகளைச் சேமிக்க முடியும். இந்த மென்பொருளுடைய சிறப்பம்சமே ஐஎஸ்ஒ போர்மட்டாகக் கோப்புக்களை மாற்றம் செய்வது ஆகும்.

**http://www.bdlot.com/dvd-clone/**

# Google Voice Search: கூகுளின் புதிய வசதி




மிக பிரபலமான கூகுள் நிறுவனம் குறுகிய கால இடைவெளியில் பல புதிய சேவைகளை அறிமுகம் செய்துள்ளது.

நாளாந்தம் பல மாற்றங்களோடு பல சேவைகளை அள்ளி விடும் கூகுள் நிறுவனத்தின் படைப்புக்களில் இருந்து அண்மையில் வெளிவந்த வசதிகளுள் ஒன்று தான் Google Voice Search.

கையடக்க தொலைபேசிகளில் பயன்பட்ட இந்த தேடல் முறை இப்போது கூகுள் குரோமில் நிறுவப்பட்டுள்ளது. நீங்கள் தேடும் வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் நீங்கள் தேடும் விடயங்களை தேடி தருகிறது. தற்போது இந்த வசதி கூகிள் குரோமில் மட்டுமே உள்ளது.

உங்கள் மைக்ரோ போனைத் தயார் செய்து கொண்டு மைக் பட்டன் கிளிக் செய்தால் SPEAK NOW எனத் தோன்றும் போது நீங்கள் தேடும் சொல்லின் வார்த்தையை உச்சரிப்பதன் மூலம் உங்களுக்கான தேடல் ஆரம்பமாகும்.

# கூகுளுக்குப் போட்டியாக ஓர் தேடியந்திரம்

புதிய தேடியந்திரங்களிலேயே ஸ்மார்ட் ஆஸ் தேடியந்திரத்தை மிகவும் சிறந்தது என்று சொல்லலாம்.

கூகுளுக்குப் போட்டியாகத் தோன்றிய எண்ணற்ற தேடியந்திரங்கள் காணாமல் போய்விட்ட நிலையில் புதிதாக முளைத்துள்ள இந்த ஸ்மார்ட் ஆஸ் கூகுளை விட மேம்பட்ட தேடியந்திரம் என்று சொல்வதற்கில்லை. தேடல் உலகை புரட்டிப் போடக்கூடிய புதிய தொழில்நுட்பம் இதன்வசம் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் கூகுளைப் போல விளம்பர நோக்கிலான முடிவுகள் இல்லாமல் தேடல் முடிவுகளை மட்டுமே இணையவாசிகளுக்கு முன் வைப்பதை ஸ்மார்ட் ஆஸ் தனது தனிச்சிறப்பாகக் கருதுகிறது.

கூகுள் தனது பேராசையால் தேடல் முடிவுகளோடு விளம்பர நோக்கிலான முடிவுகளையும் திணித்து அனைவரையும் அதிருப்தியில் ஆழ்த்தியிருப்பதாக கூறும் ஸ்மார்ட் ஆஸ் பலரும் இந்த நிலையில் மாற்றம் தேவை என்று விரும்புவதாகவும் தெரிவிக்கிறது.


அந்த விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் நோக்கத்தோடு ஸ்மார்ட் ஆஸ் உதயமாகியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கூகுளுக்குப் பழகியவர்கள் அதிலிருந்து விலகி வர இந்த வாதம் மட்டுமே போதுமா என்று தெரியவில்லை.

ஆனால் ஸ்மார்ட் ஆஸிடம் இந்த நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது. தேடலுக்கு மட்டும் அல்ல மின்னஞ்சலுக்கும் கூட இணையவாசிகள் தனது சேவையை பயன்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையோடு ஸ்மார்ட் ஆஸ் மின்னஞ்சல் சேவையையும் ஆரம்பித்துள்ளது. பெயருக்குப் பின் 'ஸ்மார்ட் ஆஸ்' என்று முடியும் மின்னஞ்சல் சேவையை யார் விரும்பிப் பயன்படுத்துவார்கள் என்பதும் கேள்விக்குறியானதுதான்.

எனினும் இந்த தேடியந்திரம் சுவாரஸ்யமானதாகவே இருக்கிறது. ஆஸ்க் ஜீவ்ஸ் தேடியந்திரத்துக்கு அடையாளமாக ஜீவ்ஸ் பட்லர் இருந்தது போல இதற்கும் ஒரு புத்திசாலி கழுதை அடையாளமாக இருக்கிறது. அந்த கழுதை அவ்வப்போது உதிர்க்கும் பொன்மொழிகள் பல விடயங்களைக் கற்றுத் தருகின்றது.

அத்துடன் இணையவாசிகளுக்கு என்று போட்டியும் நடத்தப்பட்டுப் பரிசிலும் வழங்கப்படுகிறது. இணையவாசிகள் சமர்பிக்கும் வாசகம் கழுதையின் பொன்மொழியாக இடம்பெறும் வாய்ப்பும் இருக்கிறது.

அதுமட்டும் அல்ல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின்போது நண்பர்களுக்கும் காதலர்களுக்கும் வாழ்த்துச் செய்தி அனுப்புவது போல் இந்த தேடியந்திரத்தில் இணையவாசிகள் தாங்கள் விரும்பும் வாழ்த்துச் செய்தியையும் இடம் பெற வைக்கலாம்.




புதிய அணுகுமுறையோடு இணையத்தில் தேடுங்கள் என்று அழைப்பு விடுக்கும் ஸ்மார்ட் ஆஸ் தன்னிடம் இணைய முகவரிகளைப் பதிவு செய்து கொள்ளவும் வேண்டுகோள் வைக்கிறது. இந்த தேடியந்திரம் தகுதி வாய்ந்தது தானா என்று இணையவாசிகள் இதனைப் பயன்படுத்திப் பார்க்கலாம்.

இணையத்தள முகவரி **http://www.smartass.com/** என்பதாகும்.

# சூரிய சக்தியில் இயங்கும் மடிக்கணினிகள் விரைவில் அறிமுகம்

தற்போதைய சூழலில் மின்சக்தி மற்றும் எரிபொருள் சக்தி என்பவற்றுக்கு பதிலாக இயற்கைச் சக்திகளை பயன்படுத்தி தொழில்நுட்ப சாதனங்களை இயக்குவதற்கான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் இலத்திரனியல் சாதன உற்பத்தியில் பெரும் நிறுவனமான சாம்சுங் நிறுவனம் சூரிய சக்தியின் மூலம் இயங்கும் மடிக்கணினிகள் அடுத்த மாதம் அமெரிக்க சந்தையில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இது NET BOOK NC215S என்ற பெயரில் வெளியிடவுள்ளது. இதன் திரை 10.1 அங்குல அளவுடையது. மேலும் 1எஆ அளவு RAM MEMORY. CßöhÀ ATOM N570 DUAL CORE செயலியை கொண்டது. வன்தட்டின் கொள்ளளவு 250 GB மற்றும் 320 GB ஆகும்.

முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட மின்கலம் மூலம் 14 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகப் பாவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 6 செல் சூரிய சக்தியை சேமிக்கும் மின்கலங்கள் உள்ளன. அத்துடன் USB போர்ட் வெப் காம் மற்றும் போன்ற வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

# இணையத் தளத்திலேயே புகைப்படங்களின் அளவுகளை மாற்றம் செய்வதற்கு

புகைப்படத்தில் தேவையான இடத்தைத்தவிர ஏனைய இடங்களை நீக்கி விடலாம் என்றால் குறைந்தபட்சம் இதற்காக நாம் பெயின்ட் போன்ற மென்பொருள்களைத் தான் தேடிச் செல்வோம்.

ஆனால் இனிமேல் இணையத்தளம் மூலம் எமது புகைப்படங்களின் அளவை அதிகரிக்க, சுருக்க மற்றும் தேவையானவற்றை வெட்டி எடுக்க ஒரு இணையத்தளம் உதவுகிறது.

புகைப்படங்களில் தேவையான பகுதியை குறைந்த நேரத்தில் வெட்டி எடுக்கலாம்.

இதற்கு எந்தவொரு மென் பொருளின் துணையும் தேவையில்லை.

இந்தத் தளத்துக்குச் சென்று Choose file என்ற பொத்தானை கிளிக் செய்து நாம் மாற்ற விரும்பும் புகைப்படத்தை தேர்ந்தெடுத்து Upload என்ற பொத்தானை கிளிக் செய்ய வேண்டும்.


அடுத்து வரும் திரையில் எமக்கு Convert, Split, Crop என்ற மூன்று மெனுக்கள் தெரியவரும்.

இதிலிருந்து மாற்ற விரும்பின் Width மற்றும் Height öPõkzx Convert image என்பதை கிளிக் [illegible] வேண்டும்.

உடனடியாக [illegible] அளவுகளில் படம் மாற்றப்பட்டு தரவிறக்கம் ஆகிவிடும்.

Crop என்பதை கிளிக் செய்து நாம் தரவேற்றிய படத்தில் எந்தப் பகுதி வேண்டுமோ அதை எளிதாகத் தேர்ந்தெடுத்து Crop image என்பதை கிளிக் செய்து மாற்றலாம். எத்தவிதமான பயனாளர் கணக்கும் தேவையில்லை.

**http://imagesplitter.net/**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிபொருள்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை1

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாவற்கொடிச்சேனை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் வெடிபொருள்களும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, ஊரசரி பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இந்தப் பொருள்கள் வவுணதீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, வவுணதீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-21)

## சிங்கள - தமிழ் மாணவர்கள் ஒன்றுகூடல் இங்கிரியாவில் நடந்த நல்லிணக்க நிகழ்வு

இங்கிரியா,ஜூலை1

இங்கிரிய பகுதியிலுள்ள சிங்கள தமிழ்பாடசாலைகள் இரண்டின் மாணவர்களும் ஆசிரியர்களும் அண்மையில் இன ஒற்றுமையையும் சமய உறவுகளையும் வளர்க்கும் வகையிலான ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வையொட்டி இங்கிரிய அதுராகஸ தமிழ் கனிஸ்ட கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் குருகொட சிங்கள கனிஷ்ட கல்லூரிக்கு நல்லெண்ண பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள்.

குருகொட கனிஷ்ட கல்லூரி அதிபர் பிரேமகுமார இந்த நிகழ்ச்சிக்கு முன்னின்று ஏற்பாடு செய்திருந்தார். அது ராகல தமிழ் கனிஷ்ட கல்லூரி மாணவ, மாண வியர் சிங்களக் கல்லூரிக்கு வந்தபொழுது அவர்களை சிங்கள மாணவர்களும் மாணவிகளும் குதூகலமாக வரவேற்று பவனியாக அழைத்துவந்தார்கள்.

இந்த விழாவுக்கு ஹொரண வலய உதவி கல்வி (நிர்வாகம்) பணிப்பாளர் பி.டி.ரஞ்சித் பிரேமசிறி பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார். தமிழ் பிள்ளைகள் அவரை தமிழ் சம்பிரதாய முறைப்படி வரவேற்றார்கள். இரண்டு சமூகப் பிள்ளைக்ளும் கல்லூரி பூசை அறையில் சரஸ்வதி தெய்வத்தை முதலில் வணங்கி விட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். இரு தரப்பினரும் கலைநிகழ்ச்சிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்கள். தமிழ் சிறுமிகள் சிங்கள பிள்ளைகளுக்கு தமிழ் முறைப்படி பொட்டு இட்டு மகிழ்ந்தார்கள்.

கலை நிகழ்ச்சிகளின் பின்னர் இரு சமூகப் பிள்ளைகளும் மதிய போசன விருதில் கலந்து கொண்டனர். சிங்கள-தமிழ் உணவுப் பண்டங்களும் பலகாரங்களும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதன் பின்னர் நடந்த நிகழ்வில் மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒன்றாகக் கலந்து ஆட்டம் பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இரு தரப்பினரும் பிரிந்து விடை பெற்றுக்கொண்ட நிகழ்ச்சி மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது. நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர் பேசும் போது சகல பாடசாலைகளும் இம்மாதிரி நிகழ்வுகளை ஒழங்கு படுத்த வேண்டும். இதன்மூலம் நிலைத்து நிற்கும் அமைதியையும் மீள்நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்றார். கல்வித்துறையைச் சேர்ந்த பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ப)

## கிழக்கு இ.போ.சபைக்கு கணனி வசதிகள்

மூதூர்,ஜூலை1

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் கணினி வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன. கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள இ.போ. சபைக்குச் சொந்தமான சாலைகளில் கணினி வசதியின்மையால் சீராக நிர்வாகத்தை மேற்கொள்வதில் பலவிதமான சிக்கல்கள் நிலவுகின்றன என சாலைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் முறையீடு செய்தனர்.

இதையடுத்தே முதலமைச்சர் கணினி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைஎடுத்துள்ளார்.(ச-21)

## சிகிரியாவில் காட்டுத் தீ

கொழும்பு, ஜூலை1

சீகிரியா, திகம்பத்தென்ன பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பரவிய தீயினால் சுமார் 30 ஏக்கர் வனப்பிரதேசம் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது.

தம்புள்ளை நகரசபை தீயணைப்பு பிரிவினர், சீகிரிய பொலிஸார் மற்றும் கிராமவாசிகளின் உதவியுடன் வன பாதுகாப்புத்துறை அதிகாரிகளால் தீ அணைக்கப்பட்டது எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தீ எவ்வாறு ஏற்பட்டது என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்தத் தீயினால் எவருக்கும் காயம் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், பெறுமதியான 500 தாவரங்கள் அழிந்துபோய்விட்டன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச)

### புனரமைக்கப்படுமா?...



சாய்ந்தமருது பிரதேசத்தின் தோணா வீதி புனரமைக்கப்படாமையால் மக்கள் சிரமத்தின் மத்தியில் பயணிக்கின்றனர்.

## இரத்தினபுரியில் பாடசாலை வான் கட்டணம் உயர்வு

இரத்தினபுரி, ஜூலை1

இரத்தினபுரி நகரில் பாடசாலை மாணவர்களை ஏற்றிசெல்லும் வான்களின் கட்டணங்கள் 20 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளன எனப் பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

அகில இலங்கை மாவட்ட ரீதியிலான பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்க அங்கத்தவர்களான இரத்தினபுரி மாவட்ட வான் சாரதிகள், 10 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது என கடிதம் மூலம் பெற்றோருக்கு அறிவித்துள்ளனர்.

எனினும், 2008 தொடக்கம் தாங்கள் கட்டணத்தை அதிகரிக்கவில்லை என சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நாளாந்தம் 400 தனியார் பஸ்களும், வான்களும் பாடசாலை சேவையில் ஈடுபடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்விப் பணிப்பாளர் மீது தாக்குதல்: ஆசிரியர்கள், மாணவர்கள் பகிஷ்கரிப்பு

திருகோணமலை, ஜூலை1

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கிண்ணியா வலயத்திலுள்ள 58 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் நேற்றுமுன்தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் மீது தாக்குதல் நடத்திய இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ஏனைய சந்தேக நபர்களையும் கைதுசெய்யுமாறு கோரியே இவர்கள் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாசிம் திருகோணமலையில் நடைபெற்ற கல்விச் செயலமர்வில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் இனந்தெரியாதோரால் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தாக்கப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளான இவர் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஹாசிம் மீது மேற்கொண்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் தனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஏ.பி. கமால்தீன் இது குறித்து விடுத்துள்ள அறிக்கையில் -

வலயக் கல்விப் பணிப்பாளர் ஹாசிம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை எமது சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஹாசிம் ஒரு சிறந்த கல்வி அதிகாரி. இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் தரத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தொடர்பாக நீதி விசாரணைகள் நடத்தப்படவேண்டும். அத் தோடு, குற்றவாளிகள் உடனடியாகக் கைது செய்யப்படவும் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## புதையல் தோண்டியோர் பொலிஸாரால் கைது

திருகோணமலை,ஜூலை1

திருகோணமலை, கோமரன் கடவல பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 8பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இத்துடன் அவர்களிடமிருந்து திருவுருவச் சிலையொன்று உட்பட பூசைப் பொருள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கோமரன்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்கம பிரதேச வீட்டுத் தோட்ட மொன்றில் கிணறு தோண்டுவது போல் இந்தப் புதையல் தோண்டும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறது என பொலிஸாருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு விரைந்த பொலிஸாரால் இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் கோமரன்கட வல பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளை அடுத்து அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப் படுத்த நடவடிக்கை எடுக்கப் படுமென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டெங்கு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த ஐவருக்கு அபராதம்

நுவரெலியா,ஜூலை1

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மஸ்கெலியா பிரதேசத்தில் அதிகாரிகளால் நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின் போது டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த ஐவர் கைதுசெய்யப் பட்டு ஹற்றன் நீதிவான் சந்துன் விதாண முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐவரையும் தலா பத்தாயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நபர்கள் தமது சுற்றுச் சூழலை துப்புரவு செய்வதற்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கி கடிதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு செய்யாவிடின் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் மஸ்கெலியா பொதுச்சுகாதார அதிகாரி பி.ஏ.பாஸ்கரன் தெரிவித்தார்.

(ச)

## தாதியின் ஸ்கூட்டரைத் திருடிய நோயாளி வசமாக மாட்டினார்

தியத்தலாவை,ஜூலை1

வைத்தியசாலையில் நீண்ட நாள்களாக தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் அங்கு கடமையாற்றும் தாதியொருவரின் ஸ்கூட்டரைத் திருடி வசமாக மாட்டிக் கொண்ட சம்பவம் பதுளை வைத்தியசாலையில் இடம்பெற்றுது.

வைத்தியசாலை வீதிக் கடமையில் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் தலைக் கவசமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இந்தச் சந்தேக நபரை நிறுத்தி விசாரணை நடத்தியபோது அவர் தவறான தகவலை வழங்கி வசமாக மாட்டிக்கொண்டார்.

இந்த நபரைக் கைது செய்த பொலிஸார் அவரை விளக்கமறியலில் வைத்துள்ளனர். பதுளை தலைமையக பொலிஸ் அதிகாரி பண்டார ரத்நாயக்க உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்.
01 ஜுலை 2011 வெள்ளி

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
புதிய முயற்சிகளில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். வியாபாரிகள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். கடன் பிரச்சினை ஒன்றை மாற்றி அமைக்க முற்படு வீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்ப தற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்களால் சந்தோஷம் உண்டு.

**இடபம்:**
நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முடியாமல் அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சிலரின் நிர்பந்தங்களுககு ஆள்படலாம். சக ஊழியர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். தெரியாமல் வாயைக் கொடுத்து, சில விடயங்களில் வம்பில் மாட்டலாம்.

**மிதுனம்:**
உங்களின் யோசனைகளுக்கு நண்பர்கள் ஆதரவு தெரிவிக்கலாம். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். மூத்த சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்ட உறவினரை சந்தித்துப் பேசுவீர்கள். குடும்ப விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். சின்ன,சின்ன ஆசைகள் நிறைவேறும்.

**கடகம்:**
உங்களிடம் இருந்த பணத்தை மற்றொருவருக்கு கொடுத்து விட்டு, நீங்கள் பிரச்சினைகளுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்களிடம் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். உறவினர்களின் விமர்சனங்களைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் சில தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**சிங்கம்:**
ஆசைகள், எண்ணங்கள் நிறைவேறும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். தொழில் ரீதியாக வரவேண்டிய கடன் மிகுதிகள் வரலாம். பெற்றோர் செயற்பாடுகளால், உதவியால் பெருமை அடைவீர்கள். நேரத்தோடு செய்யும் வேலை ஒன்றை இன்று தாமதமாகச் செய்வீர்கள். பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். வளம் பெருகும் நாள்.

**கன்னி:**
கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். மாமன், மைத்துனர் விவகாரங்களில் தலையிட நேரிடலாம். உங்களின் திறமையை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பல நாள்களாக பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேரலாம். அவசர வேலைகளால் அலைக்கழிப்பு நேரும்.

**துலாம்:**
மதிப்பு, மரியாதைக்கு பாதிப்பு வரலாம். உறவினர் ஒருவரை திடீரெனச் சந்திக்கலாம். மறைமுக எதிர்ப்பு, போட்டிகளைச் சந்திக்கலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். மற்றவர்களிடம் ஏமாறாமல் இருக்க எச்சரிக்கை அவசியம்.
முடிந்ததாக நினைத்த பிரச்சினை ஒன்று, மீண்டும் தலை தூக்கலாம்.

**விருச்சிகம்:**
இழப்புகள், தண்டச் செலவுகளை தவிர்க்க எச்சரிக்கை அவசியம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். சில வேலைகளில் ஆர்வமாக இறங்கிவிட்டு, பின்னர் இடைநடுவில் விட்டு விடலாம். தடை, தாமதங்களால் எரிச்சல், கோபம் அடையலாம்.

**தனுசு:**
சுபச்செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். கணிசமான பணவரவுகளைப் பெறலாம்.

**மகரம்:**
நண்பர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். உடன் பிறப்புக்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். தொழில் அபிவிருத்திக்காக சிலரிடம் கேட்ட கடனுதவி கிடைக்கும். சில விடயங்களில் ஒருவரிடம் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:**
சில விடயங்களில் சரியான முடிவு எடுக்க முடியாமல் குழப்பத்தில் தவிக்கலாம். பெண்கள் வழி யில் பெருமைப்படும் வகையிலான உதவிகள் கிடைக்கும். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றை கேட்கலாம். வயிறு உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். மறதியைத் தவிர்க்க வேண்டிய நாள்.

**மீனம்:**
பல நாள்களாக வராத கடன் மிகுதி ஒன்று வரலாம். எதிர்காலம் பற்றிய கவலைகள் ஆள்கொள்ளலாம். தொலைபேசி, வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். வாகனப் பயணங்கள் மகிழ்ச்சி, சந்தோஷம் தருவதாக அமையும். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளும். நோய் உபாதைகளால் உற்சாகம், தெம்பு குறையலாம்.

# தெரிவுக்குழு மஹிந்தவின் வீணான புதிய கண்டுபிடிப்பு

**கடந்த மாதம் 26ஆம் திகதி சண்டே லீடர் தீட்டியிருந்த தலையங்கத்தின் தமிழ் வடிவம் இது.**

சிலரை சில நேரங்களில் முட்டாள்களாக்கலாம். சில நேரங்களில் அனைவரையும் முட்டாள்களாக்கலாம். எல்லோரையும் எப்போதும் முட்டாளாக்க முடியுமா? ஏபிரகாம் லிங்கன் கூறிய இவ் வார்த்தைகளில் ஜனாதிபதி ராஜபக்ஷ எதனை நம்புவார்?

தமிழ் மக்களதும், ஏனைய சிறுபான்மையினரதும் குறைகளைத் தீர்க்க இறுதியாக முன்மொழியப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு (PSC) லிங்கனது வார்த்தைகளில் மூன்றாவது பிரிவுக்குள்ளேயே அதிகமான மக்களுக்குத் தெரிகிறது.

1992 ஆம் ஆண்டு மங்கள முனசிங்க தெரிவுக் குழு விவரமாகப் பிரச்சினைகளை ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கை அரசியல் தலைவர்களிடையே ஒருமைப்பாடு காணமுடியாமையால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ராஜபக்ஷவினாலேயே நியமிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள் பிரதிநிதிகள் குழு (APRC)அறிக்கையும் இக்குழுவினது வல்லுநர் குழு அறிக்கையும் தற்போது தூசு பிடிக்கிறது. ராஜபக்ஷவின் அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமை தாங்கிய இக்குழு 18 மாதங்களாக 64 அமர்வுகளை நடத்தி இந்த அறிக்கையை வெளியிட்டது. 65 வருடங்களாகத் தீர்க்கப்படாதிருக்கும் இப்பிரச்சினையைத் தீர்க்க மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க முன்மொழிந்துள்ளார். இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு, தெரிவுக்கு முன்பே இறந்துபோய்விட்டது. பெரும்பான்மைத் தமிழ் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இம்முறை முன்மொழிவை ஏற்க மறுத்து விட்டது. இது ஒரு பரிகசிக்கத்தக்க விடயம். முழுமையாக இதனை நிராகரிக்கிறோம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்ற மாட்டோம். இது எமக்கு நம்பிக்கை கிடையாது என கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அனைத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினதும் விசேட நிபுணர் குழுவினதும் அறிக்கைகளை அமுல்படுத்தாத அரசு இக்குழு ஊடாக பெறும் எவ்வாறு அமுல்படுத்தும் எனக் கேள்வி எழுப்பினார். APRC விசேடநிபுணர் குழுவிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றாவிடினும் அவற்றின் முன்மொழிவுகளைக் கவனத்தில் எடுக்கத் தயாராகவுள்ளதாகக் கூறுகிறார். ஆனால் அரசோ அவற்றைக் கவனத்தில் எடுக்கவில்லை.

அரசின் APC தெரிவு சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான ''தந்திரமான'' நடவடிக்கையென யு.என்.யின் யோகராஜன் விவரித்துள்ளார். இவர் APRC யின் முன்மொழிவுகளை ஆதரித்தது மாத்திரமல்லாது ஜாதிக ஹெல உறுமயவும் (JHC) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் (SLMC) ஏற்றுக் கொண்டதாகக் கூறினார்.


ஒரேயொரு ஈ.பி.டி.பி பிரதிநிதியும் அரச அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மட்டும் இந்த PSC முன்மொழிவுக்கு வெளிப்படையாக ஆதரவு வழங்கியுள்ளார். பி.எஸ்.சி செயற்படுவதற்கு முன்பதாகவே முக்கிய கட்சிகளான யு.என்.பியும், தமிழர் தேசியக் கூட்டமைப்பும் நிராகரித்துவிட்டன. தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பான எந்தவித தீர்வையும் வைக்காது புத்திசாலித்தனமாக ஏமாற்றுவது இந்தத் தீர்மானத்தை முன்வைப்பதன் மூலம் தொடர்வதாகத் தெரிகிறது.

ராஜபக்ஷவினது முதலாவது ஆட்சிக்காலத்தில் தேசிய பிரச்சினைகளில் எந்தவிதமான திடமான நடவடிக்கைகளையும் எடுக்காமை புரிந்துகொள்ளக் கூடியதும் தான். ஏனெனில் அப்போது இவர் சாதாரண பெரும்பான்மையைக் கூடப் பெற்றிருக்கவில்லை. ஆனால் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் செயற்படாமை மன்னிக்க முடியாததாகும். ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தல்களில் தெளிவான வெற்றியும், இரண்டு வருடங்களுக்கு முன்பதாக எல்.ரி.ரீ.ஈயை இராணுவ ரீதியாகத் தோற்கடித்தமையும் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்த அனைத்து தடைகளையும் இல்லாமல் செய்துவிட்டது. எதிர்க்கட்சி யு:என்.பி பலமிழந்துவிட்டது. மஹிந்த ராஜபக்ஷ இந்த நிலையில் தன்னை அனைத்து இனத்தவர்களினதும் தலைவராக நிலைநிறுத்தவும், சிறுபான்மையினரின் பிரச்சினைகளை எடுத்துரைக்கவும் நல்ல வாய்ப்பும் கிட்டியுள்ளது.

இவ்வாறான முன்னேற்றகரமான நிலையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எதிர்பார்க்கப்பட்ட தேசியத் தலைவர்களுக்குரிய பண்பைக் காட்டத் தவறியுள்ளார். அதற்குப் பதிலாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தனக்கெதிரான சக்திகளையும், எதிரிகளையும் கற்பனை செய்துகொள்கிறார். மிகவும் பாராட்டுக்குரிய வெற்றியைப் பெற்ற படையினரைத் தலைமை தாங்கிய இராணுவத் தலைவரை மறியலுக்குள் போட்டுள்ளார்.

தமிழர்களினது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறியமையால் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஸ்ரீ லங்கா படையினருக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை மேற்கொள்ளத் தேவையான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. விசேடமாக புதுடில்லியிடம் இருந்துவந்த அழுத்தங்கள் காரணமாக எந்தவிதமான தெளிவான முடிவும் இல்லாது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துகிறார். டெல்லியினது மலையளவு எதிர்பார்ப்புகளுக்குப் பதில் சுண்டெலியளவு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை முன் மொழிந்துள்ளார்.

தெரிவுக்குழுவின் அங்கம் பெறும் பலகட்சிகள் தமது பிரதேச நிலைகளையே பிரதிபலிக்கும். இவ்வாறான வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களுக்கிடையே தேசிய பிரச்சினைக்கான சம்மதத்தை எவ்வாறு பெற முடியும்?

முன்மொழியப்பட்ட PSC நடைமுறைக்கு வந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுக்கு எவ்வாறு தொழிற்பட முடியும்? 65 வருடங்களாகத் தீர்க்கப்படாது இருக்கும் அதிகாரப் பரவலாக்கலும் காணிப் பங்கீடும் தொடர்ந்தும் அவ்வாறே உள்ளன. மங்கள முனசிங்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு APRC, நிபுணத்துவக் குழுக்கள் பிரச்சினைகளைச் சுருக்கி ஒழுங்குபடுத்தி ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு வழிவகுத்தன. இவை எல்லாவற்றையும் ஜனாதிபதி ராஜபக்ஷ தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் PSC ஐ கொண்டு வந்துள்ளார்.

65 வருட பழைய சிக்கலான அரசியல், சட்ட, கணித பிரச்சினைகளுக்குரிய வாய்ப்பாடுகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. பிரச்சினைகளைத் தீர்க்க நேர்மையான தலைவர்கள் தேவை. ஒருவருக்கொருவர் நம்பிக்கையும், உறுதியும், தைரியமும் உடைய தலைவர்கள் வேண்டும். (இஸ்ரேல்) பெகினும் (எகிப்து) அன்வர் சதாத்தும் நடத்திய பேச்சு இரண்டு நாடுகளின் பிரச்சினைகளையும் தீர்த்தன. பிரிட்டனும் IRA யும் அண்மையில் நடத்திய பேச்சு பிரச்சினையைத் தீர்த்த உதாரணங்களாகும். நிர்வாக, இராஜதந்திர தலைமைத்துவம் தான் சமாதானத்துக்கு வழிகாட்டியது.

துரதிர்ஷ்டவசமாக இலங்கைக்குத் தேவையான நம்பிக்கைக்குரிய பெரிய எண்ணமும் இதயமுமுள்ள தலைவர்கள் 30 வருட கால யுத்தத்தில் இல்லாமல் ஒழிக்கப்பட்டு விட்டனர். ஒன்பது கட்சியினர் ஒன்றிணைந்து டட்லி சேனாநாயக்க, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற தமிழ், சிங்களவர்களால் ஒப்பந்தமிட்டு உருவாக்கப்பட்ட அரசு, பிரச்சினைகள், எதிரான கருத்துக்கள் இருந்தாலும் முழுமையான ஐந்து வருடங்கள் ஆட்சியில் நீடித்தது. தொடர்ச்சியான எதிர்ப்புகளைத் சந்தித்திதனால் தீர்வுகள் எதுவும் காணப்படவில்லை.

**தமிழில் : ஷாருமி**

மேலும் பெற்றுக்கொண்ட அதி உத்தம ஜனாதிபதிக்கான அதிகாரங்களோடும் நாடாளுமன்றத்தில் மேலுள்ள முழுப் பெரும்பான்மை அதிகாரத்தோடும் இவருக்குப் பலம் அதிகம் காணப்படுகின்றது. PSC யின் தீர்வை எதிர்ப்பார்க்காது தனது முன்மொழிவுகளை நாடாளுமன்றத்தின் ஊடாக தீர்வை காண முடிந்தது. தனது மொழிவுகளை முன்வைக்காது ஏனைய அரசியல் கட்சிகளிடமிருந்து கேட்டு சிறுபிள்ளைத்தனமாக அரசியல் நடத்துவதாகத் தெரிகிறது. தன்னை அர்ப்பணிக்கத் தயாரில்லை. அரசு தனது முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டுமெனகோரிக்கை விடுத்த UNPயும் TNAயும் APRC ஐ பகிஷ்கரித்தன.

ஒரு தீர்வு கிடைக்க வேண்டுமானால் - மஹிந்த ராஜபக்ஷ ஒரு சிறந்த தலைவரானால் அவர் தனது சொந்த முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். புதிதாக அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு மஹிந்தவின் வீணான கண்டுபிடிப்பு.

## புத்தியைத் தீட்டு



''கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு'' என்று ஒரு பெரியவர் ஒருவர் அறிவுரை கூறினார். அதைக் கேட்ட ஒரு சிறுவன் ''அது எப்படிப் பெரியவரே! புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கருங் கல்லில் கத்தியைத் தேய்க்கலாம். புத்தியைத்தீட்டு என்றால் தலையினைத் தரையில் தேய்க்க முடியுமா?'' என்று கேட்டான்.

உடனே அந்தப் பெரியவர் இந்தச் சிறுவனுக்குப் புத்திக் கூர்மை குறைவு என்று புரிந்து கொண்டார்.

அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வித்தியாசம். இது ஒரு முக்கியமான கேள்வி. ஒரு சமயம் சோக்கிரட்டீஸுடம் அவரது சீடன் ஒருவன் ''அறிவுக்கும் புத்திசாலித் தனத்துக்கும் என்ன வேறுபாடு?'' என்ற கேள்வியைக் கேட்டான். அதற்கு சோக்கிரட்டீஸ் அவனிடம் ''நான் இதற்குப் பதில் கூறும் முன் நீ ஒரு காரியம் செய்யவேண்டும்'' என்றார். ''என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்?'' என்றான் சீடன்.

இதோ அங்கே ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருக்கிறார். நேராக அவரிடம் போய் பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்'' என்று கேட்டுவா?'' என்றார் சோக்கிரட்டீஸ்.

''சரி என்று சொல்லிவிட்டு சீடன் சோக்கிரட்டீஸ் கூறிய பெரியவரிடம் சென்று'' பெரியவரே! இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். ஆனால் பதில் எதுவும் கூறவில்லை. சீடன் மறுபடியும் அதே கேள்வியைக் கேட் டான். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லை. உடனே இவன் ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது பெரியவர் ஒரு மாதிரி யாகத் தெரிகிறார். புத்திசுவாதீனம் இல்லாதவராக இருக் கலாம் என்று நினைத்துக் கொண்டு வந்த வழியில் திரும்பி நடந்தான்.

இவன் சிறிது தூரம் வந்தவுடன் அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டு ''நீ இங்கேயிருந்து பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ச்சேர ஐந்து நிமிடங்கள் ஆகும் என்றார்.

இப்போது சீடன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். பிறகு அவரிடம் ''ஏன் பெரியவரே! இந்தப் பதிலை நீங்கள் அப்போதே சொல்லியிருக்கலாம் அல்லவா? என்னைத் திரும்பிப் போகவிட்டு அதன்பின் கூப்பிட்டு இப்படிக் கூறுகிறீர்களே? என்றான்.

பெரியவர், நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் எப்படி நீ கிராமத்துக்குப் போய்ச்சேர ஆகக்கூடிய நேரத்தைச் சொல்ல முடியும்? அதனால்தான் உன்னை நடக்கவிட்டு வேகத்தைப் பார்த்து அதன் பிறகு நேரத்தை சொன்னேன்'' என்றார்.

அதற்கு பின் சீடனால் பதில் எதுவும் கூறமுடியவில்லை. சோக்கிரட்டீஸுடம் திரும்பிவந்து நடந்தவற்றைக் கூறினான். ''அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்'' என்றார் சோக்கிரட்டீஸ்.

இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

இஸ்லாமிய சமயத்தில் முக்கியமானவர் ஹசரத் அலி ஒரு நாள் அவரிடம் யூதர் ஒருவர் வந்து ''எனக்குச் சந்தேகம் உண்டு. அதை தங்களால் தீர்த்து வைக்கமுடியும்'' என்றார். ''உனக்கு என்ன சந்தேகம்?'' என்றார். ''பகுத்தறிவு, விதி -இவை இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று கூறுங்கள்.''

ஹசரத் அலி சற்று யோசித்தார். பின்னர்

''உனது வலது காலை அப்படியே மேல் நோக்கித் தூக்கு.'' என்றார்.

யூதருக்கு ஒன்றும் புரியவில்லை குழப்பத்துடன் தனது வலது காலைத் தூக்கினார்.

''சரி... இப்போது உனது இடது காலையையும் அதேபோல தூக்கு பார்க்கலாம்.'' என்றார் ஹசரத் அலி.

எனது வலது காலை தூக்கி விட்டேன். இப்போது இடது காலையும் தூக்கினால் கீழே விழுந்து விடுவேன். இப்படி என்னால் செய்யமுடியாது.'' என்றார் அந்த யூதர்.

ஹசரத் அலி புன்முறுவலுடன்,

''தம்பி... உன்னால் ஒரு காலை மட்டுமே தூக்க முடிந்தது இல்லையா! இதன் பெயர்தான் பகுத்தறிவு.

ஒரே சமயத்தில் இன்னொரு காலையும் தூக்க முடியவில்லை இல்லையா! இதன் பெயர்தான் விதி. இதுதான் இரண் டுக்கும் உள்ள வேறுபாடு?'' என்றார்.

அந்த யூதர் அமைதியாகத் தலையசைத்தார்.

இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் ''கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'' என்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைமத்தி மேம்பாட்டுக் கழகம் நடத்திய கல்வி ஊக்குவிப்பு நிகழ்வில் கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் பிரதேச மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில் பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன். (ம–250)

# இந்து ஆலயங்கள் பலவற்றைக் கொண்ட பாரம்பரியச் சிறப்பு மிக்கது யாழ்ப்பாணம்

## தென்னிந்திய சிவாச்சாரியார்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டம் பாரம்பரிய மாகவே பல இந்து ஆலயங் களைத் தன்னகத்தே கொண்டு தனித்துவமான சிறப்புப் பெற்ற பிரதேசமாகும்.

இதனால் பாரம்பரியமாகப் பேணிப் பாதுகாத்து வந்த இந்து ஆலயங்களைப் பாதுகாப்பது இந்துக்களின் கடமையாகும். இவ் வாறு தெரிவித்தார் தென்னிந்திய காந்திபுரத்தைச் சேர்ந்த ஏகாம் பரநாதேஸ்வரர் தேவஸ்தானம் மற்றும் ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானத்தின் பரம்பரை ஸ்தானிகர் ஞானபாணு சிவஸ்ரீ சாலவ. கே. ராஜப்பா சிவாச்சாரி யார்.

காரைநகர் ஈழத்துச் சிதம் பரத்தில் இடம்பெற்ற கும்பாபி ஷேக நிகழ்வில் ஆசியுரை வழங் கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த் தும் போது தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட மக்கள் மிகுந்த சமய நம்பிக்கை உடையவர் கள். இறைவனை யாழ். கொண்டு இசையால் போற்றிப்பாடிய தால்தான்யாழ்ப்பாணம் எனும் சிறப் புப் பெயர் பெற்றதையும் நாம் அறிவோம்.

ஆலயத்தில் இடம்பெறும் கும்பாபிஷேக தரிசனம் பெறு பவர்களுக்குச் சிறந்த பயனைத் தரும். இதனால்தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று கூறியுள்ளார்கள். இது மக் களுக்கு மட்டுமல்லாது கிரா மத்துக்கே பெருமைதரும்.

இதனை கவனிப்பாரற்ற நிலை யில் இருக்கும் ஆலயங்களில் நிறைவேற்ற முன்வர வேண் டும். ஆலயங்களின் நித்திய, நைமித்திய பூசைகள் கட்டாயம் இடம்பெற வேண்டும்.

இந்த அரிய பணிகளில் அடிய வர்கள், தொண்டர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டும். சைவ மரபுரிமைச் சொத்துக்கள் காலா காலமாகப் பேணிப் பாதுகாக்கப் பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் பல ஆல யங்கள் நாயன்மார்கள் பாடல் பாடிச்சென்ற திருத்தலங்களாக அமையப் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது - என் றார். (ம-313-250)

# அரச சேவையில் உள்ள அலுவலர்கள் மக்கள் நலன்கருதி சேவையாற்ற வேண்டும்

## வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 01

அரச ஊழியர்கள் சேவை மனப்பான்மையுடனும், பொது மக்களின்நலன்கருதியும் சேவை யாற்ற வேண்டும். அர்ப்பணிப் பான சேவைதான் சமுதாயத்தை முன்னேற்றப் பாதைகளில் கொண்டு செல்லும்.

- இவ்வாறு தெரிவித்தார் சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகா மணி.

வலிகாமம் மேற்குப் பிர தேச சபையில் அண்மையில் இடம்பெற்ற, செல்வி ராதா முரு கேசு, கந்தையா ஸ்கந்தராசா ஆகிய இரு அரச அதிகாரிகளுக்கு மான சேவை நயப்பு விழாவில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் தெரிவித்த தாவது:

அரச சேவை என்பது மகத் தானது. இதன் காலம் குறுகிய தாக இருந்தாலும் அதனை அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டும். அரச அலுவலர் கள், அரச ஊழியர்கள் தமது கடமை களை நிறைவேற்றும்போதுபொது மக்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தச் சேவையை கடமை நேரத்தில் மட்டும்தான் செய்ய வேண்டும் என்பது கிடையாது. தொண்டுகளைச்செய்ய நினைப்ப வர்கள் முழுநேரம் கடமை உணர் வுடன் செயற்பட முடியும். இவ் வாறு சேவை புரிபவர்களுக்கு சேவை நயப்பு விழா நடத்துவ தும் பாராட்டுக்குரியது.

இதுபோன்ற அதிகளவான சேவையாளர்கள் முன்னுக்கு வந்தால் சமுதாயத்தின் முக்கிய தேவைகள், எதிர்பார்ப்புகள் அதி கம் கிடைக்க வாய்ப்பாக அமை யும். சகல அரச ஊழியர்களும் இவற்றை உணர்ந்து கடமை களை நிறைவேற்ற வேண்டும் என்றார் அவர்.

(வ-313-302)

# வலிகாமம் வலய ஆங்கிலதினப் போட்டி முடிவு

வலிகாமம்வலயஆங்கிலதினப் போட்டிகளின் முடிவுகள் வெளி யாகியுள்ளன. அவற்றின் சில முடிவுகள் வருமாறு:

உரத்துவாசித்தல்

தரம்-3

ஏ.ஆர்.நிஷாரா (உடுவில் மக ளிர் கல்லூரி), எஸ். நிலோசிகா (ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்),எம்.தனுஜா(உடு வில் மகளிர் கல்லூரி).

தரம்-4

என். தர்னிகா (உடுவில் மக ளிர் கல்லூரி), பி.கிரிஷாங்கி (உடுவில் மகளிர் கல்லூரி), கே. தயாளரூபினி (இணுவில் மத்திய கல்லூரி).

தரம்- 5

எம். உஷாந்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), ஜீ. இராமா ஜினா (உடுவில் மகளிர் கல் லூரி), எஸ். டாரணி (ஏழாலை சைவ மகாஜனா வித்தியால யம்).

பார்த்து எழுதுதல்

தரம்- 3

எ. கௌதமன் (உடுவில் மக ளிர்கல்லூரி), யூ. பரணிகா (சுன்னா கம் திருஞானசம்பந்தர் வித்தி யாலயம்), எஸ். விதுஷா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்).

தரம்- 4

எம் .வக்சிகா (சுன்னாகம் நாகே ஸ்வரி வித்தியாலயம்), எ. கின்சி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். தர்சனா (ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை).

தரம்-5

வி. வைஷாலினி (உடுவில் மகளிர் கல்லூரி), எஸ். நிதுர் ஜினி (இணுவில் மத்திய கல் லூரி), எஸ். குபேந்தினி (சுன் னாகம்நாகேஸ்வரிவித்தியாலயம்).

தரம்- 6

எஸ். நிஷாலினி (சுன்னா கம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), பி.பிருந்தாஜினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஆர். கீர்த்திகா (இணுவில் இந்துக் கல்லூரி).

தரம்-7

ஜீ. கீர்த்தனா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஆர். யோகிதா உடுவில் மகளிர் கல் லூரி), ஜே. தனுசிகா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி).

தரம்- 8

எம். சைலஜா (உடுவில் மகளிர் கல்லூரி), ஆர். டஸ்மி (உடு வில் முருகமூர்த்தி வித்தியால யம்), கே.காமி (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி).

தரம்- 9

எஸ். நிர்ஷிகா (உடுவில் மக ளிர்கல்லூரி), கே. காருண்யா (உடு வில் மகளிர் கல்லூரி), எஸ்.ஜெசிகா (இணுவில் இந்துக் கல்லூரி).

தரம்-10

எஸ். அபிராமி (உடுவில் மக ளிர் கல்லூரி), எஸ். கீர்த்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), கே. கௌசிகா (தாவடி இந்துதமிழ் கலவன் பாடசாலை).

தரம்-11

எ. கல்யாணி (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி), எம். திவ்யா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி), எஸ். இராமேஜினி (உடு வில் மான்ஸ் மகா வித்தியாலயம்),

தரம்- 12

எ. ஷர்மிலா (இணுவில் மத்திய கல்லூரி), கே. கொன்சிஸ்ரா (மருத னார் மடம் இராமநாதன் கல்லூரி), பி. கனிஸ்ரா (ஏழாலை மகா வித்தி யாலயம்).

தரம்- 13

பி. லக்சி (சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி), எம். தர் ஷிகா (இணுவில் மத்திய கல் லூரி), எஸ். கனிஸ்ரா (மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி).

(தொடரும்) . (ம-86)

## கண்காட்சி

பருத்தித்துறை, ஜூலை 01

கால்நடைவளமற்றும்கோழிப் பண்ணைத்துறை மேம்பாட்டுக் கான சர்வதேச கண்காட்சி எதிர் வரும் 7ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியை முன் னிட்டு பாடசாலை மாணவரி டையே சித்திரப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. மேற்படி போட்டி இருபிரிவுகளாக இடம் பெறவுள்ளது. (வ-190)

## மட்டுவிலில் மின்சாரம் தாக்கி யுவதி காயம்

தென்மராட்சி, ஜூலை 01

மின்சாரம் தாக்கி யுவதி ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக் கிழமை மட்டுவிலில் இடம் பெற்றது.

மின் தடை ஏற்பட்டு அதன் பின்னர் மின்சாரம் வந்ததை யடுத்து சார்ஜர் லைட்டுக்கு மின்வலு ஏற்றுவதற்கு மின் இணைப்பினை ஏற்படுத்திய போது மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ.நிரோஜா (வயது 20) என்ப வர் மின்சாரம் தாக்கிய நிலை யில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (207)

## ராமகிருஷ்ண சமிதி இடமாற்றம்

சண்டிலிப்பாய், ஜூலை 01

மானிப்பாய் தாவடி வீதியி லுள்ள தனியார் வீட்டில் பல வருடங்களாக இயங்கி வந்த ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி அதே வீதியிலுள்ள வேறொரு வீட் டில் கடந்த 22 ஆம் திகதியி லிருந்து இயங்கி வருகிறது.

இதேவேளை, முன்பு இயங்கி வீட்டிற்குச் சற்று தூரத்திலுள்ள 93 ஆம் இலக்க வீட்டில் இயங்கி வரும் மேற்படி சமிதியில் வழமை போல் சகல பஜனைகளும் இடம்பெற்று வருவதாக சமிதி யின் செயலாளர் தெரிவித்துள் ளார். (வ-115)

## ஆன்மிக நிகழ்வுகள்

வடமராட்சி, ஜூலை 01

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ் வார் ஆலயச் சூழலில் அமைந் துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத் தில் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு 'மகாபார தம்' தொடர்சொற்பொழிவு நடைபெறும்.

பண்டிதர்பொன் சுகந்தன்சொற் பொழிவை நிகழ்த்துவார்.

(ம-236)

***

வடமராட்சி, ஜூலை 01

தொண்டைமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவகலை பண் பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "முருகன் கழல் பெற்று உய்வாய்" என்னும்தலைப்பில்சொற்பொழிவு இடம்பெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத் தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(ம-236)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அலைபாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை ஸ்ரீ நாக பூஷணி அம்பிகையின் வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14.07.2011 அன்று தேர்த்திருவிழாவும் 15.07.2011 அன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அலைகடல் நடுவே அமர்ந்து அருள் சுரக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி வரலாற்றுச் சிறப்பும், பழமையும் வாய்ந்த நயினையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளி ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' திருவருள் பாலிக்கிறாள். நாடிவரும் அடியார்களின் வினைகளை எல்லாம் தீர்ப்பவள் அன்னை. உலகுக்கெல்லாம் இருள் கடிய உதய சூரியன் உதயமாவதைப் போல் மணிபல்லவத்தில் நாகம்மை அரசாட்சி போற்றப்படுகின்றது. மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி குளிதரும் சேவடியைத் தந்து துணையும் தொழும் தெய்வமுமாய் அருட்பார்வை நல்கி, அனைவரையும் புனிதராக்குகின்றாள். நெஞ்சக் கனகல்லை உருகச் செய்து வஞ்சப் புலன் ஐந்தின் வாய்களை அடைக்கின்றாள். வருந்திவரும் அடியார்களுக்கு வேண்டத்தக்கது அறிந்து, வேண்டுவதும் கொடுக்கிறாள்.

சக்தி பீடங்களுள் இது ஒன்றே இலங்கையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது**

சக்திபீடமாகத் திகழ்வது நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயமாகும். இலங்கையில் இந்த ஆலயத்தைப் போன்று தொன்மையும் புகழும் வாய்ந்த சக்திபீடம் வேறொன்றில்லை எனலாம். தனது அளவில்லாத கருணையினால் உலகிலுள்ள உயிர் வர்க்கங்களை எல்லாம் அரவணைப்பவள் அன்னை நாகபூஷணி. நாகசாந்தி செய்வதன்மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்களுக்குண்டு. நாகபூஷணியாக, நாகராணியாக எழுந்தருளியிருந்து, நாக தோஷத்தை நிவர்த்தி செய்து, புத்திர பாக்கியத்தையும் கொடுத்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றாள் அன்னை பராசக்தி. நாகபூஷணி அடியார்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் உறுதியான இடம் பெற்று வேண்டிய வரங்களை வழங்கித் துன்பங்களைப் போக்கி அருளுகின்றாள்.

நயினையம்பதியில் அடியார் கூட்டம் உற்சவ காலங்களில் அலைமோதும். பிரயாணக்கஷ்டங்களையும் பொருட்படுத்தாது அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடி வந்து அம்பிகையின் ஆலயத்தில் கூடி நின்று அரோகரா, அம்பாளுக்கு அரோகரா எனக் காதலாகிக் கசிந்து கண்ணீர் சொரிகின்றனர் அடியார்கள். தெய்வீகமான அருட்சக்திதங்கள்துன்ப துயரங்களையெல்லாம் நீக்கவல்லவள் என்ற அசையாத நம்பிக்கை அடியார்கள் மத்தியில் இருக்கின்ற காரணத்தால் அடியார் வெள்ளம் கரை புரண்டோடுகின்றது. அது மட்டுமல்லாது மூலஸ்தானத்திலுள்ள அம்பாள் உருவத்தையும் ஐந்துதலை நாகப் பிரதிஸ்டையையும் ஒருமுறையாவது வணங்கி, தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காகவும் அடியார்கள் கூட்டம் அலை மோதுகின்றது. இந்த மூல விக்கிரகத்தின் அமைப்பும் அற்புதமும் வேறெந்தத் திருத்தலங்களுக்கும் இல்லை எனலாம். இதன் காரணமாகத்தான் இந்த ஆலயத்தில் தூய்மையான நாகவழிபாடு புராதன காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது.



அழகுக்கொருவரும் ஒவ்வாத வல்லியாக அம்பாள் திகழ்கின்றாள். அபிராமிப் பட்டர் அம்பாளுடைய அழகைப் பற்றிப் பாடும்போது முதலில் நிகரற்ற அழகுள்ளவள் என்றும் அருமறைகள் வருடுவதால் தாமரை போன்ற சிவந்த பாதங்களை உடையவள் என்றும் குறிப்பிடுகின்றார். அழகுக்கு அழகு செய்வது போன்று அமைகிறது அம்பாளுடைய இளமைத் தன்மை வாய்ந்த அருட்தோற்றம். அபிராமி அந்தாதி, தேவி மான்மியம், லலிதா சகஸ்ரநாமம் என்பன அம்பாளுடைய அழகை எடுத்தியம்புகின்றன.

அமுதசுரபியில்லம் அலர்ந்து வாழி என வாழ்த்தினார் பேரறிஞர் அமரர் கி.வா.ஜெகநாதன். அன்னையென அடி யார்கள் போற்றுகின்ற நயினை அம் பாளைத் தரிசிக்க வருகின்ற பல்லா யிரக் கணக்கான அடியார்களுக்கு அன்னதானம் வழங்கிக் கொண்டேயி ருக்கின்றார்கள் அமுதசுரபி அன்னதான சபையினர். அம்பிகையின் அருளும் சுரக்க அமுதசுரபியில் அமுதும் சுரந்து கொண்டே செல்கின்றது. அமுது அள்ள அள்ளக் குறையாது பெருகிக் கொண்டே இருக்கிறது.

ஆழ்கடலில் அடியார் கூட்டம் அலை மோதிக் கரைசேர்ந்து அம்பிகையின் கோபுரத்தின் முன் ''தாயே'' என்று உள்ளம் நெஞ்சுருகி நின்று கண்ணீர் மல்கி அம்பிகையை வழிபடும் காட்சி அருட் காட்சியாகும். நயினை நாகபூஷணி அம்பாளை நேரில் வந்து தரிசித்து எல்லா நலன்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**நயினை**
**நாக. குமாரசூரியர் (ஜே.பி.)**

## நயினை கொடியேறுதம்மா

நாற்புறமும் நாகங்கள்
நளினமுடன் ஆட
நயினை வளர் நாயகியும்
நயந்து மனம் மகிழ
ஆர்ப்பரித்து அலை சுருட்டி
அலைகடலும் ஆட
அற்புதமாய் தென்றலதும்
அங்கு சுருதி கூட்ட
சாற்று புகழ் ஓங்கு கதிர்
தந்து ஒளி பரப்ப
உற்ற புகழ் பெற்ற சிவன்
உவந்து நடனமாட
விற்றிருந்த பக்தர்களும்
வேப்பிலை கொண்டாட
வினை தீர்க்கும் வெண்கொடி
விரைந் தேறுகின்றது.

- விகடகவி-

## நயினையம் பதியின் தாயே

நல்லருள் ஈந்து நிற்கும்
நயினையம் பதியின் தாயே!
எல்லையில் லாத உந்தன்
எழிலுறு கருணை பொங்க
வல்லமை தந்து என்றும்
வாழவே வழி தெருட்டி,
தொல்லைகள் துடைத்து எம்மை[த்]
துலங்கிட வைத்தி டம்மா!

அலை கடலின் நடுவினிலே
அமர்ந் திருக்கும் நாயகியே!
கலையுமிழும் உன் உருவம்
காசினியை யீர்த்து நிதம்
மலையான மகிழ் வதனை
மாநிலத்துக் கீ பவளே!
நிலையான நின் மதியை
நீளுலகுக் கீந் திடம்மா!

கூத்தாடி வி.சி.தஞ்சிதபாதம்

# வீதியில் குப்பை போட்ட 5 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வல்வெட்டித் துறைப் பகுதியில் பொது வீதியில் குப் பைகளைக் கொட்டி அசுத்தப் படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 5 பேரை வல்வெட்டித்துறை பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

வல்வெட்டித் துறைப் பகுதியைச் சேர்ந்த இவர்கள் பொது இடத்தில் குப்பைகளைக் கொட்டியபோது பொலிஸாரால் கைது செய்யப் பட்ட னர்.

இவர்கள் பின்னர் கடந்த புதன் கிழமை பருத்தித் துறை நீதிவான் நீதி மன்றில் ஆஜர் செய் யப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (ஓ-319)

# கல்விச் சுடர் விடைகள்

### பரீட்சை இல.10 இன் வினாத்தாள்
### I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01) மனதை | 02) தாமதம் | 03) நான் | 04) 3 |
| 05) 3 | 06) 2 | 07) 1 | 08) 1 |
| 09) 2 | 10) 2 | 11) 3 | 12) 1 |
| 13) 2 | 14) 1 | 15) 2 | 16) 4 |
| 17) B | 18) A | 19) D | 20) E |
| 21) C | 22) F | 23)1 | 24) 1 |
| 25) 2 | 26) 3 | 27) 2 | 28) C |
| 29) A | 30) D | 31) 2 தடவை | 32) 3 தடவை |
| 33) D | 34) தென்கிழக்கு | | |
| 35) மே→வ→மே→தெ→மே→வடக்கு | | 36) 1 | 37) 1 |
| 38) 2 | 39)2 | 40) 2 | |

(புள்ளிகள் 40×2.5=100)

### பரீட்சை இல. 10 இன் வினாத்தாள்
### II இற்கான விடைகள்

1)1. பாடசாலைக்கருகில் சென்றபோது 2. மாணவர்களை
3.புதிய வகுப்பாசிரியரும் புதிய நண்பர்களும் அன்புடன் வரவேற்பது.
4. பஞ்சு போன்ற 5. தூய்மை / சமாதானம் 6. பழைய மாணவன்
7. மைதானத்தில்
08) 1. பொய் 2. பழைய 3. அண்மை
02) 1. காற்று வேகமாக வீசுகின்றது. 2. நாங்கள் வீட்டுக்குப் போகிறோம்.
3. குமரன் சித்திரம் வரைகிறான்.
4. மாணவர்கள் மைதானத்துக்குச் செல்கிறார்கள்.
03) 1. உங்களுடைய சுகம் எப்படி? 2. நலமாய் இருக்கிறேன்.
04) 1. 2 2. 3 3. 1 4. 3
05) 1. இரவு பகல் 2. வஞ்சகம்
06) 1. Sunday 2. Ocean

2. 1. புதுவருட வாழ்த்துக்கள். 2. தயவுசெய்துஅமைதியாக இருங்கள்.
3. நாங்கள் வீட்டிற்கு போவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 07-4 | 08-3 | 9-1 | 10-1 | 11-2 |
| 12-1 | 13-1 | 14-1 | 15-1 | 16-2 |
| 17-3 | 18-2 | 19-4 | 20-2 | |

21) 1. கிணற்றிலிருந்து நீர் அள்ளல் 2. துணி, கடதாசி வெட்டுதல்.
3. தகரம் வெட்டுதல். 4. மண்ணைக் கொத்துதல்.
5. நிலத்தை உழுதல்.
22) 1. 102 2. 136 3. 16
4. வலது பக்கத்துக்குச் சென்ற வாகனங்களை மட்டும் குறித்தால் புள்ளி வழங்கவும். 5. 35
23) பொருத்தமான வாக்கியங்களுக்கு புள்ளி வழங்குக.

பருத்தித்துறை நகரசபைத் தேர்தல் 2011
இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)



வேட்பாளர்
நடராசா நிரஞ்சன்
(றஞ்சன்)
விருப்பு வாக்கு இல.
04
(48,24,54)
இலங்கைத் தமிழரசுக் கட்சி X

Computer Express
Institute of Information Technology
பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Dip.in Programming Language | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/-
Diploma in Multimedia 4Months 1000/-
பதிவுகளுக்கு முந்துங்கள்

Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm

Batch I - 01.07.2011 9Am or 3pm Batch II - 02.07.2011 9Am or 3pm
Batch III - 03.07.2011 9Am or 3pm Batch IV - 06.07.2011 9Am or 3pm

C,C++,Java,Java script,VB,Html,
Programming Language
University Of Madras Bsc

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15.,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய தீட்சிதர் குரு பரம்பரையால் பராமரிக்கப்படும் மருதடி விநாயகர் ஆலயம்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

தென் இந்திய குளக்கோட்டு மன்னனின் பரம்பரையினால் சிதம்பரம் விளைவேலிப் பகுதியில் வைத்துப் பூசிக்கப்பட்டு வந்த விநாயகர் விக்கிரகம் அமைந்திருந்த இடத்தில் பெரிய விநாயகர் விக்கிரகம் வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பூஜைகள் செய்த அந்தணப் பெருமகன் அதனை எடுத்துக் கொண்டு கப்பலில் யாழ்ப்பாணத்துக்கு வந்து நுணாவில் மேற்குப் பகுதியில் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் வைத்து விட்டு இளைப்பாறினார். பின்னர் அதனைத் தூக்கிச் செல்ல முற்பட்ட வேளை முடியாமல் போனது.

எனவே அவ்விடத்தில் சிறு கொட்டில் அமைத்து அந்தப் பகுதி மக்களின் உதவியுடன் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வந்ததாக தொன்மைச் சான்றுகள் மூலம் அறியப்படுகிறது. விக்கிரகத்தைக் கொண்டு வந்த தீட்சிதர் குருபரம்பரையினால் இன்றும் இந்த ஆலயம் பராமரிக்கப்பட்டு வருவது ஆலய தொன்மைக்கு வழிகாட்டுவதாக உள்ளது.


அறுமுக நாவலர் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வருகைதந்திருந்த போது இந்த ஆலயத்தில் உள்ள விநாயகப் பெருமானைத் தரிசிக்க ஆர்வங் கொண்டு ஆலயத்துக்கு வந்து தங்கியிருந்து பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். இவருடன் வந்திருந்த காசியைச் சேர்ந்த செந்திநாத ஐயர் ஆலயத்தில் புராண படனங்களையும் சொற்பொழிவுகளையும் செய்ததாக வரலாற்றுக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆதிகாலத்தில் தென் இந்திய அர்ச்சகர் பரம்பரையில் வந்த வேதக் குட்டி ஐயர், நீலகண்டக்குருக்கள், கந்தசாமிக் குருக்கள் போன்றவர்கள் மேற்படி ஆலயம் பராமரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. வந்தனர். இவர்களது பெருமைகளை இந்தப் பகுதி வாழ் மக்களின் சந்ததியினர் இன்றும் சொல்வார்கள். இவர்களில் நீலக் கண்டக் குருக்கள் ஆற்றல் மிக்கவர். இவர் வெயில் காலத்தில் தலைமேல் போடும் துண்டு காற்றில் எழுந்து குடை விரிந்திருப்பது போல் நிழல் கொடுத்தது போன்று காணப்படும் என்பர். இவரிடம் நீரின் மேல் நடந்து செல்லும் ஆற்றல் உள்ளதெனவும் இவருக்கு விநாயகரின் அற்புத சக்தி உள்ளதெனவும் கூறப்பட்டது.

ஆலயத்தின் வடகிழக்குத் திசையில் காணப்படும் காளி அம்பாள் ஆலயம் மேற்படி ஆலயத்தைப் பராமரித்த கந்தசாமி ஐயர் காலத்தில் உருவாக்கப்பட்டதாகவும் பல்வேறு அற்புதங்களை காளி அம்பாள் நிகழ்த்தியதாகவும் கூறப்படுகிறது.

ஆலயம் உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை விநாயகர் விக்கிரகத்தை இங்கு கொண்டு வந்த அர்ச்சகர் குருவின் பரம்பரையினரால் உருவாக்கப்பட்டதே மாவை ஆதீனம், கீரிமலை ஆதீனம், விளைவேலி ஆதீனம் போன்றவையாகும்.

அந்தப் பரம்பரையில் வந்த மகாராஜ ஸ்ரீ ஷ.து.ஷண்முகநாதக் குருக்களால் இந்த ஆலயம் 1950 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்டு நிர்வாக, பூஜை கைங்கரியங்களும் நிறைவு செய்யப்பட்டன. அவர் காலத்திலேயே ஆலயத்தில் பெருந்திருவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பூஜைகளை நடத்தும் குருமார்களும் நியமிக்கப்பட்டனர்.




ஜயந்தன்

1981 ஆம் ஆண்டு மகாராஜஸ்ரீ ஷ.து ஷண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்) அவர்கள் தற்போது ஆலய பிரதம குருவாக உள்ள கலாநிதி சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்களிடம் ஆலயத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவரது காலத்தில் ஆலயம் புதுப் பொலிவு பெற்றது. மூன்று தடவைகள் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஆலய வளாகத்தில் மகாலட்சுமி, முருகன், வைரவர், சண்டேசுவரர் போன்ற பரிவார மூர்த்திகளின் கோயில்களும் அமைக்கப் பெற்றன.

இந்த ஆலயத்தில் முன்னைய காலத்தில் மூன்று வீதிகள் இருந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. தற்போது உள்வீதி சுற்று மதில் அமைக்கப்பட்டுள்ளது. அதே அளவுக்கு மற்றொரு வீதியும் காணப்படுகிறது.

இங்குள்ள மூலஸ்தான விநாயகர் விக்கிரகம் வித்தியாசமான முறையில் காணப்படுகின்றது. ஏனைய விநாயகர் ஆலயங்களில் உள்ள மூலஸ்தான விநாயகர் விக்கிரகம் ஒரு பக்கமே விநாயகர் உருவம் காணப்படும். ஆனால் இந்த ஆலயத்தில் உள்ள விநாயகர் விக்கிரகம் இரு பக்கமும் ஒரே மாதிரியான உருவ அமைப்பைக் கொண்டுள்ளது. கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ள இந்த விக்கிரகம் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது. இந்த விக்கிரகம் சிவப்பு நிறக் கருங்கல்லினால் உருவாக்கப்பட்டிருக்கலாமெனத் கருதப்படுகிறது. இந்த விக்கிரகத்தை உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கும்போது சிவப்பு நிறத்தில் இரத்த ஓட்டம் உள்ளது போல அமைந்துள்ளது. அற்புதமான சிற்ப வேலைகளுடன் செதுக்கப்பட்டுள்ளது. ஆலய அமைப்பும் இரட்டைப் பஞ்சாங்க அமைப்பில் அமைந்துள்ளதால் சிற்ப சாஸ்திரத்திதுக்கு நிறைவாக அமைந்து பூரணம் பெற்றுள்ளது. *(தொடரும்)*



## 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர் இளையதம்பி ஆனந்தராசா


*மலர்வு:*
*1949.11.09*

*உதிர்வு:*
*2011.06.01*

விழிகள் கரைகிறது
வேதனை நெஞ்சை முட்டுகின்றதே...
ஓடி ஓடித் திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேனோ
உங்கள் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்றுக் கூட வீச மறுக்கின்றதே
வார்த்தைகள் கூட மௌனமாகின்றதே
உங்கள் பாசத்தால் கவர்ந்த உள்ளங்கள்
கண்ணீரில் மிதப்பதைத் தவிர்க்க
ஒரு கணம் மீண்டும் கண்திறக்கமாட்டீர்களா அப்பா!

சூராவத்தை, சுன்னாகம். (48,20,52) குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் விழி நீர்த்தடம்...



குடும்பத்தின் ஒளியாய்
27.05.1989

குடும்பத்தின் இருளாய்
01.06.2011

செல்வி
துரைராசா கிருத்தியா (கீர்த்தி)
- உரும்பிராய் -


எங்கள்
குடும்பத்தின் குலவிளக்கு- எம்மை
விட்டுத் தூர விலகிச் சென்றதனால்
விழிகளில் நீர்
சொரிந்து நிற்கின்றோம்...
கடந்த கால
நினைவுகளை மீட்டுமே பார்க்கின்றோம்.....
எங்கள்
இதயவறையில் காலமெல்லாம்-உன்னை
சுமந்துமே வாழ்கிறோம்...
உன் ஆன்ம ஈடேற்றத்திற்காய்
தினமும் இறையருளை வேண்டுகின்றோம்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீளாத்துயரில்:
குடும்பத்தினர்.

உரும்பிராய் கிழக்கு. (5231) (49,23,24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழாப் பூரிப்பில் மக்கள் வங்கி



அரைநூற்றாண்டு காலமாக, இலங்கையின் வங்கியியல் வரலாற்றில் தனக்கென தனித்தடம் பதித்துக்கொண்ட மக்கள் வங்கியானது தனது பொன்விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இன்றைய நன்னாளிலே, மக்கள் வங்கியின் தோற்றம், வளர்ச்சிப்பாதைகள் மற்றும் சேவைச் சிறப்புகள் போன்றவற்றை எடுத்து நோக்குதல் மிகப் பொருத்தமானதாகும்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அவர்கள் பிரதமராக இருந்த 1960 களில், பிரதான அரசாங்க வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கியினை ஸ்தாபிதம் செய்யும்பொருட்டு, T.B. இலங்கரட்ன அவர்களினால் சமர்பிக்கப்பட்ட மசோதாவானது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, 1961ம் ஆண்டு 29ம் இலக்க மக்கள் வங்கிச்சட்டம் உருவாக்கப்பட்டு, மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஆரம்பகால வளர்ச்சிக்கு வலுவூட்டி, அதனைக்கட்டி எழுப்புவதற்கு முன்னின்று உழைத்த மக்கள் வங்கித் தலைவர் திரு.வின்சன்ட் சுபசிங்க மற்றும் பொது முகாமையாளர் திரு.டபிள்யூ.எஸ்.சொலமின்ஸ் ஆகியோரது அளப்பரிய சேவைகள் இத்தருணத்தில் நினைவு கூரப்பட வேண்டியனவாகும்.

முன்னதாக, இலங்கையின் பொருளாதார நிதியியல் கட்டமைப்புக்கள் முக்கியத்துவம் பெற்றிருந்த கூட்டுறவு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்ததாக கிராமியப் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்லும் நோக்கினை அடிப்படையாகக்கொண்டு மக்கள் வங்கியானது செயற்படத் தொடங்கியது.

**"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"** என்ற மகுட வாசகத்தினை ஏந்தியவண்ணம் நாடளாவிய ரீதியில் தனது சேவைகளை விரிவுபடுத்திக்கொண்ட மக்கள் வங்கியானது உலக மயமாக்கல், திறந்த சந்தைப்பொருளாதாரம் மற்றும் சர்வதேச நிதியியல் முறைமைகள் மீதான துரித வளர்ச்சி போன்ற காரணிகளின் அபிவிருத் திப்போக்குக்கேற்ப விரைவாக வளர்ச்சியடைந்து, பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் அடித் தளத்தைக்கொண்ட பிரதான அரச, வர்த்தக வங்கிகளுள் ஒன்றாக பரிணமித்துக்கொண்டது.

ஆங்கிலம் கற்றவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கித் தொழின்முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு சிங்களம், தமிழ் ஆகிய தேசிய மொழிகளினூடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் சமுதாயத்தின் உயர்மட்ட வகுப்பினர் மாத்திரமன்றி விவசாயம், மீன்பிடி தொழிலாளர் பாரம்பரியத்திலிருந்தும் திறமையான ஊழியர்கள் ஆட்சேர்ப்புச்செய்யப்படத் தொடங்கினர். பலதரப்பட்ட திறமைகளுடனும் அன்பு, கருணை, இரக்கம் போன்ற விழுமியங்களுடனும் ஊழியர் களால் வழங்கப்பட்ட சேவைகளின் பிரகாரம் நடுத்தர வர்க்கத்தினரும் கீழ்மட்ட வர்க்கத்தினரும்கூட, எமது வங்கியுடன் கைகோர்த்துக் கொண்டமையும் வரலாற்று நிகழ்வாகும்.

சேமிப்புக்களைப்பெற்றுக்கொள்ளுதலும், கடன்களை வழங்குதலும் என்ற அடிப்படை வங்கியியலுக்கு மேலதிகமாக, மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து. பரந்துபட்ட ஒருங்கிணைக்கப்பட்ட சேவைச் சங்கிலியானது தொடர்ச்சியாகக் காணப்படுதல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நிதிச்சேவைகளில் **"புதிதுபுனைதல"** எனும் கருத்துக்கு மக்கள் வங்கி முன்னுதாரணமாகத் திகழ்கிறது. இலங்கை வங்கியியல் வரலாற்றில் முதன்முதலாக தங்கநகை அடகுச்சேவையினை அறிமுகப்படுத்திய பெருமை மக்கள் வங்கிக்கே உரித்தானது மட்டுமன்றி, இன்றுவரை தங்க அடகுச் சேவை தொடர்பிலான சந்தைத்தலைமைத்துவத்தினையும் மக்கள் வங்கியே கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

சித்திரைப்புத்தாண்டின் நிதிக்கொடுக்கல் வாங்கல்களுடன் ஆரம்பித்து, வங்கிப்பரிவர்த்தனையின் போது, கைவிசேடம் வழங்கும் பாரம்பரியமும் மக்கள் வங்கியிலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய பண்பாட்டு சிறப்பு வாய்ந்த திருநாட்களின் போது வாடிக்கையாளர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கும் நடைமுறையும் இவ்வாறே மக்கள் வங்கியின் பெருமைக்குரிய அறிமுகங்களாகும்.

இன்றும்கூட, சகல சமூகத்தினரும் இத்தகைய விழாக்களின் போது, மத அனுஷ்டானங்களுக்கு அடுத்தபடி வங்கிப்பரிவர்த்தனைக்கே முக்கியத்துவம் கொடுத்து விசேட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் பெறுகின்றனர்.

இத்தகைய சமூகக்கட்டமைப்புடன் பின்னிப்பிணைந்த வங்கியியல் பாரம்பரியத்தை உருவாக்கிய மக்கள் வங்கியானது, பிறந்த குழந்தைகள் முதற்கொண்டு வயது முதிர்ந்த மூத்த பிரஜைகள் வரை சகல சமூகமட்டத்தினருக்குமான சிறப்புவாய்ந்த சேமிப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மேலும் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

இச்சேவைகளின் தொடர்ச்சியாகவே, பரிசுப்பொருட்கள் வழங்குதல், புலமைப்பரிசில் திட்டங்கள், அதிர்ஷ்டக்குலுக்கள், காப்புறுதி, கருத்தரங்குகள், வீட்டுத்திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார வரலாற்றினை எடுத்துநோக்கின், அவ்வப்போது ஏற்பட்டு வந்த நெருக்கடி மிகுந்த காலகட்டங்கள் யாவற்றிலும் தனிச்சிறப்பான வங்கிச்சேவையினை மக்கள் வங்கி வழங்கி வந்துள்ளது. 1983இல் ஏற்பட்ட இனக்கலவரங்களின்போது, இத்தகைய சேவைகள் மிகவும் சிறப்பாக வழங்கப்பட்டிருந்தன. கொள்ளைகளின்போது இழக்கப்பட்ட தங்க நகைகள்கூட, மீளவும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

வடக்கு-கிழக்கு பகுதியில் நிலவிய கடும் போர்ச்சூழ் நிலைகளின்போது மக்கள் வங்கி மகத்தான சேவையினை வழங்கியது. அடிக்கடி ஏற்பட்ட இடம்பெயர்வுகளின்போது வங்கிக்கிளைகளும் இடம்பெயர நேர்ந்தபோதிலும், வங்கிச் சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

1995இல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது, மக்களோடு மக்களாக இடப்பெயர்வுக்குட்பட்ட மக்கள் வங்கி, கடும்போர், பொருளாதாரத்தடை மற்றும் திரவப்பணத்திற்கு நிலவிய கடும் தட்டுப்பாடு போன்ற சவால்களை வெற்றிகரமாக எதிர் கொண்டு தனது சேவைகளை திறம்பட வழங்கியது. மேலும், 1996இல் மீண்டும் யாழ்.பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில், வணிகர் பலர் தமது செயற்பாட்டு மூல தனம் அனைத்தையும் இழந்த நிலையில், மக்கள் வங்கி முன்னின்று, எமது வணிகர்களுக்கு தற்காலிக மேலதிகப்பற்று மற்றும் குறுகிய காலக்கடன்கள் ஊடாக நிதிச் சேவையை வழங்கி, யாழ். மாவட்டத்திற்கு அத்தியாவசிய உணவுப்பண்டங்களும் ஏனைய அவசிய நுகர்ச்சிப் பொருட்களும் கிடைக்க உதவிபுரிந்து, யாழ். மக்கள் பஞ்சம் பட்டினியிலிருந்து விடுபட உதவியதை யாழ். மக்கள் இன்றும் மறக்கமாட்டார்கள். இதேபோன்று, 2009ல் போரின் இறுதிக்கட்டத்திலும், இடம்பெயர்ந்த வங்கிகள் சிறந்த சேவைகளை வழங்கின. இதன்போதுகூட, தொலைந்த நகைகளுக்கான தற்போதைய சந்தைப்பெறுமதியினை வழங்கியும், வட்டிச்சலுகை வழங்கியும் உதவிவருவதைக் காணலாம்.

போர் முடிவுக்கு வந்ததைத்தொடர்ந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் திட்டங்களின் கீழ் நிதிசார் அபிவிருத்திக்கான முழுமையான பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, சிறிய நடுத்தரக்கைத்தொழில்கள், சுயதொழில், வறுமையொழிப்பு போன்ற சகல துறைகளினூடாகவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்வதற்கான நிதியியல் பங் களிப்பை தொடர்ச்சியாக வழங்கிவருவதன் ஊடாக மக்கள் வங்கியானது தனது ஆரம்ப காலக்கோட்பாடான கிராமிய பொருளாதார அபிவிருத்தியின்மீது தொடர்ச்சியான அக்கறையையும் அனுசரணையையும் வழங்கி வருகிறது.

1980களில் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த தசாப்தத்தில் பிரபல்யம் பெற்றிருக்கும் நுண்பாக நிதியியல் நிதிசார் சேவையானது, இன்று பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமங்கள் தோறும் கீழ்மட்ட வருவாய்பெறும் குடித்தொகைப்பரம்பலை இனங்கண்டு, தொழில் முயற்சிகளுக்கான ஆலோசனைகளை அபிவிருத்தி செய்தல், தொழிலுக்கான நிதிசார் முதலீட்டுக்கு அனுசரணை வழங்குதல், வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல், வருமானத்தைப் பெருக்குதல், சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்தல் என படிப்படியான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதன் ஊடாக வறுமையொழிப்பு தொடர்பான ஆக்கபூர்வமான முன்னேற்றங்களை ஏற்படுத்தி, கிராமிய பொருளாதார அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்த நாடளாவிய பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் வகையில், மக்கள் வங்கியின் தொடர்ச்சியான பங்களிப்பு காத்திரமானதாகும்.

இது எவ்வாறு இருப்பினும், மக்கள் வங்கியானது, தனது பொருளாதார ரீதியான கடமைப்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லும் அதேவேளை, மாறிவரும் சர்வதேச நிதிச்சந்தை நடவடிக்கைகள், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட உலகளாவிய ரீதியான நிதி நெருக்கடி, அதிநவீன தகவல் தொழினுட்ப முன்னேற்றங்களின்பாற்பட்ட நவீன வங்கியியல் நடவடிக்கையுடனும் ஒருங்கிணைந்த உயர்தரமான வங்கிச்சேவையினை முன்னெடுத்துச்செல்வதை அவதானிக்கமுடியும்.

சிறிய நடுத்தர தொழிலாண்மைக்கான முக்கியத்துவம் இன்று நன்குணரப்பட்டுள்ளது. இத்துறைக்கான உயர்தரப்பங்களிப்பு மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வருவதை இவற்றின் தொடர்ச்சியாகக் காணலாம்.

அரைநூற்றாண்டுச் சேவைதனை உறுதிபட வழங்கிய மக்கள் வங்கியானது தனது சேவைக்கான அங்கீகாரமாக மக்கள் மனதை வென்ற வங்கி என்னும் விருதினை **'SLIM Awards'** தொடர்ச்சியாக கடந்த 05 வருடங்களாக வென்றுள்ளதுடன் மட்டுமன்றி, **AA+** தரப் படுத்தலினையும் பெற்றுள்ளது.

இங்ஙனம், இலங்கையின் வங்கியியல் துறையில் மிகப்பெரும் சக்தியாக வளர்ச்சிபெற்று, அதிகூடிய கிளை வலையமைப்பையும் அதிகூடிய ஊழியர் வளத்தையும் வங்கியின் பெறுமதிமிக்க சொத்தாக பதின்மூன்று மில்லியன் வாடிக்கையாளர் தளத்தையும் ஒருங்கே பெற்றுள்ள வெற்றி மக்கள் வங்கியின் சாதனையாகும்.

அரச வங்கியாகவும் மக்களின் வங்கி என்ற ரீதியிலும் மக்கள் வங்கியின் பொன்விழா கொண்டாட்டங்களுக்கு நாட்டு மக்கள் அனைத்துமே உரித்துடையவர்களாவர். எமது நாட்டின் தேசிய சொத்துக்களில் ஒன்றாக திகழும் மக்கள் வங்கியின் 50வது பிறந்தநாள் கோலாகலத்தை எமது வங்கியுடனும், ஊழியர்களுடனும் அனைத்து வாடிக்கையாளர்களுடனும் எமது நாட்டின் சகல சகோதர சகோதரிகளுடன் இணைந்து குதூகலத்துடன் கொண்டாடுவதுடன் எமது வங்கிக்கு எம் அன்பையும் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிரதேச முகாமையாளர், உதவிப் பிரதேச முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள், சேவை நிலைய முகாமையாளர்கள், யாழ்.பிராந்திய அனைத்து மக்கள் வங்கி ஊழியர்கள்.**



மத்திய வங்கி ஆளுநர் யா/ஸ்ரான்லி வீதிக் கிளையில் கடன் வழங்கல் நிகழ்வில்...

**மக்கள் வங்கியை வாழ்த்தும் பிரமுகர்கள், வாடிக்கையாளர்களின் வாழ்த்துச் செய்திகள் தொடர்ந்து வெளிவரும்.**



சிசு உதான சாதனையாளர்களுக்குப் புலமைப் பரிசு வழங்கல்.

சிசு உதான மாணவர்களுடன்...



வடமராட்சி மக்களுடன் இணைந்து புதுவருடக் கொண்டாட்டங்களில் மக்கள் வங்கி



புலோலியில் மக்கள் வங்கியின் சேவை நிலையம் மக்கள் வங்கித் தலைவர் ய.கருணாஜீவ அவர்களால் திறந்து வைக்கப்பட்டபோது....



ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றுவதற்காக மக்கள் வங்கியின் பங்களிப்பான சேமிப்பு மேம்படுத்தல் நோக்கிலான நடைப்பயணம் யாழ்ப்பாணத்தில்



புத்தூர் பிரதேச மக்களுக்கான அபிவிருத்திக் கடன் வழங்கல்

## 2006 - 2011 வரை கிடைத்த விருதுகள்





**பொன் விழாக் கொண்டாடும் இவ்வேளையில் மக்கள் வங்கியில் இன்று தெரிவாகும் 27 அதிர்ஷ்டசாலிகள்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையில் பெருந்திருவிழா பக்திபூர்வமாக இன்று ஆரம்பம்

சக்தி பீடங்களின் புவனேஸ்வரி பீடமாக வரலாற்றுப் புகழ்மிக்க நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக ஆரம்பமாகிறது. திரு விழாக் காலத்தில் தீவுப்பகுதிக்கு மட்டு மல்ல யாழ். குடாநாடே களை கட்டும் காலமாகும். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மதவேறுபாடின்றி மக்கள் நயினாதீவில் கூடி அம்பாளின் அருளை வேண்டித் தொழுவது நாட்டின் நலனுக்கும் சுபீட்சத்துக்குமான ஒரு அம்சமாகும். இவர்களுடன் புலம் பெயர்ந்து வாழும் மக்களும் அன்னையின் பாதம் தொழுவதற்காக நயி னையை நாடி வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடும் திருவிழா என்பதால் அடியார்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு என்றும் சாதாரண விடயமல்ல. கடல் பாதுகாப்பு அவசியம். போக்குவரத்தில் ஈடுபடும் சேவைகள் உகந்ததா என்று பரிசோதிக்கப்பட்டு அனுமதி கிடைத்தால் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது.

ஒரு படகில் சுமார் 80 பயணிகள் வரை பொதுவாக அனுமதிக்கப்படுகிறார்கள். இருப்பினும் படகின் உள்ளே பயணிகள் படும் சிரமங்கள் கணகில் எடுக்கப்படுவதாக இல்லை. படகினுள் வளைந்தும், சரிந்தும், குனிந்தும் நெருக்கமாக நின்றபடியே மக்கள் பயணிக்



கிறார்கள். சாதாரண நாள்களிலேயே இந்த நிலை காணப்படுகிறது. அத்துடன் இப்போதெல்லாம் பாதுகாப்பு அங்கி அணிவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அங்கிகளுடன் எண்பது பேர் படகில் எவ்வாறெல்லாம் சிரமப்படப்போகிறார்களோ?

அதுமட்டுமன்றி மக்கள் நீண்ட வரிசையில் நெடுந்தூரம் உச்சி வெய்யிலில் படகுக்காக துறைமுகத்தில் நிற்க வேண்டியுள்ளது. இதுவும் வழமையாக காணப்படும் ஒன்றே. இந்த இடையூறுகள், நெருக்கடிகளைத் தவிர்க்கக்கூடியதாக நயினாதீவுக்கு செல்லும் யாத்திரிகர்கள் புங்குடுதீவு, கழுதைப்பட்டி துறைமுகத்தின் ஊடாக பயணிக்கவும் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தால் ஒரு நல்ல போக்குவரத்துச் சேவையை வழங்கியதாக அமைந்திருக்கும்.

புங்குடுதீவு, கழுதைப்பட்டி துறைமுகத்தை நயினாதீவு போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் பட்சத்தில் அது மிகவும் வசதியாக இருக்கும் என்பது ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டதுதான் கடந்த காலங்களில் நயினாதீவுப் போக்குவரத்திற்காக இந்தத் துறைமுகமே பயன்படுத்தப்பட்டது. தற்சமயம் அதிக எண்ணிக்கையான யாத்திரிகர்கள் நயினாதீவு செல்வதால் இது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாக உள்ளது.

பொதுமக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கைகளுக்காகத் தேவை யான பகுதிகளில் தாங்கிகளை வைத்து நீர் நிரப்பும் பணிகளை மேற்கொண்டுள்ள வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகம் சுகாதார சேவைகளையும் வழங்க முன்வந்துள்ளது. நயினாதீவில் உள்ள பொது மலசலகூடங்களுக்கு மேலதிகமாக பத்து மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் சுத்திகரிப்புக்காக 24 மணி நேர தொழிலாளர்களையும் தயார் நிலையில் வைத்துள்ளது. அனைத்து உணவு நிலையங்களும் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும். இலையான்களையும், தொற்றுக் கிருமிகளையும் அழிக்கும் பொருட்டு உரிய மருந்து களை விசிறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வித சிரமமின்றி குடிதண்ணீர், சுகாதார வசதிகளை மக்கள் பெறக்கூடிய வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைச் செயலாளர் கே.தவராஜா தெரிவிக்கிறார்.

மின்சார சபை புதிய மின்பிறப்பாக்கி ஒன்றை கடற்படையின் உதவியுடன் அனுப்பிவைக்கவுள்ளதாகவும் அதனால் மின்தடை ஏற்பட சாத்தியமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. பொலி சார் ஆலயத்தின் சுற்றாடலில் ஏற்படக் கூடிய அசம்பாவிதங்கள், திருட்டுக்களை தவிர்ப்பதற்கான ஒழுங்குமுறைகளை கையாளவுள்ளனர். கடற்பாதுகாப்பில் கடற்படையின் கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் போக்குவரத்தில் சிரமங்களின்றியும் பாதுகாப்பாகவும் சென்று திரும்பக்கூடியதாக வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந்திரா விஜய குணரட்ணவின் வழிகாட்டலின் புங்குடு தீவு கடற்படை அதிகாரி கொமாண்டர் நிசாந்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ஆலய திருவிழாக் காலத்தின்போது கட்டளைத்தளபதி நேரடியாக நிலமைகளைப் பார்வையிடுவார் எனவும் தெரிவிக்கின்றது.

லக்ஷ்மன்

திருவிழாக் காலத்தில் நீதிமன்றம் வைத்திய சேவைகள் என்பவற்றுடன் வேலணை பிரதேச செயலகத்தின் தற்காலிக பணிமனையும் ஆலய வீதியில் அமைந்திருக்கும். நயினாதீவில் உள்ள பாடசாலை மாணவர்களின் தொண்டர் சேவை, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவுகளின் பணிகளும் இடம்பெறும். இன்று தொடக்கம் முதல் பூங்காவனத் திருவிழா வரையும் அடியாருக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்ய அமுத் சுரபி அன்னதான சபை தயாராக உள்ளது. மக்கள் நலன் தொடர்பாக அனைத்து சேவைகளினதும் ஆலய அறங்காவல் சபையின் தனது கண்காணிப்பை வைத்திருக்கும். நயினா தீவு இந்து இளைஞர் மன்றம் உட்பட ஏனைய பொது நிறுவனங்களும் வழமை போல் தமது சேவையை நல்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் பிரதேசத்தில் சுயதொழில் நன்கொடை

நாவற்குழி ஜூலை1

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 பேருக்கான சுயதொழில் உதவிக் கொடுப்பனவு வந்து சேர்ந்துள்ளது.

உரியவர்களை அலுவலக நாள்களில் தேசிய அடையாள அட்டையுடன் சமூக சேவைகள் கிளைக்கு வருகைதந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுகள் வந்து சேர்ந்துள்ளோரின் விவரங்கள் வருமாறு:-

சி.இந்திரவதி - கதிரிப்பாய், சி.சுதாஸ்கரன்- கதிரிப்பாய், சிறி.பத்மினிகுமாரி - பத்தமேனி, வ.சுதர்சினி - அச்சுவேலி, க.குமுதினி - கதிரிப்பாய், செ.மாலா - அச்சுவேலி, சி.சந்திரசேகர் - அச்சுவேலி, சி.சிவரூபன் - உரும்பிராய், க.மயூரி - புத்தூர், மோ.நந்தகுமார் - கோப்பாய், ப.செல்வநாதன் - வாதரவத்தை, து.தர்மசீலன் - புத்தூர், டெலதாஸ் வனிதா - அச்செழு, ப.கஜேந்திரன் - உரும்பிராய்.

(ம-121)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 ★ 11 ★ 1948



மறைவு 01 ★ 06 ★ 2011

அமரர் கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

கடந்த 01.06.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (1960) (19-50-45)

குடும்பத்தினர்

79 ஆவது பிறந்த நாள் நினைவலைகளும் 7 ஆம் மாத நினைவஞ்சலியும்



பிறப்பு: 01.07.1933
இறப்பு: 08.12.2010

அமரர்
சின்னையா சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற எழுது வினைஞர்)

இல்லறம் என்னும் சோலையிலே
வந்துதித்த எம் அருமை அப்பாவே
நிழல் போல தேடுகின்றோம்
உங்கள் அழகு வதனம் எங்கே?
உங்கள் சிரிப்பெங்கே?
நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை எங்கே?
நீங்கள் போன இடம்தான் எங்கே?
மம்மி தேடுகின்றா? உங்கள்
அன்பு முகம் என்றென்றும் எம்
நெஞ்சை விட்டகலாது



ஏழாலை கிழக்கு,
இலந்தகட்டி, ஏழாலை. (48,24,25)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அடகு நகைகளை மீட்க ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அடகு வைத்த நகைகளை உங்களால் மீட்க முடியாத சந்தர்ப்பத்தில் அதை நாங்கள் எங்கள் பணம் மூலம் மீட்டு, திரும்ப அடகு வைப்பதற்கு உதவுவோம். (இந்தச் சேவைக் கட்டணமாக 2% அறவிடப்படும்) அல்லது பவுணின் அதிக பெறுமதிக்கு வாங்குவோம். அநியாயமாக உங்கள் உடைமைகளை இழக்காமல், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு உடனே அழையுங்கள் 0774050936.

(சி/1425) (45)

நீங்காத நினைவுகளில் ஆண்டுகள் இருபத்தைந்து

அன்னை மடியில்:
21.03.1940

அரண் அடியில்:
01.07.1986



அமரர் இராசையா தர்மதுரை

(கௌரி தங்கமாளிகை உரிமையாளர், மீனாட்சி அம்மன் கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி

ஆண்டுகள் இருபத்தைந்து ஐயா நீங்கள் அவனிவிட்டு
பூண்ட கடமை நாம் பொழுதெல்லாம் செய்தாலும்
நீண்ட பெருமூச்சும் நெட்டுயிர்ப்பும் உமை நினைத்தால்
மீண்டு வாராதோ என்றேங்கும் நினைவலைகள்
தூண்ட கனவுகளில் ஆயிரமாய் கதைகள் சொல்வீர்
வேண்டுகின்றோம் உங்கள் ஆத்மா சாந்தி நிலைக்க என்று

[illegible] (48,19,20)

அன்பு மகள் ஜான்சியும்
குடும்பத்தினரும்

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

CIC இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து 450/- வியாபாரிக்கு விசேட கழிவு வழங்கப்படும். நீர்வேலி வடக்கு மாதா கோயில் முன்பு.

தொ.பே: 0776331914 (5318) (23-25-45)

காணி விற்பனைக்கு

செம்மணி வீதி, மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலைக்கு அண்மையில் 100 மீற்றர் தூரத்தில் செம்மணி வீதி முகப்பாகக் கொண்ட (காப்பெற் வீதி) 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொ.பே: 075 0420775 071 1276747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை மாற்றம்; அப்போதுதான் ஈழத் தமிழருக்குத் தீர்வு கிட்டும்

## தொல்.திருமாவளவன் கருத்து

சென்னை,ஜூலை1

இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் தேவை. அப்போது தான் இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கும், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கும் நிரந்தரமான தீர்வு கிடைக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன்.

நெல்லையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

ஈழத் தமிழர்கள் பிரச்சினை சர்வதேச சிக்கல்கள் நிறைந்தது. இந்த விடயத்தில் இலங்கைக்கு சீனா, ரஷ்யா, உள்ளிட்ட நாடுகள் ஆதரவாக உள்ளன. எனவே மத்திய அரசு அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் தி.மு.க. அரசு பெரும்பான்மையற்ற அரசாக இருந்தது. அதனால் தான் அதனால் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு மத்திய அரசை வலியுறுத்த முடியவில்லை - என்றார் அவர். (வ)



# பொதுமக்கள் ஆயுதங்கள் வைத்திருக்க தடையில்லை

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

பொதுமக்கள் ஆயுதங்களை வைத்து கொள்ளலாம். அதற்கு உரிமம் பெறுவதற்கான அனுமதியை சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகளைச் சுட்டி காட்டி காவல் துறையினரோ அல்லது வருவாய் அதிகாரிகளோ மறுக்க முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டில், எஸ். ராஜ்கபூர் என்னும் விசவசாயி இரண்டு குழல் துப்பாக்கி வைத்துக் கொள்வதற்கு உரிமம் கேட்டு விண்ணப்பித்தார். அதற்கான அனுமதியை வருவாய் துறை நிர்வாக ஆணையாளர் மற்றும் தேனி மாவட்ட வருவாய் அதிகாரி ஆகியோர் மறுத்தனர்.

இதனை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பில், நீதிபதி டி. ஹரிபரந்தாமன், விண்ணப்பதாரர் எந்த விதமான சட்டத்திற்கு புறம்பான காரியங்களில் ஈடுபட வில்லை என்ற நிலையில், அவரது பாதுகாப்பிற்காக ஆயுதங்கள் வைத்துகொள்வதற்கு உரிமம் வழங்கவேண்டும்.

அதனை துறை தொடர்பான அதிகாரிகள் மறுக்க முடியாது என்று கூறினார். (வ)

# இலங்கைக்கு புகையிலை கடத்த முயன்றவர்கள் கைது

ராமேஸ்வரம், ஜூலை 1

ராமேஸ்வரம், தங்கச்சி மடம் அருகே அரியங்குன்று கடற்கரை கிராமத்தில் இருந்து இலங்கைக்கு உயர்தர புகையிலையைக் கடத்த முயன்ற 2 பேர் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

10 சாக்கு மூடைகளில் இருந்த ரூ 15 லட்சம் மதிப்பிலான புகையிலையை மேற்படி நபர்களிடம் இருந்து கியு பிரிவு பொலிஸார் கைப்பற்றினர்.

இதேவேளை உயர்தர இந்திய புகையிலைக்கு சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு அதிக அளவில் தேவை உள்ளமை குறிப்பிடத்தக்கது.(வ)



தமிழக அமைச்சரவையில் சிறுபான்மை அமைச்சராக நியமிக்கப் பட்ட முகமது ஜானுக்கு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். அருகில் முதல்வர் ஜெயலலிதா அமர்ந்திருக்கிறார்.

# ராஜபக்ஷவை எதிர்த்து சீமான் போட்டியிடலாம்

## எஸ்.வி.சேகர்

இலங்கைக்குச் சென்று அந்த நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரம் செய்யலாம். அதுமட்டுமல்லாது அவரை எதிர்த்து தேர்தலில் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் போட்டியிடலாம் என்று நடிகரும் மயிலாப்பூர் தொகுதி முன்னாள் சட்ட பேரவை உறுப்பினர் எஸ்.வீ.சேகர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை மக்கள் விரும்பவில்லை. பெரும்பாலான வாக்காளர்கள் ஆட்சி மாற்றத்தையே விரும்பினர். சிறப்பாகச் செயற்பட்டு வரும் அ.தி.மு.க அரசு, கடந்த 2001, 2006 ஆம் ஆண்டுகளில் அமைந்த ஆட்சி போல அதன் ஆட்சி அமையும் என்றார் அவர்.

# இலங்கையுடனான பொருளாதார ஒப்பந்தங்களை ரத்துச் செய்க

## வைகோ பிரதமருக்கு வலியுறுத்து



சென்னை, ஜூலை 1

இலங்கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ஒப்பந்தங்கள் அனைத் தையும் இந்தியா இரத்துச் செய்யவேண்டும் என்று ம.தி.மு.க .பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள் ளார். இது குறித்து மதுராந்தகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

இலங்கையில் தமிழர்கள் மீது மஹிந்த ராஜபக்ஷ அரசு நடத்திய தாக்குதலுக்கு, பதிலடியாக இலங் கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ஒப்பந்தங்கள் அனைத்தையும் இந்தியா இரத்துச் செய்ய வேண்டும். தமிழர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தி வரும் தாக்குதல் சம்பவங்கள் நீடித்து வருகின்றன. இதை இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும்.

உலகில் பல நாடுகள் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டபோதும் 7 கோடி தமிழர்கள் குடிமக்களாக இருக்கக்கூடிய இந்திய நாட்டின் அரசு ஒப்புக்குக் கூட போரை நிறுத்தச் சொல்லவில்லை. தமிழினப் படு கொலைக்குத் துணை போனது இந்திய அரசு. எனவே, இது மன்னிக்க முடியாத துரோகம். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவித்து சர்வதேச நீதிமன்றம் மூலம் தண்டிக்க வேண்டும். - இவ்வாறு அவர் தெரிவித்தார். (வ)

# ஈழத்தமிழர் படுகொலை விடயம் தொடர்பில் இந்தியா இனியும் மௌனம் காக்கக் கூடாது

## அன்பழகன் வலியுறுத்து

புதுக்கோட்டை,ஜூலை1

அப்பாவி ஈழத் தமிழர்களை கொன்றழித்த பிரச்சினையில் இனியும் இந்தியா மௌனம் காக்கக் கூடாது என்று திராவிடர் கழக மாநிலப் பேச்சாளர் அதிரடி அன்பழகன் வலியுறுத்தினார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவித்து கைதுசெய்து தண்டிக்க வேண்டும் என வலியுறுத்தி, புதுக்கோட்டை சின்னப்பா பூங்காவில் திராவிடர் கழக மாணவரணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்:

இலங்கையில் நடத்தப்பட்ட இனப் படுகொலை விவகாரத்தில் இந்தியா இப்போதும் மழுப்பலாகவே பதிலளித்து வருகிறது. குறிப்பாக இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று இந்தியா சொல்லி வந்தது. அங்கு நடந்த கொடூரங்கள் மறைக்கப்பட்டன.

ஆனால், அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி உட்பட ஏராளமான நாடுகள் இலங்கைப் பிரச்சினையில் நடவடிக்கை கோரி ஐ.நா. சபையில் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கைப் பிரச்னையில் சுமூகத் தீர்வு காண்பதற்காக நோர்வே ஆயிரக்கணக்கான கோடிகளைச் செலவிட்டி ருக்கிறது.

பிரிட்டன் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஆனால், இந்தியா மட்டுமே மௌனமாக இருக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (வ)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தீராததற்கு காங்கிரஸின் மனப்போக்கே காரணம்

## சாடுகிறது புதிய தமிழகம் கட்சி

மதுரை,ஜூலை 1

மத்திய காங்கிரஸ் அரசு தமிழருக்கு எதிரான மனப்போக்குடன் இருப்பதே இலங்கைப் பிரச்சினைக்குக் காரணம் - என்று மதுரையில் புதிய தமிழகம் தலைவரும் சட்டபேரவை உறுப்பி னருமான கிருஷ்ணசாமி குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

சமச்சீர் கல்வி திட்டத்தை தமிழக அரசு கொள்கை அளவில் ஏற்றது வரவேற்கத்தக்கது. தி.மு.க. அரசு அவசர கோலத்தில் அதை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. திட்டத்தின் நோக்கம் கல்வித் தரத்தை உயர்த்துவது. தற்போதைய சூழ்நிலையில் அரசு, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றிய பாடசாலைகளில் கட்டமைப்புகள் இல்லை. போதிய கட்டடங்கள், ஆசிரியர்கள், உபகரணங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற வசதிகளை அரசு முதலில் செய்ய வேண்டும்.

இவற்றைச் செய்யாமல் பாடத்திட்டத்தில் மட்டும் மாற்றம் கொண்டு வந்தது திட்டத்தின் நோக்கத்தைச் சீரழித்து விடும். தி.மு.க. அரசு காலத்தில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் சுயபுராணம் பாடுவதாக இருந்தன. சர்வதேச தரத்துக்கு இணையாகக் கல்வித் தரம் உயர்த்தப்பட வேண்டும். அரச பாடசாலைகளில் ஆசிரியர்களின் திறன் மேம்படுத்தப்பட வேண்டும்.

கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் இந்திய மீனவர்களைக் காப்பாற்ற முடியும். இது குறித்து தமிழக சட்டசபையில் அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த இரு தீர்மானங்கள் வரவேற் கத்தக்கன.

பா.ஜ.க. ஆட்சியில் இருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை எழவில்லை. காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்தது. காங்கிரஸ் அரசு தமிழருக்கு எதிரான மனப்போக்கை கொண்டதே இதற்கு காரணம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஜூலை 01

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2412 ஆம் இலக்க கடந்த செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பில் "N" என்ற ஆங்கில எழுத்தும் 2/8/3/7/9/1 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

2/8/3/7/9/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/3/7/9/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/7/9/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 144 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/9/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,382 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,959 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

1 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,37,443 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 2/8/3/7/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/8/3/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 141 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/8/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,390 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,854 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"N" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 55,076 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

(ற)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கார்த்திகேசு மகேந்திரன்
[இளைப்பாறிய நீர் விநியோகப் பகுதி ஊழியர், ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை]

தோற்றம் 1944.06.05 மறைவு 2010.07.11
திதி: 02.07.2011

பாசத்திற்கு உறைவிடமாய்
நேர்மைக்கு இலக்கணமாய்
தன்னம்பிக்கைக்கு உதாரணமாய்
அறிவுக்குப் பொக்கிசமாய்
எம்மை அன்போடும் பண்போடும் அரவணைத்த எம் அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

(சி/1461)

முதலிக்குட்டியா வளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தனவோ
முப்பொழுதும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சோடு இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை நாம் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

தோற்றம் : 27-05-1942
மறைவு : 02-07-2008
(திதி: அமாவாசை)

அமரர் திருமதி ராதாதேவி பத்மநாதன்
(ராதா ரீச்சர்)

உம் பிரிவால் துயருறும்
கணவர், மகன், மருமகள், பேரன்
மற்றும் குடும்பத்தினர்

95, தாவடி தெற்கு,
கொக்குவில்




யாழ்ப்பாணம், ஜூலை 1

புனித யாத்திரைத் தலமான புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளன.

திருவிழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கூட்டு வழிபாடு இடம்பெற்று தொடர்ந்து 8.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 9.30 மணிக்கு நாதஸ்வர ஆராதனையுடன் புனிதரின் தேர்ப்பவணி இடம்பெறும். (ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை கண்ணகைபுரம் இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.15 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

சிவஸ்ரீகா.புவனேஸ்வரக் குருக்கள்தலைமையில் திருவிழாக் கிரியைகள் இடம் பெறும். (ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண் டபப் பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்குத் தேர்த் திருவிழா வும், மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண் டபப் பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். ஈசானச் சிவாச் சாரி யார் இ.ரமணீதரக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும்.

(ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்தமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர் வரும் 6ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 1

துன்னாலை தெற்கு பூதேஸ்வர சிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. 6ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற)

* * *

தென்மராட்சி, ஜூலை 1

சாவகச்சேரிடச்சு வீதி ஸ்ரீபழநி ஆண்டவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீபழநி வேல் பவனியும், மறுநாள் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

''சிவாச்சாரிய ஜோதி'' சிவபிரம்மஸ்ரீ சிவ பிரபாகரன் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் நடைபெறும். (ற-207)

* * *

தென்மராட்சி, ஜூலை 01

கச்சாய் கடலேரியில் உள்ள சாலம்பன் தீவு கிருஸ்ணர் ஆலயத்தின் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ற)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 01

பன்னாலை தெற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாவின் பூர்த்தி நாளான இன்று வெள்ளிக்கிழமை சங்காபிசேகம் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் போது ''மாவை சிவநாதம்'' பட்டிமன்றக் குழுவினரின் பட்டிமன்றம் சைவப்புலவர் கந்த சத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-9)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 01

பருத்தித்துறை சுப்பர் மடம் முனீஸ்வரன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை சமுத்திரப் பகுதியில் நடைபெறவுள்ளது. (ற-319)

* * *

யாழ்ப்பாணம் ஜூலை 01

கோப்பாய் தெற்கு தனிப்பனை பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.(ற)

ST.JOHN'S COLLEGE, JAFFNA
ANNUAL PRIZE GIVING 2011
Saturday 2nd July 2011
at 10 a.m.

Chief Guests:
The Rt.Rev.D.R.Canagasabey
Bishop of Colombo
&
Harshini Canagasabey

Chairman
Ven S. P. Nesakumar
Archdeacon of Jaffna &
Manager of the College

Parents, Old Boys & Well-wishers are cordially invited

(c/1426) Principal, Staff & Students.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 ★ 05 ★ 1959



மறைவு 01 ★ 06 ★ 2011

செல்வி பரமேஸ்வரநாதன் பாமதி (பாமா)
[தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவியும், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியையும், பின்னர் கல்விச் சேவைக்கால ஆலோசகர் (I.S.A) (சமூகக்கல்வி)]

இமைகள் மூடித்திறப்பதற்குள்
நாள்களோ முப்பத்தொன்றாகின
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்

திருமதி தேவமலர் பரமேஸ்வரநாதன் (தாய்),
ராதா, ரவீந்திரன் (சகோதரர்கள்) மற்றும்,
உறவினர்கள்.

தகவல்:
திரு. ஏ.சி. விஜயராசசிங்கம், (J.P),
[தாய்வழிமாமன்-ஓய்வுபெற்ற கணித முதன்மை ஆசிரியர்]
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

(5328)(19-2345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நடவடிக்கைகளை நிறுத்துக சூகிக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளது

யாங்கூன், ஜூலை 1

மியான்மர் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூகியும் அவரது கட்சியும் தங்களது அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என அந்தநாட்டு அரசு கட்டளையிட்டுள்ளது.

மியான்மரில், கடந்தாண்டு ஆட்சியில் இருந்த ராணுவம் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வந்தது. அதன் புதிய தேர்தல் ஆணைக் குழுவில் சூகியின், சுதேசிய ஜனநாயக லீக் கட்சி பதிவு செய்து கொள்ளவில்லை. கடந்த நவம் பரில் நடந்த பொதுத் தேர்த லையும் புறக்கணித்தது. இதனால், சூகியின் கட்சியைக் கலைத்து, ராணுவ ஆட்சி உத்தரவிடப்பட்டது.

அதேவேளை கடந்த நவம்பரில், சூகி விடுதலை செய்யப்பட்ட பின், அவரது கட்சி பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக நாடு முழு வதும் சுற்றுப் பயணம் செய்யப் போவதாகவும் சூகி சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மியான்மர் உள்துறை அமைச்சகம், சூகிக்குக் கடிதம் எழுதியுள்ளது.

அதில், சூகியும் அவரது கட்சியினரும் உண்மையில் ஜனநாயக ரீதியில் கடமையாற்ற விரும்பினால், நாட்டின் அமைதி மற்றும் ஒழுங்கைக் குலைக்கும் முயற்சியைக் கைவிட்டு, சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும். அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என, குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத்தகவலை மியான்மரில் இருந்து வெளிவரும் 'சுதி நியூலைட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

# உகண்டாவிலுள்ள பள்ளி மீது மின்னல் தாக்கி 18 குழந்தைகள் பலி

கம்போலா, ஜூலை 1

உகண்டாவில் பெய்த கனமழையால், பள்ளி மீது மின்னல் தாக்கியதில் 18 குழந்தைகள் பரிதாபமாக பலியாயினர். 50 இக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உகண்டாவின் தலைநகரான கம்போலாவின் வடமேற்குப் பகுதியில் கனமழை பெய்து வருகிறது. மழை காரணமாக கிர்யான் டோங்கோ கிராமத்திலுள்ள ஆரம்பப்பள்ளி மீது மின்னல் தாக்கியத்தில் 18 குழந்தைகள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இவர்களில் 15 பேர் பெண் குழந் தைகள், 3 பேர் ஆண் குழந்தைகள்.

மேலும் 21 இக்கும் மேற்பட்டவர்கள் உடல்கள் கருகி உயிருக்கு ஆபத்தான நிலையில் முலாகோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் போலா நகர காவல்த்துறை செய் தித் தொடர்பாளர் ஜூடித் நபோ கூபா கூறினார்.

இந்தப்பகுதியில் அடிக்கடி மின்னல் தாக்குவது வழக்கமான ஒன்றாக உள்ளது. கடந்த ஒரு வாரங்களில் நிகழ்ந்த மின்னல் தாக்குதல்களில் இதுவரை 28 பேர் பலியாகியுள்ளனர் என கம்போலா நகர வானிலை ஆய்வுமைய அதிகாரி பாஸிலிர்வா கூறினார்.

# நெதர்லாந்தில் மதச் சார்பு ரீதியில் கால்நடைகளை வெட்டத் தடை

ஆம்ஸ்டர்டாம்,ஜூலை 1

நெதர்லாந்து நாட்டில், 'ஹலால்' மற்றும் 'கோஷர்'போன்ற மதச் சார்பு முறைகளில், உணவுக்காக கால்நடைகளை வெட்ட, அந்தநாட்டு நாடாளுமன்றம் தடை விதித்துள்ளது.

கால்நடைகளை மதச்சார்பு ரீதியாக வெட்டுவதற்கு, அந்தநாட்டு சட்டத்தில் தடை விதிக்கப்பட்டு இருந்தாலும், 'கால்நடைகளுக்கு அதிக வலி கொடுக்க மாட்டோம் என்று நிரூபித்தால், கால் நடைகளை வெட்டுவதற்கு அங்கீகாரம் வழங்கப்படும்' என்று, தெளிவில்லாமல் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில், மத ரீதியில் கால்நடைகளை வெட்டுவதற்கு தடை விதிப்பது குறித்து, நெதர்லாந்து பொருளாதார விவகாரத்துறை இணை அமைச்சர் ஹென்க் ப்ளக்கர்ஸ் கூறுகையில் ''மத ரீதியிலான விஷயங்களில், இந்தத் தடை எந்தளவிற்கு பொருந்துகிறது என்று பார்க்க வேண்டும்'' என்றார்.

புதிய சட்டத்துக்கு நெதர்லாந்து நாட்டில் வசிக்கும் யூதர்கள் மற்றும் முஸ்லிம்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தங்களது மத சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்றும் கூறியுள்ளனர்.

மதச்சார்பு ரீதியில் கால்நடைகளை வெட்டுவதற்கு லக்சம்பர்க், நோர்வே, சுவீடன், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது, நெதர்லாந்து நாட்டிலும் தடை கொண்டு வரப்பட்டுள்ளது.

## சமர்ப்பிப்பு....



உக்ரையின் அதிபர் விக்டோர் யானு கோவிச் (வலது) மொங்கோலியன் அதிபர் சாகியா எல் பெஜ்டோர் இருபக்க ஒப்பந்தத்தை சமர்ப்பித்தனர்.

# மொனாகோ இளவரசருக்கு அரசமுறைப்படி திருமணம்



லண்டன், ஜூலை 1

மொனாகோ நாட்டின் இளவரசருக்கும், தென்ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் நீச்சல் வீராங்கனைக்கும் இன்று அரசகுடும்ப முறைப்படி திருமணம் நடக்கிறது.

மொனாகோ நாட்டின் இளவரசர் இரண்டாம் ஆல்பர்ட் (வயது -53), தென்ஆபிரிக்கா நாட்டின் சார்லினிவிட்ஸ்டாக்கை (வயது-33) திருமணம் செய்து கொள்ள இருக்கிறார். இவர்கள் திருமணம் முதல்முதலாக மொனாகோ நாட்டின் அரச குடும்பத் திருமண முறைப்படி நடக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளாக இருவரும் காதலித்து வந்தனர். 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி இவர்களது திருமண நிச்சயதார்த்தம் மொனாகோ அரண்மனையில் நடந்தது. அப்போது இவர்களது திருமணத் திகதி அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது. அதன்படி இன்று அரச குடும்ப முறைப்படி திருமணம் நடக்கிறது.

இந்த அரசகுடும்பத் திருமணத்தில் பிரான்ஸ் அதிபர் சர்கோஸி, சுவீடன் மன்னர் காரல் கௌஸ்டாப், மற்றும் உலகப்புகழ்பெற்ற மொடல் அழகி நெளமிகேம்பல் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். கடந்த 2005ஆம் ஆண்டு மொனாகோ நாட்டின் இளவரசராக இருந்த மூன்றாம் ரெயினிர், 82 வயதில் இறந்ததையடுத்து இவரின் ஒரே மகனான இரண்டாம் ஆல்பர்ட் (வயது-53) அடுத்த இளவரசராகப் பொறுப்பேற்றார்.

# உலகில் சிறந்த 10 போராட்டங்களில் இடம்பிடித்தது உப்பு சத்தியாக்கிரகம்

நியூயோர்க், ஜூலை 1

உலக நாடுகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய 10 போராட்டங்களின் பட்டியலை அமெரிக்காவின், 'டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் மகாத்மா காந்தியின் உப்பு சத்தியாக்கிரகமும் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவில், சுதந்திரப் போராட்ட காலத்தின் போது குஜராத் மாநிலம் ஆமதாபாத் அருகில் உள்ள, சபர்மதி ஆசிரமத்திலிருந்து சிறிய கிராமமான தண்டிக்கு மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகம் மேற்கொண்டார். இது தண்டி யாத்திரை என, அழைக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராக, வன்முறை யற்ற முறையில், காந்தியால் நடத்தப்பட்ட இந்த தண்டி யாத்திரை மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

இதுகுறித்து, 'டைம்ஸ்' தெரிவித்துள்ள செய்தியில், 'சத்தியாக்கிரகா என்றால், 'உண்மையான படை' என்று பொருள். பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தை உடைக்க உப்பு சத்தியாகிரகம் உதவியது.

இந்த வன்முறையற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, 80 ஆயிரம் இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்' எனத் தெரிவித்துள்ளது.

# உணவுப் பற்றாக்குறையால் புற்களைத் தின்று உயிர் வாழும் வடகொரிய மக்கள்

வடகொரியாவில் இலவசமாக வழங்கும் உணவுப் பொருள்கள் குறைக்கப்பட்டுள்ளதால், அந்நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் புற்களை சாப்பிட்டு உயிர் வாழும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து, வடகொரியாவின் பியோங் யாங்கில் உள்ள வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பு அலுவலகத்திற்கான, சுவிஸ் தொடர்பாளர் கதரினா ஜெல்வெஜர் கூறியதாவது: நாட்டுக்கு கிடைத்து வந்த நன்கொடைகள் குறைந்து, சர்வதேச அளவில் விலைவாசி மற்றும் இறக்குமதி மீதான செலவு அதிகரித்துள்ளதால் ஒரு தொழிலாளருக்கு, ஒரு நாளைக்கு வழங்கப்படும் உணவுப் பொருளின் அளவு 150 கிராமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதனால், சில பகுதிகளில், குறிப்பாக மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்கள், புல் மற்றும் மூலிகை இலைகளைப் பறித்து சாப்பிட்டு, உயிர் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

மேலும், அணு ஆயுத உற்பத்தி தொடர்பாக வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளதால், வெளிநாட்டு உதவிகளும் குறைந்துள்ளன.

ஆனால், கடந்த மாதத்தில் வெறும் 11 ஆயிரம் தொன் [illegible] அனுப்பப்பட்டுள்ளன. இவ்வாறு ஜெல்வெஜர் கூறினார்.

# சீனாவில் கம்யூனிஸ் கட்சியின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம்

பீய்ஜிங், ஜூலை 1

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப்பட்டதன் 90ஆம் ஆண்டு விழாவை அந்தநாட்டு மக்கள் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர்.


சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டதன் 90 ஆம் ஆண்டு விழா தலைநகர் பீய்ஜிங் நகரில் தொடங்கியது . விழாவையொட்டி 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்துகொண்ட கலைநிகழ்ச்சிகள் நடந்தன. முன்னதாக விழாவை அதிபர் ஹூஜிந்தாபோ தொடக்கி வைத்தார்.

இதில் பிரதமர் வென்ஜியாபோ, மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் , நிர்வாகிகள் ,நிலைக்குழு உறுப்பினர்கள், நாட்டின் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். முக்கிய நிகழ்ச்சியான இன்று அதிபர், பிரதமர் ஆகியோர் உரையாற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் இடையேயான உதைபந்தாட்டத்தில் ஹென்றீஸ் சாவகச்சேரி இந்து, சம்பியன்கள்


இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி (ஆண்கள் பிரிவு)


சாவகச்சேரி இந்துக் கல்லூரி (பெண்கள் பிரிவு)

யாழ்ப்பாணம், ஜூலை 1

'சமபோஷ' நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தி வந்த 13 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் ஆண்கள் பிரிவில் இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரியும் சம்பியன்களாகின.

கடந்த புதன்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் சாவ கச்சேரி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து குளமங்கால் ஆர்.சி. வித்தியாலய அணி மோதியது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றியரசர் கல்லூரி அணி மோதியது.

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாட்டத்துக்கு பிரதம விருத்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாநகர சபை பொறியியலாளர் எஸ். கென் டஸ்ஷன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (ஜ-23)

## கிளிநொச்சி உதைபந்தாட்டம்: லக்கிஸ்ரார் அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 1

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டம் ஒன்றில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கால் இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியும் விளை பூமி விளையாட்டுக் கழக அணியும் மோதின.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ஜ-23)

## கிழக்கிலங்கைப் பல்கலையை வென்று சம்பியனானது யாழ். பல்கலைக்கழகம்

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியன் ஆனது.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஆரம்ப சுற்றில் கொழும்பு பல்கலைக்கழக அணியுடனான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது. கால் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி தென் கிழக்கு பல்கலைக்கழக அணியுடனான ஆட்டத்தின் போது 5:0 என்ற கோல்கணக்கிலும் அரை இறுதி ஆட்டத்தில் களனிப் பல்கலைக் கழகத்துடனான ஆட்டத்தின் போது 4:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி கிழக்கு பல்கலைக்கழக அணியுடன் மோதியது. யாழ். பல்கலைக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 பல்கலைக் கழக அணிகள் பங்குபற்றின. ( ஜ - 23)


யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் வீர,வீராங்கனை சார்பாக சத்தியப்பிரமாணம் செய்கிறார்கள். பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாருக்கு மேலதிக அரச அதிபர் திருமதி றூபினி வரதலிங்கம் நினைவுப் பரிசில் வழங்குகின்றார். (23)

## ஜொலிஸ்ரார், யாழ்.பல்கலை முதலாம் இடத்தைப் பெற்றன

### கே.ஸி.ஸிக்கு மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில்,ஜொலிஸ்ரார், பல்கலைக் கழக அணிகள் (25) சம புள்ளிகளை பெற்று முன்னிலையில் முதலாம் இடத்தில் உள்ளன.

கே.ஸி.ஸி.ஸி.அணி 19 புள்ளி களைப் பெற்று 2ஆம் இடத் திலும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி 16 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும்,சென்ற லைட்ஸ், பற்றீசியன்ஸ் அணிகள் தலா 15 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் இடத்திலும், சிறிகாமாட்சி அணி 13 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்திலும், யாழ்.ஜொனியன்ஸ் அணி 11 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும், ஸ்கந்தா ஸ்ரார், யூனியன்ஸ் அணிகள் தலா 10 புள்ளிகளைப் பெற்று 7 ஆம் இடத்திலும், மானிப்பாய் பரிஸ், திருநெல்வேலி கிறிக்கற் அணிகள் தலா 5 புள்ளிகளைப் பெற்று 8 ஆம் இடத்திலும், அரியாலை சென்றல், நியூஸ்ரார், ஸ்ரான்லி அணிகள் தலா 3 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்திலும் உள்ளன.

இந்த நிகழ்வில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை பெறும் அணிக்கு ஜோர்ஜ் லெப் ஸ்ரார் வெற்றிக் கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பரிசிலும் வழங்கப்படும்.

அத்துடன் இந்த நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று அணிகளும் 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் நடைபெற இருக்கும் முக்கோண சுற்றுப் போட்டிக்கு தகுதி பெறும்.

2010 ஆம் ஆண்டு இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக அணி 44 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தை அடைந்தமையால் ஜோர்ஜ் லெப் ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்தையும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக் கொண்டது. (ஐ)

## பெண்களுக்கான உதைபந்தாட்டம் மானிப்பாய் மகளிர் மாகாண சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயது பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாகாண சம்பியானது.

வவுனியா, புதுகுள மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய அணியும் மோதின. மானிப்பாய் மகளிர் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியும் மாதகல் சென். ஜோசப் வித்தியாலயமும் மோதின.கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வென்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது. (ஜ-23-86)

## மாகாண மெய்வன்மைப் போட்டி: வவுனியாவில் செவ்வாயன்று ஆரம்பம்

பருத்தித்துறை, ஜூலை 1

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் மூன்று தினங்கள் வவுனியாவில் நடை பெறவுள்ளனன.

மாவட்ட மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம், 7ஆம் திகதிகளில் வவுனியா கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வெளி மாவட்டங்களிலிருந்து போட்டியில் கலந்து கொள்வதற்காக வருகை தரவுள்ள மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆண்கள் ,வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும் பெண்கள் , வவுனியா சைவப் பிரகாச மகா வித்தியாலயத்திலும் தங்க வைக் கப்படவுள்ளனர். (ஜ- 190)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பாடசாலைகளுக் கிடையில் ருவென்ரி/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியும் நெல்லியடி மத்தியமகா வித்தியாலய அணியும் மோதவுள்ளன. (ஜ- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்குகிறது இந்தியா!

பார்படோஸ் டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் பதிலடி கொடுத்தனர். துடுப்பாட்டத்தில் லக்ஸ்மன் (85) கைகொடுத்தார்.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ளது. முதல் டெஸ்டில் வென்ற இந்திய அணி 1-0 என்று முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் பார்படோசில் நடக்கின்றது.

முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பெரும் தொல்லை கொடுத்தனர். இதனால் முகுந்த் (1), அனுபவ டிராவிட் (5), முரளி விஜய் (11) நிலைக்கவில்லை. விராத் ஹோக்லியும் டக்கானார். இதன் பின்னர் இணைந்த லக்ஸ்மன், ரெய்னா ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டனர். ஐந்தாவது விக்கெட்டுக்கு 117 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், டெஸ்ட் அரங்கில் நான்காவது அரைச்சதம் (53) கடந்த ரெய்னாவும் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 50 ஆவது அரைசதம் கடந்த லக்ஸ்மன், தொடர்ந்து அசத்தினார். அணியை காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட தலைவர் டோனி (2) கைவிட்டார். ஹர்பஜன் (5) இந்த முறை நிலைக்கவில்லை. 85 ஓட்டங்கள் எடுத்த லக்ஸ்மன், பிஷூ சுழலில் வீழ்ந்தார். அபிமன்யு மிதுன், 'டக்' அவுட்டாகி ஏமாற்றினார். பிரவீன் குமார் தன் பங்குக்கு 11 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி முதல் இன்னிங்சில் 201 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இஷாந்த் சர்மா (1) ஆட்டமிழக்காமல் இருந்தார். மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் எட்வர்ட்ஸ், ராம்போல், தேவேந்திர பிஷூ ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அட்ரியன் பரத், சிம்மன்ஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். இந்த முறை இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் பிரவீன்குமார், இஷாந்த் சர்மா மற்றும் அபிமன்யு மிதுன் ஆகியோர் போட்டுத் தாக்க ஆரம்பித்தனர். இஷாந்த் வேகத்தில் முதலில் பரத் (3) வெளியேறினார். சிம்மன்ஸ் (2), பிரவீனுக்கு பலியானார். டரன் பிராவோவை (9), அபிமன்யு மிதுன் திருப்பி அனுப்பினார். முதல் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, முதல் இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களுக்கு 30 ஓட்டங்கள் எடுத்து, 171 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது.

நேற்று முன்தினம் இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. மழை காரணமாக ஆட்டம் 45 நிமிடம் தாமதமாக ஆரம்பமாகியது. இஷாந்த் சர்மா வேகப்பந்து வீச்சில் மிரட்டினார். இவரது ஓவரின் 4 ஆவது பந்தில் 'நைட் வோட்ச்மன்' பிஷூ (13) பவிலியன் திரும்பினார். இதே ஓவரின் கடைசி பந்தில், 18 ஓட்டங்கள் எடுத்திருந்த சர்வானையும் ஆட்டமிழக்கச் செய்தார்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்ட போது, மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களுக்கு 98 ஓட்டங்கள் எடுத்து, 103 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தது. சந்தர்போல் (20), சாமுவேல்ஸ் (21) களத்தில் இருந்தனர். இந்தியாவின் இஷாந்த் சர்மா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

### ரெய்னாவுக்கு அபராதம்

பார்படோஸ் டெஸ்டில் பிஷூ பந்தை எதிர்கொண்ட ரெய்னா பிடி எடுப்பு மூலம் ஆட்டமிழந்ததாக நடுவர் அறிவித்தார். இதை ஏற்று உடனடியாக வெளியேறாமல் இவர் தனது எதிர்ப்பை தெரிவித்தார். இது ஐ.சி.சி விதிமுறையை(2.1.3) மீறிய செயல் என்பதால், ரெய்னாவுக்கு போட்டிக்கட்டணத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இதுகுறித்து ஆட்ட மத்தியஸ்தர் கிறிஸ் பிராட் கூறுகையில், நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தவுடன் பந்து துடுப்பில் படவில்லை என்று மறுப்பு தெரிவித்தார் ரெய்னா. பின்னர் வானத்தை பார்த்த அவர், மீண்டும் தலையசைத்துக் கொண்டே வெளியேறினார். இவரது இந்தச் செயல் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இது கிரிக்கெட் விதிகளை மீறிய செயல் என்பதால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது, என்றார்.

முதல் டெஸ்டில் டரல் ஹார்ப்பர் ஏமாற்றினார். இந்த முறை இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தானின் ஆசாத் ராப் மோசமான தீர்ப்பு வழங்கி ஏமாற்றுகிறார். ரெய்னாவின் இடுப்பில் பந்து பட்டதுக்கு ஆட்டமிழப்புக் கொடுத்து, இவர் வெறுப்பேற்றினார். 85 ஓட்டங்கள் எடுத்த லக்ஸ்மன் சர்வதேச டெஸ்ட் அரங்கில் 8000 ஓட்டங்கள் எடுத்த, நான்காவது இந்திய வீரர், உலகளவில் 22 ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். இதற்கு முன்னர் இந்தியாவின் சச்சின் (14,692) டிராவிட் (12,220), கவாஸ்கர் (10,122) ஆகியோர் இந்த இலக்கை எட்டியுள்ளனர். டெஸ்ட் அரங்கில் 50 ஆவது அரைசதம் அடித்த மூன்றாவது இந்திய வீரர் லக்ஸ்மன் ஆவார். இதற்கு முன் சச்சின், டிராவிட் தலா 59 அரைசதங்கள் அடித்துள்ளவர்.

### ஹார்ப்பர் விலகல்

முதல் டெஸ்டில் இந்திய வீரர்களுக்கு பாதகமான தீர்ப்புகளை வழங்கினார் டரல் ஹார்ப்பர் (ஆஸி). இதற்கு அணித்தலைவர் டோனி உள்ளிட்ட பல வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனிடையே மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான நடுவர் பணியில் இருந்து ஹார்ப்பர் விலகிக் கொண்டார்.

# மாயமாய் போனதெங்கே?

கடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது, ஆயிரக்கணக்கான ரிக்கெற்றுகள் எவ்வாறு கறுப்புச் சந்தைக்கு அல்லது வி.ஐ.பிகள், பொலிஸார், மற்றும் அரசியல்வாதிகளின் கைகளுக்குச் சென்றன என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) உறுதியளித்துள்ளது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ரிக்கெற்றுகள் கையாளப்பட்ட விதம் குறித்து விமர்சிக்கும் அறிக்கையொன்று ஹொங்கொங்கில் நடைபெறும் ஐ.சி.சி. நிறைவேற்றுக்குழு மாநாட்டுக்குக் கிடைத்துள்ளது. அதைடுயடுத்து, ஐ.சி.சி. இந்த உறுதியை வழங்கியுள்ளது.

ரிக்கெற் விற்பனை மற்றும் அரங்குகளின் நிர்மாணங்கள் தொடர்பான குறைபாடுகளை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. இதேவேளை உலகக்கிண்ணப் போட்டிகளின் போது குறிப்பாக இறுதிக்கட்டங்களில் ரிக்கெற் விநியோகத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாக வெளியான அறிக்கைகள் குறித்து தாம் அசௌகரியத்துக்குள்ளானதாக ஐ.சி.சி. சிரேஷ்ட அதிகாரிகள் சிலர் தனிப்பட்ட ரீதியில் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த விவகாரம் ஐ.சி.சி. பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோகார்ட்டை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்குவதாகும். பாகிஸ்தான் வீரர்கள் மூவர் ஸ்பொட் பிக்ஸிங் குற்றச்சாட்டுக்கு உள்ளான நிலையில், ஊழல் அற்ற உலகக்கிண்ணப் போட்டிகளை நடத்துவதாக லோகார்ட் வாக்குறுதியளித்திருந்தார்.

ஆனால், வீரர்களுக்குப் பதிலாக அதிகாரிகள் மீது கவனம் திரும்பியிருக்கும் நிலையே இப்போது ஏற்பட்டுள்ளது. இதேவேளை, முக்கிய ஐ.சி.சி. சுற்றுப்போட்டிகளை நடத்தும் அரங்குகள் போட்டி நடைபெறுவதற்கு 6 மாதங்களுகக்கு முன்னரே பூரணமாக தயாராக இருக்க வேண்டும் என்று ஐ.சி.சி. நிறைவேற்றுச் சபை தெரிவித்துள்ளது. கடந்த உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி கொல்கத்தாவிலிருந்து பெங்களூருக்கு கடைசி நேரத்தில் மாற்றப்பட்டது. இதனால் நூற்றுக்கணக்கான இங்கிலாந்து ரசிகர்கள் தமது பயணத்திட்டத்தை மாற்றுவதற்காக மேலதிக செலவை எதிர்கொள்ள நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (15)

# வென்றது அமெரிக்கா



பெண்கள் உலகக் கிண்ண கால்பந்து தொடரின் லீக் போட்டியில், அமெரிக்க அணி 2-0 என்ற கோல் கணக்கில் வட கொரியாவை வீழ்த்தியது.

ஜேர்மனியில் பெண்களுக்கான 6 ஆவது உலகக் கிண்ண கால்பந்துத் தொடர் நடக்கின் றது. இதில், பிரேசில், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் 16 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று முன்தினம் 'சி' பிரிவில் நடந்த லீக் போட்டியில் அமெரிக்கா - வட கொரியா அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்தப் போட்டியின் முதல் பாதி முடிவில் இரு அணி வீராங்கனைகளால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

பின்னர் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட அமெரிக்க அணிக்கு லவுரன் செனி (54 ஆவது நிமிடம்), ராசல் புக்லர் (76 ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். இதற்கு வட கொரிய வீராங்கனைகளால் பதிலடி கொடுக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் அமெரிக்கா 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

### சுவீடன் வெற்றி

'சி' பிரிவில் நடந்த மற்றொரு லீக் போட்டியில் சுவீடன், கொலம்பியா அணிகள் மோதின. இதில் ஜெசிகா லாண்ட்ஸ்டிரோம் (57 ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுக்க, சுவீடன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (15)

# இனிப் புலம்பி என்ன பயன்...

நாம் சிறப்பாக பந்து வீசவுமில்லை சிறப்பாக துடுப்பெடுத்தாடவுமில்லை. இதுவே எமது தோல்விக்குக் காரணம், என்று இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திலக்கரட்ன டில்ஷான் கூறியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இங்கிலாந்துடனான முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 121 ஓட்டங்களால் தோல்வியுற்றது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே டில்ஷான் இவ்வாறு கூறியுள்ளார்.

'கடைசி இரு நாள்களும் வெயில் அடித்தது. ஆனால் ஆட்டம் நடைபெற்ற தினம் மழை பெய்தது.

இது இங்கிலாந்து வீரர்களுக்கு சாதகமாகிவிட்டது. அவர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அதிக ஓட்டங்களைக் குவித்தனர். எமக்கு இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி 230 ஓட்டங்களை அடைவது இலகுவானதாக இருக்கவில்லை.

அது கடினமான இலக்கு. எனினும் இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். அவர்கள் வெற்றிக்குத் தகுதியுடையவர்கள். ஓர் அணி என்ற வகையில் இன்னும் எமக்கு நம்பிக்கை உள்ளது' என்று டில்ஷான் கூறினார்.

தனது கடைசி சர்வதேச ஆட்டத்தில் விளையாடிய சனத் ஜெயசூரிய 2 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார். தனது 445 ஒருநாள் சர்வதேச போட்டியுடன் ஓய்வு பெறும் சனத் ஜெயசூரிய குறித்து டில்ஷான் கருத்துத் தெரிவிக்கையில், சனத் 22 வருடங்களாக இலங்கை கிரிக்கெட் டிற்கு சிறந்த சேவை யாற்றியுள்ளார். உலக கிரிக்கெட்டில் அவர் மாற்றத்தை ஏற்படுத்தினார் - எனக் கூறினார். (15)



- பெடரர் -

# அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தரும் விம்பிள்டன்

விம்பிள்டன் ரெனிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். பெண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி முன்னேறியது.

லண்டனில், 125 ஆவது விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் தொடர் நடக்கின்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் காலிறுதியில் தரவரிசையில் 3 ஆவது இடத்திலுள்ள பெடரர், பிரான்சின் சோங்காவை எதிர்கொண்டார். இதன் முதல் இரண்டு செற்களை 6-3, 7-6 என்று பெடரர் வென்றார். எழுச்சி பெற்ற சோங்கா, அடுத்த இரு செற்களை 6-4, 6-4 என்று கைப்பற்றினார். வெற்றியாளரை முடிவு செய்யும் ஐந்தாவது செற்டில், அசத்திய சோங்கா 6-4 என்று வெற்றி பெற்றார்.

மூன்று மணி நேரம், 8 நிமிடங்கள் நடந்த போராட்டத்தின் முடிவில் 6-3, 7-6, 4-6, 4-6, 4-6 என்ற செற் கணக்கில், பெடரர் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். விம்பிள்டன் தொடரின் அரையிறுதிக்கு சோங்கா தகுதி பெறுவது இதுவே முதன் முறை.

மற்றொரு போட்டியில் செர்பியாவின் டோகோவிச், ஆஸ்திரேலியாவின் பெர்னார்டை 6-2, 3-6, 6-3, 7-5 என்ற கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் உலகின் முதல்தர வீரர் ஸ்பெயினின் நடால், அமெரிக்காவின் மார்டி பிஷ்சை 6-3, 6-3, 5-7, 6-4 என்ற செற் கணக்கில், வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தார்.

பெண்கள் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி, ஸ்பெயினின் நூரியா, அரன்ட்ஜா ஜோடியை சந்தித்தது. இதன் முதல் செற்டை 6-3 என்று ஸ்பெயின் ஜோடி வென்றது. இதையடுத்து இரண்டாவது செற்டில் எழுச்சி பெற்ற சானியா ஜோடி, 6-4 என்று கைப்பற்றியது. தொடர்ந்து நடந்த மூன்றாவது மற்றும் கடைசி செட்டை, சானியா ஜோடி 7-5 என்று தன்வசப்படுத்தியது. முடிவில் 3-6, 6-4, 7-5 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்ற சானியா மிர்சா, வெஸ்னினா ஜோடி, விம்பிள்டன் தொடரில் முதன் முறையாக அரையிறுதிக்கு முன்னேறியது.

பெண்கள் ஒற்றையர் காலிறுதியில் தரவரிசையில் 4 ஆவது இடத்திலுள்ள பெலாரசின் விக்டோரியா அசரென்கா, ஆஸ்திரியாவின் தமிரா பகை எதிர்கொண்டார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அசரென்கா, 6-3, 6-1 என்ற நேர் செற்டில் எளிதாக வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, பல்கேரியாவின் பிரன்கோவாவை சந்தித்தார். இதில் 6-3, 5-7, 6-2 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்ற பெட்ரா, அரையிறுதிக்குள் நுழைந்தார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் அலுவலக
உதவியாளராகக் கடமையாற்றும்
பூதத்தம்பி ரஜீவனின் அன்புத் தந்தை

### சிவசம்பு பூதத்தம்பி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர். (சி/1476)

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2235 திகதி 29-06-2011

ஆங்கில எழுத்திற்கும் C

வெற்றி எண்கள் **57 59 61 70**

போனஸ் இல: **21**

ஜக்பொட் பரிசு ரூ. **11,864,025/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 211839 | 20/- | 4,236,780/- |
| 2 இல | 15113 | 100/- | 1,511,300/- |
| 3 இல | 324 | 1,000/- | 324,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8400 | 40/- | 336,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 619 | 1,000/- | 619,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,864,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 10073 | 100/- | 1,007,300/- |
| 2 இல + போனஸ் இல | 465 | 500/- | 232,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 422 | 200/- | 84,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 20 | 1,500/- | 30,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | 247293 | | 10,001,280/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 336 | | 267,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 247629 | | 10,268,780/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஜூலை 02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
**ரூ. 12,442,175/-**

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

ரத்தரங் வரம

வெற்றி எண்கள் **15 27 34 69**

ஆங்கில எழுத்திற்கும் A

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 335 | 500/- | 167,500/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு 19 | - |

**இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 21 தங்க நாணயங்கள்**

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7


## மீசாலை வீரசிங்கம் ம.வியின் நவோதயா வார நிகழ்வுகள்

### இன்று முதல் 7ஆம் திகதி வரையில்

தென்மராட்சி, ஜீலை 1

தென்மராட்சி கல்வி வலயத்தின் நவோதயா பாடசாலையான மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 7ஆம் திகதி வரை நவோதயா வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி வித்தியாலயத்தின் பதில் அதிபர் திருமதி வா. சந்திரதேவன் தலைமையில் விசேட நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப நாள் நவோதயா வாரத்தின் நோக்கம் பற்றி வித்தியாலய பகுதித் தலைவர், ஆசிரியர், த.தவேந்திரனின் உரையும், இரண்டாம், மூன்றாம் நாள்கள் பாடசாலை சமுகத்தினரின் சிரமதானப் பணிகளும், நான்காம் நாள் சுற்றாடல் விழிப்புணர்வு கருத்தரங்கினை ஆசிரியர் திருமதி வே.பரஞ்சோதியும், ஐந்தாம் நாள் சுகாதாரம், போசாக்கு பற்றிய விழிப் புணர்வு கருத்தரங்கினை மீசாலைப் பிரிவு சுகாதாரப் பரிசோதகர் டி. தளிர் ராஜும் நிகழ்த்துவார்.

ஆறாம் நாள் கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்பம் பற்றி ஆசிரிய ஆலோசகர் ந. பாக்கியநாதன் உரையாற்றுவார் அன்றைய தினம் கணித, விஞ்ஞான, தகவல் தொழில்நுட்ப கண்காட்சியும் இடம் பெறும்.

ஏழாம் நாள் கலை இலக்கிய நிகழ்வுகளும் பரிசில் வழங்கல் நிகழ்வுகள் இடம்பெறும். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஈழநேசன் கலந்து கொள்வார்.

(த-207)


## மரண அறிவித்தல்

### வீரகத்திபிள்ளை வேலாயுதபிள்ளை

(மெக்கானிக்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் மட்டுவில், வேரக்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வீ. வேலாயுதபிள்ளை (25.06.2011) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திபிள்ளை - அன்னபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் அதிசயமலரின் (குஞ்சு) அன்புக் கணவரும் யோகநாதன் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, கனகசுந்தரம், பகவதி ஆகியோரின் சகோதரனும் சுரேஸ், ரமேஸ் (பிரான்ஸ்), சுயந்தி, சயந்தி (கனடா), சுயந்தன் (சுவிஸ்), ஜெயந்தி (ஜெயா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் குகேந்திரநிதி (நிதி), ஜிந்தினி (பிரான்ஸ்), முருகானந்தன், மனோகரன் (கனடா), சுகந்தினி (சுவிஸ்), நாகேந்திரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.07.2011) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகேந்திரன், ஜெயா.
வேரக்கேணி லேன்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(5355)

91, CRAW FORDST, NARKHAM
ONTARIO, CANADA.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1937
★
01
★
04



மறைவு
2010
★
07
★
11

### கார்த்தி பூபாலசிங்கம்

இருந்தாலும் இறந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர்போல யாரென்று ஊர் சொல்லவேண்டும்
வாழும் வாழ்க்கைக்கு ஓர் உதாரணமாய் - சேர்ந்து
வாழ்வோர்க்கு ஓர் வழிகாட்டலாய்
பண்புக்கு உறைவிடமாயும்
பாசத்துக்கு நிகரில்லாதுமிருந்தீரே
நாம் வாழும் மீதி வாழ்வுக்கு துணை வராமல்
எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்றீரே
தேடுகின்றோம் உம்போல் ஓர் ஆறுதலை
தேசமெங்கும்
ஆனால் கிட்டவில்லை அது எமக்கு இன்றுவரை

417, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடிநிற்கும்
(5348) குடும்பத்தினர்.



## ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை - அறிவித்தல்



தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ் - கொழும்பு போக்குவரத்து பஸ் கட்டணம் பின்வருமாறு அறவிடப்படும்.

### அதி சொகுசு பஸ் கட்டணம்

யாழ் → வவுனியா →
அனுராதபுரம் → புத்தளம்

| | |
|---|---|
| ஊடான பயணத்துக்கு | 1,120.00 |
| ஆசனப் பதிவுக் கட்டணம். | 100.00 |
| | 1,220.00 |

யாழ் → வவுனியா →
தம்புள்ளை → குருநாகலை

| | |
|---|---|
| ஊடான பயணத்துக்கு | 1,140.00 |
| ஆசனப் பதிவு | 100.00 |
| | 1,240.00 |

### சொகுசு பஸ் கட்டணம்

யாழ் → வவுனியா →
அனுராதபுரம் → புத்தளம்

| | |
|---|---|
| ஊடான பயணத்துக்கு | 760.00 |
| பதிவுக் கட்டணம் | 100.00 |
| | 860.00 |

யாழ் → வவுனியா →
தம்புள்ளை → குருநாகலை

| | |
|---|---|
| ஊடான பயணக் கட்டணம் | 780.00 |
| ஆசனப் பதிவு கட்டணம் | 100.00 |
| | 880.00 |

புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடும்.
காப்புறுதி வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.
அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு, இதுவரை எமக்கு
ஆதரவு வழங்கியதைப் போன்று தொடர்ந்தும் ஆதரவு
வழங்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1481)



## நீங்கா நினைவலைகள்

தோற்றம்
1932
★
03
★
25



மறைவு
2006
★
12
★
03

தோற்றம்
1933
★
12
★
22



மறைவு
2009
★
06
★
22

### சிவலை வல்லிபுரம்

திதி:- சதுர்த்தசி.

### திருமதி வல்லிபுரம் மகேஸ்வரி

திதி:- அமாவாசை.

மாதங்கள் பத்துமடி சுமந்து எம்மை பெற்ற தாய் தந்தையரே
மண்ணுலகில் நீங்கள் இல்லை மகிழ்ந்து உறவாட
மண்ணோடு மடிந்து விண்ணோடு சேர்ந்து
இன்றோடு முடிந்தது மூன்றாண்டு ஆனதே!
உங்களின் விசேட வேண்டுதல் நாள் - எங்களுக்கு
விட்டு விசேஷமாக மாறியதோ.
கரம் கொடுக்கும் உங்களின் நினைவுகளோடு - நாங்கள்
கடைசி வரை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..

கரும்பியோடை, சமரபாகு, வல்வெட்டித்துறை. (126) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு நஷ்டத்தைச் சமாளித்துக் கொண்டுதான் எரிபொருள்களை மக் களுக்கு வழங்குகின்றது என்றும் எரிபொருள்களின் விலை சர்வதேச சந்தையில் உயருகின்ற எல்லா சந்தர்ப்பத்திலும் இங்கு அரசு விலையை அதிகரிப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, தரக்குறைவான பெற்றோல் விநியோகிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை மறுத்த அமைச்சர், ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் சேமித்து வைக்குமிடத்தின் அடியில் படிந்திருந்தபடிவு பெற்றோலுடன் கலந்ததே இந்த நிலைக்குக் காரணம் என்றார். (ஒ-சி)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டிலான் பெரேராவும் அன்று யாழ்ப்பாணம் வருகின்றார். கொரிய நாட்டுக்கு வேலை வாய்ப்புக்கான பயிற்சி வகுப்பை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார். (ஒ-ஐ)

## மக்கள்வங்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதியான ஞாபகார்த்த முத்திரை, 1000 ரூபா பெறுமதியான ஞாபகார்த்த நாணயக்குற்றி, ஞாபகார்த்த மலர் என்பவற்றை வெளியிட்டு வைப்பார். (த-10)

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் இடம்பெறுகின்றன. இதற்கென அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்கும் செயற்பாட்டில் அரசு இப்போது ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தீர்வு வழங்குவதை மேலும் தாமதப்படுத்தும் ஒன்று என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இக்குற்றச்சாட்டை நாம் மறுக்கின்றோம்.

அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பாக நாட்டில் அன்று இருந்த நிலைமை வேறு. இன்று இருக்கும் நிலைமை வேறு. தற்போதைய நிலைமைக்கு ஏற்பவே நாம் தீர்வை முன்வைக்க வேண்டும்.

தற்போதைய நிலைமையின்படி தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று எவரும் இல்லை. வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் ஒரு கட்சி மாத்திரம் தமிழர்களின் வாக்குகளைப் பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்குக ளைப் பெற்றது. எமது கட்சியும் பெற்றது. அந்த வகையில் பார்க்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க முடியாது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளும் மக்களின் பிரதிநிதிகள்தான். அந்த வகையில் அரசியல் தீர்வு விடயத்தில் நாம் மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் கருத்துகளை உள்ளடக்கியே தீர்வுத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

அதற்காகத்தான் நாம் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்கின்றோம். அப்போது பெறப்படும் தீர்வு அனைத்துத் தரப்பினரும் ஏற்கக்கூடியதாக அமையும்.

நாம் அரசியல் தீர்வு வழங்குவது எமது மக்களுக்கு அன்றி சர்வதேசத்துக்கு அல்ல. அவ்வாறெனில், தீர்வு தொடர்பில் நாம் இப்போது ஆரம்பித்திருக்கும் திட்டம்தான் சரியானது- என்றார். (ஒ-சி)

## இந்தியா உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன இனப் பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பது காலத்தை இழுத்தடிக்கும் செயல் எனத் தெரிவித்து, அதைப் பகிஷ்கரிக்க முடிவு செய்திருப்பது அரசுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அவற்றைப் பொருட்படுத்தாமல் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து, அக்குழு முன்வைக்கும் யோசனையை நடைமுறைப்படுத்துவேன் என்று ஜனாதிபதி பிடிவாதமாக நிற்கின்றார் என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் ஜனாதிபதியின் யோசனையானது ஒட்டுமொத்த இலங்கையரையும், இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதற்கான முயற்சியாகும்.

தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கும் மேலாக செல்லவும் தயார் என்று இந்தியாவுக்கு ஒருபக்கம் கூறிவிட்டு, எனினும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்று மறுபுறம் தெரிவித்த அரசு இனப்பிரச்சினை விடயத்திலும் இரட்டை வேடம் போடுகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கடந்த காலங்களில் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. குறிப்பாக சிரேஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தலைமையிலான சர்வகட்சிக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்தார். அவ்வாறு நியமிக்கப்பட்ட சர்வகட்சிக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட நேரத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு உள்ளது என்று அரசு அறிவித்திருந்தது. எங்கே அந்தத் தீர்வுத்திட்டம் என்று இப்போது கேள்வி எழுப்பினால் அரசு வாய் திறக்காமல் உள்ளது.

எனவே, ஜனதிபதி நியமிக்கத் தீர்மானித்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நாங்கள் எதிர்க்கின்றோம் - என்றார் திஸ்ஸ அத்தநாயக்க. (ஒ-சி)

### யாழ். கந்தர்மடம், அரசடி வீதி
### அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
### ஆனி மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2011

கொடியேற்றம் 01.07.2011 முற்பகல் 10 மணி தொடர்ந்து 15 தினங்கள் காலை, மாலை உற்சவங்கள் நடைபெறும்.
தேர்த்திருவிழா 14.07.2011 வியாழக்கிழமை
தீர்த்தம் 15.07.2011 வெள்ளிக்கிழமை
கப்பல் திருவிழா 16.07.2011 சனிக்கிழமை
வைரவர் சாந்தி 17.07.2011 ஞாயிற்றுக்கிழமை

மஹோற்சவ பிரதம குரு
சிவாச்சார்ய இளவரசு சக்தி கிரியா வியாசர்
சிவஸ்ரீ சிவ கமல்ராஜ்குருக்கள்
(பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும் வண்ணை
ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)
திருவிழா உபயகாரர்களும்
அம்பாளின் அடியார்களும் ஆதீன கர்த்தாவும்.

## மரண அறிவித்தல்கள்

### மேரி மெக்டெலின்



பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மெக்டெலின் (பொண்றோஸ்) நேற்று (30.06.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனவல் யோசப் (விசுவாசம்) - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பெனடிற் சதானந்தம் (டோனாஸ்) மற்றும் அன்ரனிசிறில், அன்ரனி விக்ரர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*38/1, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(5349)
தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னராஜா யோகராஜா



யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் கிரிமிலின் பிசற்றை (LE KREMILIN BICETRE) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராஜா யோகராஜா 28.06.2011 செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராஜா - மனோன்மணி தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சுந்தரம்மா தம்பதியரின் மருமகனும் யோகலட்சுமியின் பாசமிகு கணவரும் சிவனேஸ்வரி, மாணிக்கராஜா, மகாதேவா, ஆனந்தராஜா, கமலேஸ்வரி, விமலேஸ்வரி, சுந்தரராஜா, சற்குணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேந்திரநாதன், செல்வராணி, ரங்கநாயகி, பாரதி, ராதாகிருஷ்ணன், தில்லைநடராஜா, ரஞ்சினி, லலிதா, அன்னலட்சுமி, காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் பாக்கியலட்சுமி, சிறிஸ்கந்தராஜா, காலஞ்சென்ற நித்தியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் இராஜரட்ணம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கனகசபாபதி, தனலட்சுமி, ஜெயராஜசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.07.2011) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன் - சி.மகாதேவா
55/5, பழம்றோட் லேன், கந்தர்மடம்.
சகலன் - க.இராஜரட்ணம், பா.கனகசபாபதி
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் J/104 கந்தர்மடம் தென்.மேற்கு)
44, புகையிரத வீதி, கந்தர்மடம்
(5338)


### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்துக்கு நல்லூர், பிறவுண் வீதி, திருநெல்வேலி பல்கலைக்கழகத்துக்கு அண்மித்த பகுதிக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: 0715364850

### தவறிவிட்டது

கௌரிதேவி சச்சிதானந்தம் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல (397241700V) தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தால் தயவு செய்து கேமவாசா துர்க்காபுரம் தெல்லிப்பழை என்னும் விலாசத்துக்கு அனுப்பி விடவும் அல்லது கீழ்க்காணும் T.P யுடன் தொடர்பு கொள்ளவும். 0774280858

### வீடு வாடகைக்குண்டு

கிளிநொச்சியில் A-9 வீதிக்கு மேற்கே சுமார் 1½ Km தூரத்தில் வீடு வாடகைக்கு உண்டு. NGO's மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மட்டும்.
தொடர்புகளுக்கு: 0775302230

### காணி விற்பனைக்கு

நீர்வேலி அரச கேசரி பிள்ளையார் கோயிலுக்கு பின் வீதியில் குடியிருப்புக்கு உகந்த நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777425888, 0718132356, 0776111108

BIT @ ESOFT
The Leader in Professional ICT Education

புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன இன்றே இலங்கையின் முதல்தர நிறுவனமான எம்முடன் இணையுங்கள்

Call @ 077 3099308
021 2224142

ESOFT Computer Studies
No. 166/3, Navalar Road,
Jaffna

நெல்லியடி 021 2264940


### யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் - 2011

தலைவர்: திரு.ந.சுப்பிரமணியம்
காலம்: *03.07.2011* ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
இடம்: மகாதேவன் மண்டபம்

அங்கத்தவர்கள் அனைவரும் உரிய நேரத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ந.சுப்பிரமணியம்
தலைவர்.
செ.செல்வகிரீசன்
செயலாளர்.
(சி/1485)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக (J/121, J/122) கடமையாற்றும் திருமதி யோகலட்சுமி கிரிதரனின் அன்புத் தாய்

### திருமதி நாகேந்திரம் சத்தியபாமா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
நல்லூர்.
நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் திருநாவுக்கரசு சாஜாதேவி

மாதமொன்றானாலும் ஆறவில்லை
உமை பிரிந்த சோகம்
எமைதவிக்க விட்டு எங்கே நீர் சென்றீர்
ஆண்டவனை வேண்டினோம்
உமதுயிரை காக்கவென
எமைதவிக்கவிட்டு உம்முயிரைபறித்துச்சென்றான்
உமதன்பை மறவாது தவிக்கின்றோம் நாமிங்கு.

01.06.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 29.06.2011 கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*ராமர் கோயிலடி,*
*பட்டகாடு, வவுனியா.*
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமச்சந்திரன் கலாநந்தினி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி இராமச்சந்திரன் கலாநந்தினி நேற்று (30.06.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கனகஇலட்சுமி தம்பதியரின் மகளும் துஸ்யந்தன், பிரசன்னா, நதீசன், காயத்திரி, சந்திரலேகா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியது இந்து மயானத்துக்கு எடுத்தச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* தகவல்: **குடும்பத்தினர்.**

### நடராசா யோகராஜா (அப்பன்)

*(லங்கா சிமெந்து லிமிட்டெட் முன்னாள் ஊழியர்)*



பலாலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா யோகராஜா நேற்று (30.06.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற நடராசா மற்றும் நாகம்மா தம்பதியரின் மருமகனும் குகனேஸ்வரியின் அன்புக் கணவரும் நிசாந், பிரசாந், ஜனனி, கிரிசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*1ஆம் ஒழுங்கை,*
*உரும்பிராய் சந்தி.* (5370) (27) *தகவல்:* **குடும்பத்தினர்.**

## கருத்தரங்கு

வெளிநாட்டில் உயர்கல்வி வாய்ப்பைப் பெறுதவற்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று தனியார் நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொண்டு விசா தொடர்பான சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### லியா அருள் ஞானராஜ்



நெல்லியடி, கரவெட்டி, விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த லியோ அருள் ஞானராஜ் (28.06.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுவாமிநாதன் (இளைப்பாறிய பதிவு வைத்திய அதிகாரி R.M.O.)- ஞான சௌந்தரி தம்பதியரின் ஏக புதல்வனும் லியோனி (அமெரிக்கா) டெனீசியா (வவுனியா செக்கட்டிப் புலவு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரியதர்சன் (அமெரிக்கா), ராம்நாத் (வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் சொரூபன், நிரூபன் (அமெரிக்கா), பவீஸ்னன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (02.07.2011) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஞான நிவாஸ்'
கேணியடி, கரவெட்டி. தகவல்: **ம.சுவாமிநாதன்** (தந்தை)

### வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(முன்னாள் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், மாதகல் மேற்கு, மாதகல்.)



பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை சங்கானையை வசிப்பிடமாகவும் மாதகல் மேற்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் நேற்று (30.06.2011) வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்க்கார மயில்வாகனத்தின் பாசமிகு சகோதரரும், தனலட்சுமி, அன்பழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன் (பண்.பரிஷ் ப.நோ.கூ.சங்கம்) கலைச்செல்வி(ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனும், திருமதி மாலதி வசீகரன் (யா/வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை) நிரஞ்சன் (சுவிஸ்), கயானிகா (ஜேர்மனி), அஜின் (ஜேர்மனி), கபிஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.06.2011) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரைச்சி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*சங்கானை.* (5365) (27) தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி பேரம்பலம் மகேஸ்வரி



ஏழாலை மத்தியைச் சேர்ந்த பேரம்பலம் மகேஸ்வரி நேற்று (30.06.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுவில் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற பேரம்பலத்தின் அன்பு மனைவியும், ஞானசேகரம், ஞானராசா, வசந்தராணி, மல்லிகாதேவி, உதயராணி, உதயமலர், ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரகுமார், ராசகுலசிங்கம், பரமதாஸ், தர்மராசா, சிறிகாந்தராணி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு மாமியும், தங்கமணி, குமாரசிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை நன்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

*1 ஆம் கட்டையடி*
*ஏழாலை மத்தி, ஏழாலை.* (3566) (27,24) தகவல்: குடும்பத்தினர்.

### வல்லிபுரம் மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்)



கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் 239/1, மணிக்கூட்டு கோபுர ஒழுங்கை, யாழ்ப்பணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மயில்வாகனம் நேற்று (30.06.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (ஹொலண்ட்), சசிகலா, மோகன் (பிரான்ஸ்), விஜிகலா (பிராந்திய கணக்கீட்டு காரியாலயம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, செல்வராஜா (சிற்றிஸ்ரார்), சிவகுமார் (துர்க்கா ரேட்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சித்தார்த்தன், ரம்மியா, அபிநயா (சித்த மருத்துவத்துறை, 2 ஆம் வருடம்), ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*239/1, மணிக்கூட்டுக் கோபுர ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* தகவல்: குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 . 06 . 1928 | 01 . 06 . 2011 |

### அமரர் வேலுப்பிள்ளை செல்லையா

கடந்த 01.06.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (01.07.2011) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*66/4, இந்து மகளிர் வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (5364) - **குடும்பத்தினர்.**


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
*PHYSICS - 2013 A/L*
நிலையியல்
ஆரம்பம்:- 02.07.2011
SAT, SUN:- 6.15-7.15AM.
BY- K. SELVAN B.Sc. (Hons)

SLAS வகுப்புகள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் விசேட பரீட்சைக்கானது
★பொது உளச்சார்பு ★பொது அறிவு ★முகாமைத்துவ உளச்சார்பு
★ கட்டுரையும் சுருக்கமும் ஆரம்பம்:-ஞாயிறு (3/7) பி.ப. ஒரு மணி. ஒவ்வொரு ஞாயிறும் 1மணி தொடக்கம் 5 மணி வரை.
*யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு,*
*யாழ். போதனா வைத்தியசாலை எதிரே.*

தவறிவிட்டது

உயர்ரக ஜேர்மன் செப்பேட் இன 8 மாதங்கள் நிரம்பிய 1½ அடி உயரமுடைய நாய் கடந்த 28.06.2011 திகதி அன்று நல்லூர் கோயில் பிரதேசத்தில் இருந்து காணாமல் போய்விட்டது.
பெயர்: ராஸ் (TASS) சகலருடனும் இயல்பாக பழகும் சுபாவமுடையது.
நிறம்: உடல் கறுப்பு நிறமும் முகத்திலும் காலிலும் பிறவுண் நிறமுடைய புள்ளிகளும் காணப்படும்.
கண்டுபிடித்து தருபவர்களுக்கு ரூபா 10,000/- சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புக்கு: 0759184159, 0718723848 (5344)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழிற்துறைக் கணக்காளராகப் பணியாற்றுவதற்கு
**AAT (Sri Lanka)**
**Foundation, Intermediate & Final**
**Medium:- English & தமிழ்**
க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். ஆரம்பம் 02.07.2011

**Certificate Course in English**
Six Batches have Successfully completed the course. 7th Batch will commence on 08.07.2011
**Day Classes** : Monday & Friday
**Weekend Classes** : Saturday & Sunday

**SPOKEN SINHALA COURSE**
**G.C.E O/L 2011** க்கான சிங்கள வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: **02.07.2011 (Saturday) 11 am**
For Further Details
Director
**Jaffna College Undergraduate Dept.**
(சி-1466) **464, Hospital Road, Jaffna.**

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
**VB.Net /ASP.Net /SQL Server**
ADO.Net
Database
DLLs
OOPs
Project
Don't MISs IT
Call me: 0776577359
Duration:2months
Rs.7500/=
MIS
A Professional Training
150 m

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
**Diploma in Mobile Phone Repairing**
**(Software & Hardware Repairing)**
(பல புதிய விடயங்களுடன்)
*(With Practical Electronic)*
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - 02/07/2011 நேரம் 10மணி காலம் 2 மாதங்கள் -
உங்கள் பதிவுகளை உடன் மேற்க்கொள்ளவும் !!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

Quick Learning Course
**Spoken English with Grammar**
Duration 1 Month Rs. 3000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
04-07-2011
Batch A : 09.00 AM - 01.00 PM
Batch B : 01.30 PM - 05.30 PM
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் உங்களுக்கு ஏற்ற நேர அட்டவணையை ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.